வடக்கின் முதல் நாளிதழ் – Estd 1959

Reg. No. : P . 1632

விலை ரூ. 30/=

# ஈழநாடு

Eelanadu ඊළනාඩු




மாருதி
Money Exchange (Pvt) Ltd.
இல.285, காலி வீதி,
வெள்ளவத்தை, கொழும்பு 06
T.P: 011 236 2086
இவ் அனைத்து சேவைகளையும்
இங்கு பெற்றுக் கொள்ளலாம்.
இல.390, ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
T.P: 021 221 4433
076 284 4443
MoneyGram — மணிகிராம் பணப்பரிமாற்றம்
Ria MONEY TRANSFER — றியா பணப்பரிமாற்றம்
WESTERN UNION MONEY TRANSFER — வெஸ்ரேண் யூனியன் பணப்பரிவர்த்தனை

Email : news@eelanadu.lk | மலர் : 04 | 05.06.2023 திங்கட்கிழமை | இதழ் : 178 | பக்கங்கள் : 16

## இராணுவத்தை பலப்படுத்த ஜனாதிபதி விரும்புகின்றார்?

கொழும்பு, ஜூன் 05

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இராணுவத்தை பலப்படுத்தவும் படைகளின் பிரதானி பதவிக்கு கூடுதல் அதிகாரங்களை வழங்கவும் விரும்புகிறார் என்று தகவல்கள் வெளியாகியுள்ளன.

இராணுவத் திட்டத்தின் பரந்தளவிலான எண்ணக்கருக்கள் ஏற்கனவே அமைச்சரவையால் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. சட்ட வரைவை உருவாக்க சட்ட வரைவாளர், அழைக்கப்பட வேண்டும் என்ற ஜனாதிபதியின் பரிந்துரைக்கு அமைச்சரவை அனுமதி அளித்துள்ளது.

இதன்படி, படைகளின் பிரதானிக்கான கூடுதல் செயல்பாடுகளாக பாதுகாப்பு செயலாளா

15

## 45 கோடி டொலர்கள் கடன் வழங்க உலக வங்கி இணக்கம் தெரிவிப்பு!

கொழும்பு, ஜூன்

வருட இறுதிக்குள் 45 கோடி டொலர்களை - நம் நாட்டு மதிப்பில் சுமார் 13 ஆயிரத்து 500 கோடி ரூபாயை இலங்கைக்கு வழங்க உலக வங்கி இணக்கம் தெரிவித்துள்ளது. ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடனான சந்திப்பை அடுத்தே இந்த நிதி உதவியை வழங்க தீர்மானித்துள்ளது.

இதன் அடிப்படையில், உலக வங்கியின் நிபந்தனைகளை இலகுவாக்கி 45 கோடி டொலர் நிதி உதவி பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

நிதி அமைச்சின் அதிகாரிகளுக்கும் உலக வங்கியின் பிரதிநிதிகளுக்கும் இடையில் நீண்ட நாட்களாக நிதி சந்தையின் ஸ்திரத்தன்மையை பாதுகாத்தல் மற்றும் நாட்டின் பொருளாதார நிலைகளை சாதகமான முறைமையின் கீழ் கையாளுதல் போன்ற விடயங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டு வந்தது.

இதன் அடிப்

15

## ரூ. 452 குறைந்தது லிட்ரோ எரிவாயு!

கொழும்பு, ஜூன் 05

நள்ளிரவு முதல் நடைமுறைக்கு வரும் வகையில் 12.5 கிலோ எடையுள்ள லிட்ரோ எரிவாயுவின் விலை 452 ரூபாயால் குறைவடைந்தது.

இதன்படி 12.5 கிலோ எடையுள்ள லிட்ரோ சமையல் எரிவாயு 3 ஆயிரத்து 186 ரூபாயாக நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

கொழும்பு தவிர்ந்த ஏனைய மாவட்டங்களில் இந்த விலையில் வேறுபாடு இருக்கும்.

மேலும், 5 கிலோ எடையுள்ள சமையல் எரிவாயு

15

# உண்மை, நல்லிணக்க ஆணைக்குழு 3 மாதத்தில் சட்டவரைவு இறுதியாகும்!

### வெளிவிவகார அமைச்சர் அறிவிப்பு



கொழும்பு, ஜூன் 05

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவுக்கான சட்ட வரைவு எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் இறுதி செய்யப்படும் என்று அரசாங்கம் அறிவித்துள்ளது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி இது குறித்து தெரிவிக்கையில்,

உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவை நிறுவுவதில் நாம் அதிகளவான சிரத்தையுடன் நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளோம். இதன் அடிப்படையில் அந்த ஆணைக்குழுவுக்கான சட்ட வரைவை தயாரிக்கும் நடவடிக்கைகளை எதிர்வரும் மூன்று மாதங்களுக்குள் நிறைவு செய்வதற்கு எதிர்பார்த்துள்ளோம்.

15

## 25 கோடி டொலரை இலங்கையில் முதலீடு செய்கிறார் பில்கேட்ஸ்!

### விவசாய மென்பொருளுக்காக

கொழும்பு, ஜூன் 05

25 கோடி டொலர் முதலீட்டில் நாட்டின் விவசாயத்துறையை தொழில் நுட்பமயமாக்குதல், சமூக பாதுகாப்பு, நிதி கட்டமைப்பு மற்றும் காலநிலை மாற்றம் போன்ற துறைகளை உள்ளடக்கிய திட்டத்தை முன்னெடுக்க பில் கேட்ஸ் நற்பணி மன்றம் முன்வந்துள்ளது. இதற்காக விசேட மென்பொருள் ஒன்றை உருவாக்கவும் அந்த நிறுவனம் தீர்மானித்துள்ளது.

நாட்டின் விவசாயத்துறையை மேம்படுத்தவும் நவீனமயமாக்கவும் மைக்ரோசொப்ட் நிறுவனத்தின் நிறுவுநர் தலைவர் பில் கேட்ஸின் நற்பணி மன்றம் முன்வந்துள்ளது.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை சந்தித்த பில் கேட்ஸ் நற்பணி மன்ற பிரதிநிதிகள் இலங்கையின் விவசாயத்துறைக்கு

15

## கஜேந்திரகுமார் எம். பி. மிரட்டப்பட்டது தெரியாது

### ஜனாதிபதி, பிரதமர் சொல்கின்றனர்

கொழும்பு, ஜூன் 05

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவரும் எம். பியுமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தாக்கப்பட்டு மிரட்டப்பட்டமை குறித்து தமக்கு தெரியாது என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, பிரதமர் தினேஷ் குணவர்த்தன, மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் தெரிவித்துள்ளனர்.

கடந்த வெள்ளிக்கிழமை வடமராட்சி கிழக்கில் விளையாட்டுக் கழகம் ஒன்றில் மக்கள் சந்திப்புக்காக சென்ற தன்னை பொலிஸ் புலனாய்வாளர்கள் என்று அறிமுகப்படுத்தியவர்கள் தாக்கினர் என்றும் பொலிஸார் ஒருவர் துப்பாக்கியால் தன்னை குறி வைத்தார் எனவும் கஜேந்திரகுமார் எம். பி. தெரிவித்திருந்தார். அத்துடன், இது தொடர்பில்

15

## முடிந்தால் தேர்தலை நடத்துங்கள் பார்க்கலாம்!

### ஜனாதிபதிக்கு சஜித் சவால்

கொழும்பு, ஜூன் 05

தேர்தல் தொடர்பில் மக்கள் நம்பிக்கை இல்லாமல் இருக்கின்றனர் என்று ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நேற்று முன்தினம் கூறியிருந்தார்.

இந்த நிலையில், நேற்று நிகழ்வு ஒன்றில் பங்கேற்ற எதிர்க்கட்சி தலைவர் சஜித்,

முடிந்தால் ஜனாதிபதி தேர்தலை நடத்துமாறு ஜனாதிபதிக்கு சவால் விடுக்கிறேன். தேர்தல்கள் மீது மக்களுக்கு நம்பிக்கை இல்லை என ஜனாதிபதி தெரிவித்துள்ளார். தனது கட்சியை ஓர் ஆசனத்துக்கு குறைத்த ஒரு தலைவரிடமிருந்து இவ்வாறான கருத்து வெளிவருவதில் ஆச்சரியப்படுவதற்கில்லை.

தேர்தல் நடத்தப்பட்டால் அவர்களுக்கு ஏற்படும் கதி என்னவென்பதை

15

## 600 பொலிஸார் சுட்டுக்கொலை; கருணாமீது முறையிட முடிவு!



கொழும்பு, ஜூன் 05

கிழக்கு மாகாணத்தில் 600 பொலிஸார் சுட்டுக் கொல்லப்பட்டனர் என்று கூறப்படும் சம்பவம் தொடர்பில் கருணா என்று அறியப்பட்ட வி. முரளிதரனுக்கு எதிராக உண்மை மற்றும் நல்லிணக்க ஆணைக் குழுவில் முறையிட தீர்மானிக்கப்பட்

15

## மத நல்லிணக்கத்தை குலைப்போரை கைது செய்ய ஜனாதிபதி உத்தரவு!

### முப்படையினருக்கும் விடுத்தார்

கொழும்பு, ஜூன் 05

பொலிஸார் மாத்திரமல்ல, முப்படையினரும் இணைந்து நாட்டில் மத நல்லிணக்கத்துக்கு எதிராக செயல்படும் குழுக்களையும், அவர்களுக்குப் பின்னால் இருப்பவர்கள் யார் என்பதையும் விரைவில் கண்டறிந்து நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று படைகளின் பிரதானிகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரம சிங்க உத்தரவிட்டுள்ளார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் வகையிலான சம்பவங்கள் தற்செயலானவை அல்ல. மாறாக திட்டமிட்ட வகையிலேயே முன்னெடுக்கப்படுகிறது என்று தேசிய புலனாய்வு பிரிவு ஜனாதிபதிக்கு தகவல் வழங்கியுள்ளது.

மேலும், வரலாற்றில் எந்தவொரு காலகட்டத்திலும் நாடு எதிர்கொள்ளாத பொருளாதார நெருக்கடியால் மக்களும் நாடும்

15

# மக்களாணையை தேர்தலை நடத்தாமல் மதிப்பிட முடியாது

## ஜனாதிபதிக்கு ஜே. வி. பி. பதில்

கொழும்பு, ஜுன் 05

**தேர்தலை நடத்தாமல் எந்த அரசியல் கட்சிக்கும் 50 சதவீத பலத்தை பெற முடியாது என ஜனாதிபதியால் எவ்வாறு குறிப்பிட முடியும். தேர்தலை நடத்தாமல் மக்களாணையை மதிப்பிட முடியாது. தேர்தலை நடத்தினால் நாட்டு மக்கள் நிச்சயம் பதிலடி கொடுப்பார்கள். உள்ளூராட்சிமன்றத் தேர்தல் முறையற்ற வகையில் பிற்போடப்பட்டமைக்கு எதிராக எதிர்வரும் வாரம் உயர்நீதிமன்றத்தில் பிறிதோர் அடிப்படை உரிமை மீறல் வழக்கு ஒன்றை தாக்கல் செய்வோம் என மக்கள் விடுதலை முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் விஜித ஹேரத் தெரிவித்தார்.**

மக்கள் விடுதலை முன்னணியின் பணிமனையில் அவர் நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

நாட்டு மக்களுக்கு தேர்தல் மற்றும் அரசியல் முறைமை மீது நம்பிக்கை இல்லை என ஜனாதிபதி குறிப்பிட்டார். 2020 ஆம் ஆண்டு பொதுத் தேர்தலில் ஐக்கிய தேசியக் கட்சியை மக்கள் அரசியலில் இருந்து முழுமையாக புறக்கணித்ததை ஜனாதிபதி மறந்துவிட்டார்.

தேர்தல் ஒன்றை நடத்தாமல் எந்த அரசியல் தரப்புக்கும் 50 வீத பலத்தை பெற முடியாது என ஜனாதிபதியால் எவ்வாறு குறிப்பிட முடியும். தேர்தல் ஒன்றை நடத்தினால் நாட்டு மக்கள் ரணில்- ராஜபக்ஷர்களுக்கு தக்க பதிலடி கொடுப்பார்கள் என்பதை முன்கூட்டிய தாக அறிந்துள்ள காரணத்தால் தான் அரசாங்கம் தேர்தலை கண்டு அச்சமடைகிறது.

நிதி நெருக்கடி காரணமாக உள்ளூராட்சி மன்றத் தேர்தல் பிற்போடப்பட்டுள்ளது என அரசாங்கம் குறிப்பிடுவது அடிப்படையற்றதாகும். உள்ளூராட்சிமன்றத் தேர்தல் தொடர்பில் தகவல் அறியும் உரிமை சட்டம் ஊடாக பல விடயங்களை பெற்றுக்கொண்டுள்ளோம்.

உள்ளூராட்சி மன்றத் தேர்தல் வாக்கெடுப்பை கடந்த ஏப்ரல் மாதம் 25ஆம் திகதி நடத்த தேசிய தேர்தல் ஆணைக்குழு தீர்மானித்தது. தேர்தல் நடவடிக்கைகளுக்கு 246 கோடி ரூபாய் தேவை என தேர்தல் ஆணைக்குழு கடந்த மார்ச் ஏழாம் திகதி திறைசேரியின் செயலாளரிடம் உத்தியோகபூர்வமாக கோரிக்கை விடுத்துள்ளது.

தேர்தல்கள் ஆணைக்குழுவின் கோரிக்கைக்கு திறைசேரியின் செயலாளர் மஹிந்த சிறிவர்த்தன 'நிதி விடுவிப்பு தொடர்பில் முன்வைக்கப்பட்டுள்ள கோரிக்கையை விடய தானத்துக்கு பொறுப்பான அமைச்சருக்கு அறிவுறுத்தியுள்ளேன். சாதகமான பதில் கிடைத்ததும் தேவையான நிதி விடுவிக்கப்படும்' என மார்ச் ஏழாம் திகதி தேர்தல்கள் ஆணைக்குழுவுக்கு எழுத்து மூலமாக அறிவித்துள்ளார்.

வாக்கெடுப்புக்கு தேவையான நிதியை தேர்தல்கள் ஆணைக்குழு ஒரே கட்டமாக கோரவில்லை. கட்டம் கட்டமாகவே கோரியுள்ளது. இவ்வாறான பின்னணியில் தேர்தல் நடவடிக்கைகளுக்கு தேவையான நிதியை விடுவிக்க அரச வருமானம் போதுமானதாக இல்லை, கையிருப்பில் ரூபாய் இல்லை என நிதியமைச்சு குறிப்பிட்ட கருத்தை தகவலறியும் உரிமை சட்டம் பொய்யாக்கியுள்ளது.

கடந்த ஜனவரி மாதம் 17790 கோடி ரூபாய் வருமானத்தை நிதியமைச்சு ஈட்டியுள்ளது. அரச செலவுகளுக்காக 15,676 கோடி ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதுடன் 2,141 கோடி ரூபா சேமிக்கப்பட்டுள்ளது.பெப்ரவரி மாதம் 27,175 கோடி ரூபா வருமானம் கிடைக்கப் பெற்றுள்ளதுடன் 20,862 கோடி ரூபாய் அரச செலவுகளுக்காக ஒதுக்கப்பட்டு 6,313 கோடி ரூபா சேமிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஜனவரி மற்றும் பெப்ரவரி மாதங்களில் அரச செலவுகளுக்கு நிதி ஒதுக்கப்பட்டதன் பின்னர் 8427 கோடி ரூபாய் மிகுதியாகியுள்ளது. மார்ச் 25 ஆம் திகதி உள்ராட்சிமன்றத் தேர்தலை நடத்த தேசிய தேர்தல்கள் ஆணைக்கு 246 கோடி ரூபாயை மாத்திரம் கோரியுள்ளது. அரசாங்கத்துக்கு வாக்கு இல்லாத காரணத்தால் நிதி இல்லை என்று குறிப்பிட்டுக் கொண்டு உள்ளூராட்சி மன்றத் தேர்தல் கால வரையறையின்றி பிற்போடப்பட்டுள்ளது.

பொய்யான காரணிகளை குறிப்பிட்டுக் கொண்டு அரசாங்கம் உள்ளூராட்சி மன்றத் தேர்தலை பிற்போட்டுள்ளது. ஆகவே, அரசாங்கத்தின் முறையற்ற செயல்பாட்டுக்கு எதிர்ப்பு தெரிவித்து எதிர்வரும் வாரம் உயர்நீதிமன்றத்தில் அடிப்படை உரிமை மீறல் வழக்கு தாக்கல் செய்யவுள்ளோம் - என்றார். (ஐ)

# புகைத்தல், மதுவுக்கு எதிராக கிளிநொச்சியிலும் கொடி தினம்!

கிளிநொச்சி, ஜுன் 05

சர்வதேச புகைத்தல் - மது எதிர்ப்பு வாரத்தையொட்டிய கொடி தினம் கிளிநொச்சியில் ஆரம்பமாகியுள்ளது.

நாடளாவிய ரீதியில் சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தால் மே 31 தொடக்கம் ஜுன்14 ஆம் திகதி வரையான காலப்பகுதி விழிப்புணர்வு மற்றும் கொடி விற்பனை வேலைத்திட்டமாக நடைமுறைப் படுத்தப்பட்டுள்ளது.

இதனடிப்படையில், கிளிநொச்சி மாவட்டத்தில் இந்த செயல் திட்டம் பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புகளுக்கு கொடிகள், ஸ்ரிக்கர்கள் மற்றும் உண்டியல்கள் வழங்கி உத்தியோகபூர்வமாக ஆரம்பித்து வைக்கப்பட்டது.

மேலும் "புகைத்தலிலிருந்து மீண்ட ஓர் கிராமம் : மகிழ்ச்சி நிறைந்த புதியதோர் தேசம்" எனும் தொனிப்பொருளில்நடப்பு ஆண்டுக்கான கொடி வாரம் கடைப்பிடிக்கப்படுகின்றது.

இந்த நிகழ்வில் பச்சிலைப் பள்ளி பிரதேச சமுர்த்தி முகாமையாளர், சமுர்த்தி திணைக்கள உத்தியோகத்தர்கள், சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்களின் அங்கத்தவர்கள், பிரதேச செயலக நிதி உதவியாளர்கள் என பல்வேறு தரப்பினரும் கலந்து கொண்டிருந்தனர்.

# கோவில் தேர் திருவிழாவில் தீயில் சிக்கி பூசகர் மரணம்!

கொழும்பு, ஜுன் 05

கோவில் தேர்த் திருவிழாவின் போது பூசகர் ஒருவர் தீ விபத்துக்கு உள்ளாகி உயிரிழந்தார்.

களுத்துறை - அகலவத்தை - தென்னஹேன முத்துமாரி அம்மன் ஆலயத்திலேயே நேற்றுமுன்தினம் இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்தவர் இங்கிரிய பிரதேசத்தை சேர்ந்த ஆசிர்வாதன் சுந்தர் குமரன் என்ற 44 வயது பூசகரே இவ்வாறு உயிரிழந்தார்.

தீ விபத்துக்கான காரணம் இதுவரை தெரியவரவில்லை.

# சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ள சிறுவர்களை வெளியேற்ற நடவடிக்கை

கொழும்பு, ஜுன் 05

சிறைச்சாலை வளாகங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ள 16 முதல் 18 வயதுக்கு உட்பட்ட சந்தேக நபர்கள் மற்றும் சிறுவர் குற்றவாளிகளை உடனடியாக அங்கிருந்து வெளியேற்ற அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

சிறுவர் உரிமைகள் தொடர்பான ஜெனிவா குழு இலங்கைக்கு வழங்கிய பரிந்துரைகள், சிறுவர் மற்றும் இளைஞர்கள் தொடர்பான கட்டளைச் சட்டத்தின் புதிய திருத்தங்களுக்கு அமைய அரசாங்கம் இந்த தீர்மானத்தை எட்டியுள்ளது.

தற்போது சிறைச்சாலையில் உள்ள சிறுவர்கள் தொடர்பில் சிறைச்சாலைகள் திணைக்களம் நீதி அமைச்சுக்கு அறிக்கை ஒன்றையும் சமர்ப்பித்துள்ளது.

இதன்படி, 16 முதல் 18 வயதுக்குட்பட்ட 37 பேர், சிறைச்சாலை வளாகங்களில் தடுத்து வைக்கப்பட்டுள்ளனர். இவர்களில் 11 பேர் பிணை செலுத்த முடியாமல் சிறையில் இருக்கின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# தேசமாக நாம் முன்னேற சட்டத்துறையின் முக்கியம் அடையாளம் காணப்பட வேண்டும்

## சட்டத்தரணிகள் சம்மேளனம்

கொழும்பு, ஜுன் 05

ஒரு தேசமாக நாம் முன்னேற வேண்டுமானால், சட்டத்துறை தொழில்முனைவின் முக்கியத்துவத்தை அடையாளம் காண்பது முக்கியம் என்று தேசிய சட்டத்தரணிகள் சம்மேளனத்தின் தலைவர் பைசர் முஸ்தபா தெரிவித்தார்.

தேசிய சட்ட மாநாட்டில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

ஒரு தேசமாக நாம் நெருக்கடியான காலகட்டத்தில் இருக்கிறோம். இது சட்டத்தரணிகள் சமூகத்தை ஒன்றிணைக்கும் மாநாடு மாத்திரமல்ல. நாட்டையும் நாட்டின் பொருளாதாரத்தையும் மீட்பதற்காக கொள்கை வகுப்பாளர்கள், அதிகாரிகள் மற்றும் வர்த்தக சமூகத்தினருக்கு இடையேயான கருத்து பரிமாற்றத்தின் தொடக்கமாக இந்த மாநாட்டை நடத்த நாங்கள் முடிவு செய்தோம்.

ஒரு தேசமாக நாம் முன்னேற வேண்டுமானால், சட்டத்துறை தொழில்முனைவின் முக்கியத்துவத்தை அடையாளம் காண்பது முக்கியம். மேலும், தொழில் மற்றும் தொழில்முனைவோர் சட்டத்தின் ஆட்சியை ஏற்க வேண்டும். இந்த விடயத்தில் நிரந்தரமான தீர்வுகளை காண்பதில் அரசியல் தலைமைகளையும் ஈடுபடுத்துவது மிகவும் அவசியம். அப்போதுதான் இந்த மாநாட்டின் வெற்றிகரமான முடிவுகளை எம்மால் பெற முடியும் - என்றார். (ஐ)

# சுற்றுச் சூழல் தின செயல் திட்டம்

யாழ்ப்பாணம், ஜுன் 05

உலக சுற்றுச் சூழல் தினமான இன்று திங்கட்கிழமை கரித்தாஸ் கியூடெக் நிறுவனத்தால் நடைமுறைப்படுத்தப்படும் 'சுற்றுச்சூழல் பாதுகாப்புக்கான முதல் படிகள்' என்ற செயல் திட்டத்தின் கீழ் பயனுள்ள மரநடுகை, கடற்கரை, கிராம சுத்தப்படுத்தல் போன்ற சிரமதான நிகழ்வுகள் முன்னெடுக்கப்படவுள்ளன.

இந்தப் பணிகள் இன்று திங்கட்கிழமை தெல்லிப்பழை ஆதார மருத்துவமனையில் காலை 8.30 மணி முதல் முற்பகல் 11 மணிவரையும் பலாலி அன்ரனிபுரத்தில் முற்பகல் 10 மணி முதல் மதியம் ஒரு மணிவரையும் வறுத்தலைவிளானில் முற்பகல் 10 மணி முதல் மதியம் ஒரு மணிவரையும் முன்னெடுக்கப்படும் சுற்றுச்சூழல் செயல்பாடுகளில் ஆர்வமுள்ள அரச, அரச சார்பற்ற, பொது அமைப்புகள் மற்றும் சமூக குழுவினரை பங்கேற்குமாறு கேட்கப்பட்டுள்ளது. (ஐ)

# மாணவர்களுக்கான போட்டிகள்

யாழ்ப்பாணம், ஜுன் 05

சுற்றுச் சூழல் தினத்தை ஒட்டி யாழ். கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்தால் சுற்றுச்சூழல் பாதுகாப்பு தொடர்பான கட்டுரை, பேச்சு, சுவரொட்டி போட்டிகள் மாணவர்களிடையே நடத்தப்படவுள்ளது.

இந்தப் போட்டியில் கலந்துகொள்ள விரும்புவோர் கியூடெக் கரித்தாஸ் நிறுவனத்துக்கு பாடசாலை மூலமோ அல்லது கரித்தாஸ் நிறுவன குழுவினர் மூலமோ விண்ணப்பிக்கலாம்.

தரம் 5 முதல் தரம் 8 வரை, தரம் 9 முதல் 12 வரை என்ற பிரிவுகளில் போட்டிகள் நடைபெறவுள்ளன. 'ஆரோக்கியமான சுற்றுச்சூழலை பாதுகாப்போம்', 'நஞ்சற்ற வீட்டுத் தோட்டத்தை உருவாக்குவோம்', 'போதையற்ற சமூகத்தை கட்டியெழுப்புவோம்', என்ற தலைப்பில் போட்டிகள் நடைபெறும்.

பேச்சு போட்டி 3 - 5 நிடங்கள் வரை இருத்தல் வேண்டும். போட்டியாளர்கள் பெயர்களை பதிவு செய்து கொண்ட பின்னர் இறுதிப் போட்டிக்கான திகதி அறிவிக்கப்படும்.

கட்டுரைப் போட்டி 200 - 250 வரையான சொற்கள் கொண்டதாக அமைய வேண்டும். ஏ3 தாளில் சுவரொட்டி வரையப்பட வேண்டும். விரும்பிய வர்ணங்களை பயன்படுத்தலாம்.

அனைத்து விண்ணப்பதாரர்களையும் பங்குத் தந்தை அல்லது அதிபர் அல்லது கிராமசேவகர் உறுதிப்படுத்துதல் வேண்டும். மாணவர்கள் தமது ஆக்கங்களை எதிர்வரும் 15ஆம் திகதிக்கு முன்னர் "இயக்குநர், சுற்றுச் சூழல் பாதுகாப்பு செயல் திட்டம், கியூடெக் கரித்தாஸ் யாழ்ப்பாணம், இல. 14 மத்தியூஸ் வீதி, யாழ்ப்பாணம்.", என்ற முகவரிக்கு அனுப்பி வைக்க முடியும். (ஐ)

ஈழநாடு
Eelanadu
05.06.2023 திங்கட்கிழமை
சோபகிருது வருடம், வைகாசி 22

**“ஏசுவார்கள், எரிப்பார்கள், அஞ்சவேண்டாம்
உண்மையை எழுதுங்கள்; உண்மையாய் எழுதுங்கள்”**
- யோகர் சுவாமிகள்.

E-mail: eelanaduweekly@gmail.com
தொலைபேசி : 021 205 2300

# அலி சப்ரி அரசியலுக்கு புதியவர்?

இலங்கையின் வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரி அரசியலுக்கு மிகவும் இளையவர். கோட்டாபய ராஜபக்ஷவுக்கு விசுவாசமான முஸலிமாக இருந்ததால் இவ்வாறானதொரு பதவியை பெறும் வாய்ப்பைப் பெற்றவர். அலி சப்ரி தொடர்ந்தும் வெளிவிவகார அமைச்சராக இருந்தால் கோட்டாபயவின் பாதுகாப்பான வெளிநாட்டு பயணங்களுக்கு உதவியாக இருக்கக்கூடுமென்றே சப்ரி தொடர்ந்தும் வெளிநாட்டு அமைச்சராக இருக்கிறார் எனவும் ஓர் அபிப்பிராயம் எதிர்தரப்பினரிடம் உண்டு. தமிழரசு கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர் சுமந்திரனும் ஒருமுறை இது தொடர்பில் பேசியிருக்கின்றார். ஆனாலும் அலி சப்ரி போன்ற ஒரு தனிநபரால் அவ்வாறான நகர்வுகளை மேற்கொண்டுவிட முடியாது. வெளிநாட்டு அமைச்சராக சப்ரி எதனையும் சாதிக்கவில்லை.

ஒருவேளை கோட்டாபய ராஜபக்ஷவை பாதுகாப்பதுதான் அவருக்கான பிரதான பணியென்றால்கூட அதிலும் ஒரு துரும்பைக்கூட சப்ரியால் அசைக்கமுடியவில்லை. அலி சப்ரி வெளிநாட்டு அமைச்சராக இருக்கும்போதுதான், இலங்கையின் வரலாற்றில் ஒரே நேரத்தில் இரண்டு முன்னாள் ஜனாதிபதிகளான மகிந்த ராஜபக்ஷ மற்றும் கோட்டாபய ராஜபக்ஷவின் மீது, கனடா தடைவிதித்தது. ஒரு வெளிவிவகார அமைச்சராக சப்ரிக்கு இது படுமோசமான தோல்வியாகும். உண்மையில் இதன் பின்னர், சப்ரி பதவியிலிருந்து வெளியேறியிருக்க வேண்டும். ஆனால், இலங்கையில் தங்களுடைய தவறுகளுக்கு பொறுப்பேற்று விலகும் அரசியல் நாகரிகம் சிறிதுமில்லை.

தமிழ்த் தலைவர்கள் கிடைத்திருக்கும் அரிய சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டும். புலம்பெயர் அமைப்புகளின் நிகழ்ச்சி நிரலுக்கு உட்பட்டு மீண்டும் இளைஞர்களை தவறாக வழிநடத்தி விடக்கூடாதென்று சப்ரி ஆலோசனை வழங்கியிருக்கின்றார். ரணில் விக்கிரமசிங்கவுடன் இணைந்து பிரச்னையை தீர்ப்பதற்கான சந்தர்ப்பத்தை தமிழ் கட்சிகள் பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்றும் சப்ரி குறிப்பிட்டிருக்கின்றார்.

சந்தர்ப்பத்தை பயன்படுத்திக் கொள்வதில் பிரச்னையில்லை. ஆனால், முதலில் இது ஒரு சந்தர்ப்பம் என்பதை யார் நிரூபிக்க வேண்டும்? ரணில் விக்கிரமசிங்க தேசிய இனப் பிரச்னைக்கான தீர்வு தொடர்பில் பேசியிருந்தார். அரசமைப்பிலுள்ள விடயங்களை அமுல்படுத்தப் போவதாகக் குறிப்பிட்டிருந்தார். ஆனால், இன்றுவரையில் அவர் கூறிய விடயங்கள் எவற்றிலும் முன்னேற்றங்களை காண்பிக்கவில்லை. சில விடயங்களில் முன்னேற்றங்களை காண்பித்தால் அல்லவா தமிழ் கட்சிகள் நம்பிக்கையுடன் முன்னோக்கிப் பயணிக்க முடியும்!

தொடர்ந்தும் பௌத்த விகாரைகளை அமைப்பது, புத்தர் சிலையை நிர்மாணிப்பது, தமிழ் பகுதிகளை மேலும் பலவீனப்படுத்தும் நோக்கில் நிர்வாகரீதியான மாற்றங்களை ஏற்படுத்துவது - எனப் பல வழிகளிலும் மறைமுகமான ஆக்கிரமிப்பு நிகழ்ச்சிநிரலை மட்டுமே சிங்கள தரப்புக்கள் முன்னெடுக்கும்போது எவ்வாறு தமிழர்கள் மத்தியில் நம்பிக்கை துளிர்விடும்?

முதலில் அரசியலில் நம்பிக்கையை கட்டியெழுப்பும் செயல்பாடுகளை, அரசாங்கமல்லவா நிரூபிக்க வேண்டும். சில முன்னேற்றங்கள் ஏற்படும்போதுதான், அதனை ஓர் அடிப்படையாகக் கொண்டு, தமிழர் பக்கத்திலிருந்தும் சில விடயங்களை முன்னெடுக்க முடியும். அவ்வாறில்லாது தமிழ் கட்சிகள் சந்தர்ப்பத்தை பயன்படுத்திக்கொள்ள வேண்டுமென்று கூறிக்கொண்டிருப்பதில் பயனில்லை. சந்தர்ப்பங்கள் வெறுமையிலிருந்து வருவதில்லை.


தமிழ் மக்களுக்கான அரசியல் தீர்வு மற்றும் பாதிக்கப்பட்ட மக்களுக்கான நீதி விவகாரத்தில் முன்னோக்கி பயணிப்பதற்கான வாய்ப்புகள் ஏற்படுமாக இருந்தால், அதனை புலம்பெயர் சூழலிலிருந்து எவராலும் குழப்பிவிட முடியாது. ஆனால், எந்தவொரு விடயத்திலும் முன்னேற்றங்கள் ஏற்படாமல் இருக்கின்றபோது புலம்பெயர் சமூகம் மட்டுமே தமிழ் மக்களுக்கான ஒரேயோர் ஆதரவாக மேலெழும்.

# சிவசிதம்பரம் - நினைவு தினத்தில் ஊரவனின் இளமைக்கால மனக்காட்சி

- வீரகத்தி தனபாலசிங்கம்

தமிழர் விடுதலை கூட்டணியின் முன்னாள் தலைவர் முருகேசு சிவசிதம்பரம் அவர் கள் மறைந்து இன்றுடன் 21 வருடங்கள் கடந்தோடிவிட்டன.

சிவசிதம்பரத்தை அன்புடன் எல்லோரும் ‘சிவா’ என்றே அழைப்பார்கள். அவரை நினைவு கூருவது என்பது கடந்த நூற்றாண்டின் பின்னரைப் பகுதியில் தமிழர் உரிமைப் போராட் டத்தை வழிநடத்திய மிதவாத தலைவர்களில் ஒருவருக்கு மரியாதை செலுத்துவதற்கு அப்பால் அவரின் கரவெட்டியைச் சேர்ந்தவர்களைப் பொறுத்தவரை சொந்த ஊரின் பிரமாண்டமான அடையாளங்களாக விளங்கிய ஆளுமைகளில் ஒரு வரின் நினைவைக் கொண்டாடுவதுமாகும்.



இன்றைய தினத்தில் எமது இளமைக் காலத்தில் நாம் கண்ட அவர் மனக்கண் முன் வந்து நிற்கிறார். அதனால் இந்தப்பதிவைச் செய்யவேண்டும் என்று உந்துதல் பிறந்தது.

சிவா ஐயாவுக்கு நான் நிறையவே அறிமுகமானவனல்ல. ஆனால், அவருடைய வாழ் வின் கணிசமான காலகட்டத்தை அவதானிக் கும் வாய்ப்பைப் பெற்றவனாக நான் இருந்து வந்திருக்கிறேன். அதற்கு இரு காரணங்கள்.

‘ஒன்று நான் சிவா ஐயாவின் பிறந்த மண்ணைச் சேர்ந்தவன். இரண்டாவது நான் ஒரு பத்திரிகையாளன். அதனால், அரசியல் நிகழ்வுப் போக்குகளை அவதானிக்கவேண்டிய தொழில் சார் தேவையின் நிமித்தம் அவரின் செயல்பாடுகளை அறிந்தவனாக இருக்கிறேன்.

‘1960 களின் நடுப்பகுதியில் இருந்து நான் சிவா ஐயாவை அறிவேன். அவர் முதற் தடவையாக 1960 மார்ச் பொதுத் தேர்தலிலும் ஜூலை பொதுத்தேர்தலிலும் உடுப்பிட்டி தொகுதியில் இருந்து பாராளுமன்றத்துக்கு தெரிவு செய்யப்பட்டபோது எனக்கு நான்கு வயது. 1965 பொதுத் தேர்தலில் மீண்டும் அதே தொகுதியில் இருந்து பாராளுமன்றத்துக்குத் தெரிவுசெய்யப்பட்டபோது எனக்கு ஒன்பது வயது. அரசியல் பற்றி எதையும் அறியாத வயது. ஆனால், 1965 - 1970 காலகட்டத்தில் எமது ஊரில் அவர் கலந்துகொண்ட அரசியல் கூட்டங்களுக்கும் வேறு வைபவங்களுக்கும் ஒரு சிறுவனாக என்னைவிட மூத்தவர்களுடன் புதினம் பார்க்கச் சென்றேன்.

அடுத்து வந்த வருடங்களில் குறிப்பாக 1970 மே பொதுத் தேர்தலின்போது பிரசாரங்களுக்காக சிவா ஐயா தனது ஆதரவாளர்களுடன் எமது ஒழுங்கையின் ஊடாக நடந்து வந்தபோதெல்லாம் வெறுமனே அரைக்காற் சட்டையை அணிந்த பையனாக பின்னால் ஓடிச்சென்றிருக்கிறேன். ஜீ.ஜீ.பொன்னம்பல மும் சிவா ஐயாவும் எமது ஒழுங்கையால் மேள தாளத்துடன் ஊர்வலமாக அழைத்துச் செல்லப் பட்ட காட்சி மனத்திரையில் மங்கலாக நிழலாடுகிறது.

‘சிவாவுக்கு ஜே“ என்பது நான் நினைவு கூரும் அந்தக்கால கட்டத்தில் உடுப்பிட்டித் தொகுதியின் கிராமங்களில் அதுவும் குறிப்பாக கரவெட்டியிலும் அதை அண்டிய கிராமங்களிலும் எனது வயதையொத்த சிறுவர்களுக்குத் தெரிந்த ஒரேயொரு அரசியல் கோஷம்.

எனது வீட்டுக்கு அண்மையாக வாழ்ந்த இரத்தினம் அண்ணனின் நீல, வெள்ளை ஹில்மன் காரில்தான் சிவா பயணம் செய்வார். கொழும்பில் இருந்து ஊருக்கு வந்து நிற்கும் நாட்களில் அவர் அந்தக்காரில் வலம்வரும் போது எமது கண்ணில் பட்டால் எம்மை அறியாமலேயே நாம் சிவாவுக்கு ஜே என்று சத்தம் போடுவோம். அனேகமாக ஒவ்வொரு வார இறுதியிலும் சிவா ஐயா ஊருக்கு வருவார். அவர் கொழும்பு திரும்பிய பிறகு இரத்தினம் அண்ணன் காரை ஓட்டிச்செல்லும் வேளைகளிலும் அதைக் கண்டவுடனேயே நாம் சிவாவுக்கு ஜே சொல்வோம். சிவா இல்லாத காருக்கு நாம் கூறிய ஜே தனக்குரியது என்று இரத்தினம் அண்ணன் தனக்குள் பெருமைப்பட்டுக் கொண்டாரோ எமக்குத் தெரியாது. நோய் வாய்ப்பட்ட எவரையாவது அவர் காரில் ஏற் றிக்கொண்டு வைத்தியசாலைக்கு செனறாலும் எமது சிவாவின் ஜேயில் இருந்து தப்பிவிட முடியாது. சில பெரியவர்கள் நாம் அவ்வாறு செய்ததற்காக வேலியில் உள்ள பூவரசம் தடி யைப்பிடுங்கி எம்மை அடித்துவிரட்டிய அனு பவமும் எமக்குண்டு.

எனது வீட்டுக்கு அருகாமையில் இருக்கும் தச்சந்தோப்பு பிள்ளையார் கோவில் திருவிழா காலத்தில் சிவாஐயா சில சமயங்களில் காரில் வராமல் பெரியதோட்டத்தில் இருக்கும் தனது வீட்டில் இருந்து நடந்தே வருவார். அவரின் நடையில் இருந்த கம்பீரத்தை ரசித்தவர்களை நான் அறிவேன். அழகான மாப்பிள்ளைகள் பற்றிப் பேசுவதானால் ‘அடியே அவன் சிவ சிதம்பரம் மாதிரி’ என்று எமது கிழவிகள் பேசு வதையும் நான் தாராளமாகக் கேட்டிருக்கிறேன். தச்சந்தோப்பு கோவிலில் திருப்பணிக்கு என்று கொண்டுவந்து இறக்கப்பட்டிருந்த பாரிய கருங்கற்களின் மேல் சிவா ஐயாவும் பேராசிரியர் கார்த்திகேசு சிவத்தம்பியும் அமர்ந்திருந்து அளவளாவுவது ஒரு கண்கொள்ளாக்காட்சி. இருவருமே நல்ல சிவத்த நிறத்தவர்கள். அத்துடன் ஆஜானுபாகுவான உடல மைப்பைக் கொண்டவர்கள். தூரத்தில் நின்று அவர்கள் இருவரையும் நாம் பரவசத்துடன் பார்த்த நாட்களை இன்று நினைத்துப் பார்க் கிறேன்.


மாற்றுக் கொள்கையுடையவர்கள் கூட மதித்த ஒரு கண்ணியமான அரசியல் தலைவர் சிவா ஐயா. இன்றைய அரசியல்வாதிகளுடன் ஒப்பிடும்போதுதான் அவரின் மேன்மை பிரகாசமாக வெளிப்படுகிறது.

இளைஞர்களானதும் எங்களில் சிலர் சிவா ஐயாவின் அரசியலைப் பின்பற்றி ஆதரித்தோமா இல்லையா என்பது வேறு விடயம்.

இறுதிக்காலத்தில் சிவா ஐயா தமிழ் தேசிய கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் உறுப்பினராக மீண்டும் பாராளுமன்றத்துக்கு வந்தததை முன்னிட்டு 2002 பெப்ரவரியில் கொழும்பு பம்பலப்பிட்டி சரஸ்வதி மண்டபத்தில் கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரியின் பழைய மாணவர்கள் சங்கத்தின் கொழும்புக்கிளை ஏற்பாடு செய்த கௌரவிப்பு வைபவத்தில் அவர் நிகழ்த்திய உரை தாங்கள் முன்னெடுத்த அரசியல் தமிழ்மக்களுக்கு அவலங்களைக் கொண்டுவந்துவிட்டதாக ஒரு கழிவிரக்கம் அவர் மனதில் ஏற்பட்டிருந்ததது என்ற உணர்வை எனக்கு ஏற்படுத்தியது.

எது எவ்வாறிருந்தாலும் எமது காலத்தில் நாம் கண்ட தமிழ் அரசியல் தலைமை ஆளுமைகளில் குறிப்பிடத்தக்கு ஒருவராக என்றென்றைக்குமே மறக்கமுடியாத ஒருவராக சிவா ஐயா விளங்குவார்.

## அப்புக்குட்டி அண்ணையின் ‘டவுட்’



**ஜூன் - 05 திங்கட்கிழமை**

| | | |
|---|---|---|
| சோபகிருது வருடம் - | | வைகாசி 22 |
| நல்ல நேரம் | : | 06.00 - 07.30 |
| ராகு காலம் | : | 07.30 - 09.00 |
| திதி | : | துவிதியை |




**மேடம்**
சந்திராஷ்டமம் இருப்பதால் கொஞ்சம் அலைச்சலும் சிறுசிறு ஏமாற்றமும் வந்து நீங்கும்.உத்தியோகத்தில் சின்ன சின்ன இடர்பாடுகளை சமாளிக்க வேண்டியிருக்கும். பொறுமை தேவைப்படும் நாள்.

**இடபம்**
உங்கள் பலம் பலவீனத்தை உணர்வீர்கள். வியாபாரத்தில் எதிர்பார்த்த ஒப்பந்தம் கையெழுத்தாகும். சக ஊழியர்களால் ஆதாயம் உண்டு. திறமைகள் வெளிப்படும் நாள்.

**மிதுனம்**
குடும்பத்தில் உங்கள் வார்த்தைக்கு மதிப்புக் கூடும். வியாபாரத்தில் ரெட்டிப்பு லாபம் உண்டு. உத்தியோகத்தில் அதிகாரிகள் புது பொறுப்பை ஒப்படைப்பார்கள். தொட்டது துலங்கும் நாள்.

**கடகம்**
புதிய திட்டங்கள் தீட்டுவீர்கள். உங்களைச் சுற்றியிருப்பவர்களில் நல்லவர்கள் யார் என்பதை கண்டறிவீர்கள். வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். சலுகைகள் கிடைக்கும். நினைத்தது நிறைவேறும் நாள்.

**சிம்மம்**
எதிர்ப்புகள் அடங்கும். பழைய நண்பர்கள் உதவுவார்கள். வியாபாரத்தில் புது பங்குதாரரை சேர்ப்பீர்கள். விமர்சனங்களையும் தாண்டி முன்னேறுவீர்கள். நல்லன நடக்கும் நாள்.

**கன்னி**
உங்கள் பேச்சில் அனுபவ அறிவு வெளிப்படும். வாகனத்தை சீர் செய்வீர்கள். வியாபாரத்தில் பழைய சரக்குகள் விற்கும். உங்கள் உழைப்பிற்கு பாராட்டு கிடைக்கும். வெற்றி பெறும் நாள்.

**துலாம்**
கடந்த இரண்டு நாட்களாக கணவன்-மனைவிக்குள் இருந்த மனப்போர் நீங்கும்.வியாபாரத்தில் போட்டிகள் குறையும். சக ஊழியர்கள் ஒத்துழைப்பார்கள். மன நிம்மதி ஏற்படும் நாள்.

**விருட்சிகம்**
ராசிக்குள் சந்திரன் இருப்பதால் நினைத்த வேகத்தில் எந்த வேலைகளையும் முடிக்க முடியாமல் தடை தாமதங்கள் ஏற்படும். விட்டுக் கொடுத்துச் செல்ல வேண்டிய நாள்.

**தனுசு**
எதிர்காலம் பற்றிய கவலைகள் வந்து போகும். வியாபாரத்தில் போட்டிகளை சமாளிப்பீர்கள். உத்தியோகத்தில் மறைமுக எதிர்ப்புகள் வரக்கூடும். அலைச்சலுடன் ஆதாயம் தரும் நாள்.

**மகரம்**
எதையும் சாதிக்கும் துணிச்சல் பிறக்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் கடமையுணர்வுடன் செயல்படுவார்கள். உத்தியோகத்தில் தலைமையின் நம்பிக்கையை பெறுவீர்கள். மதிப்புக் கூடும் நாள்.

**கும்பம்**
சொன்ன சொல்லை காப்பாற்றுவீர்கள். ஆன்மிக நாட்டம் அதிகரிக்கும். வியாபாரத்தில் வேலையாட்கள் மதிப்பார்கள். புதிய வாய்ப்புகள் தேடி வரும். அதிரடி மாற்றம் உண்டாகும் நாள்.

**மீனம்**
கடந்த இரண்டு நாட்களாக இருந்த அலைச்சல் டென்ஷன் கோபம் யாவும் நீங்கும். தள்ளிப்போன விஷயங்கள் எளிதில் முடியும். தொழில் புது அத்தியாயம் தொடங்கும் நாள்.

# கருணாநிதி நூற்றாண்டு விழா; கொண்டாட்டங்கள் இரத்து

சென்னை, ஜூன் 05

ஒடிசா ரயில்கள் விபத்து காரணமாக முன்னாள் முதல்வர் கருணாநிதியின் நூற்றாண்டு விழா கொண்டாட்டங்கள் இரத்து செய்யப்பட்டன.

முன்னாள் முதல்வர் கருணாநிதியின் நூற்றாண்டு விழாவையொட்டி சென்னையில் பல்வேறு நிகழ்ச்சிகளுக்கு ஏற்பாடு செய்யப்பட்டிருந்தது. இதனிடையே வெள்ளிக்கிழமை ஒடிசாவில் 3 ரயில்கள் மோதிக்கொண்ட விபத்தில் நூற்றுக்கணக்கானோர் உயிரிழந்தனர்.

இதையடுத்து இந்தியா முழுவதும் அரசு நிகழ்ச்சிகள் இரத்து செய்யப்பட்டன. தமிழ்நாட்டிலும் அரசு நிகழ்ச்சிகள் இரத்து செய்யப்படுவதாக முதல்வர் மு. க. ஸ்டாலின் அறிவித்தார்.

இதையடுத்து கருணாநிதி நூற்றாண்டு விழாவையொட்டி ஓமந்தூரார் அரசினர் தோட்டத்தில் உள்ள கருணாநிதி சிலைக்கு கீழ் மலர்களால் அலங்கரித்து வைக்கப்பட்டிருந்த கருணாநிதியின் உருவப்படத்துக்கு முதல்வர் மு. க. ஸ்டாலின் மலர்தூவி மரியாதை செலுத்தினார். அதைத் தொடர்ந்து அமைச்சர்கள், டி. ஆர்.பாலு, கனிமொழி மற்றும் எம்எல்ஏ.க்கள் கருணாநிதி உருவப் படத்துக்கு மலர்தூவி மரியாதை செலுத்தினர்.

(ஐ)

# ம. தி. மு. க.வின் பொது செயலாளராக வைகோ போட்டியின்றி தெரிவு

சென்னை, ஜூன் 05

மறுமர்ச்சி திராவிட முன்னேற்ற கழகத்தின் (ம. தி. மு. க. ) பொதுச் செயலாளராக வைகோ மீண்டும் வைகோ தெரிவு செய்யப்பட்டார். அந்தக் கட்சியின் முதன்மை செயலாளராக துரை வைகோ தெரிவானார்.

மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஐந்தாவது அமைப்பு தேர்தல் தொடர்பாக வெளியிடப்பட்டுள்ள அறிக்கையில், “மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக் கழகத்தின் ஐந்தாவது அமைப்பு தேர்தலை முன்னிட்டு, கழகத்தின் 61 மாவட்டங்களில் 25 இலட்சத்து 8 ஆயிரத்து 786 உறுப்பினர்கள் புதிதாக சேர்க்கப்பட்டார்கள். கிளைக் கழகம், வட்டக் கழகம், பேரூர் கழகம், நகரக் கழகம், ஒன்றியக் கழகம், பகுதிக் கழகம், மாவட்டக் கழகம், மாநகர் மாவட்டக் கழகம் ஆகிய அமைப்புகளின் நிர்வாகிகள் தேர்தல் முறைப்படி நடத்தி முடிக்கப்பட்டு விட்டன.

நிறைவாக தலைமைக் கழக நிர்வாகிகள், ஆட்சி மன்றக் குழு, தணிக்கை குழு உறுப்பினர்கள் ஆகிய பொறுப்புகளுக்கான வேட்பு மனுக்கள் கடந்த மே 27ஆம் திகதி வழங்கப்பட்டு, பூர்த்தி செய்யப்பட்ட வேட்பு மனுக்களைப் போட்டியிடுபவர்கள் கடந்த முதலாம் திகதி தலைமை கழகமான தாயகத்தில் தாக்கல் செய்தார்கள். நேற்று முன்தினம் பிற்பகல் 3 மணி வரை வேட்புமனுக்களை திரும்பப் பெறுவதற்கு அவகாசம் அளிக்கப்பட்டது. எவரும் வேட்பு மனுக்களைத் திரும்பப் பெறவில்லை. எனவே, வேட்புமனு வழங்கியவர்கள் போட்டியின்றி தேர்வு செய்யப்பட்டார்கள்.

எதிர்வரும் 14ஆம் திகதி சென்னை, அண்ணா நகர், விஜய்ஸ்ரீ மகாலில் கூடும் கழகத்தின் 29ஆவது பொதுக்குழு இந்த நிர்வாகிகள் தேர்தலுக்கு ஒப்புதல் அளிக்கும். அங்கு அவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டதை முறைப்படி அறிவிக்கப்படும். மறுமலர்ச்சி தி. மு. கழகத்தின் பொதுச்செயலாளர் பொறுப்புக்கு வைகோ, அவைத் தலைவர் பொறுப்புக்கு அ.அர்ஜூனராஜ் தெரிவாகினர்.

(ஐ)

# ஐ. எஸ். ஐ. எஸ். அமைப்புக்கு உதவி; கைதானவர்களிடம் தீவிர விசாரணை

சென்னை, ஜூன் 05

ஐ. எஸ். ஐ. எஸ். அமைப்பினருக்கு நிதியுதவி வழங்கியதுடன் ஆட்களையும் அனுப்பி வைத்த குற்றச்சாட்டில் கைதான 10 பேர் மீதும் தீவிர விசாரணை நடத்தப்பட்டு வருகின்றது.

பயங்கரவாத அமைப்பான ஐ. எஸ். ஐ. எஸ்ஸூக்கு நிதியுதவி செய்தனர் எனவும் ஆட்களை அனுப்பினர் என்றும் கூறி, தேசிய புலனாய்வு முகமை (என். ஐ. ஏ.) அதிகாரிகள் கேரளா, கர்நாடகா, தமிழகம், உத்தரப்பிரதேசம், மத்திய பிரதேசம் உள்ளிட்ட 15 மாநிலங்களில் பொப்புலர் ப்ரன்ட் ஒவ் இந்தியா அமைப்பின் அலுவலகங்கள், நிர்வாகிகள் வீடுகளில் கடந்த ஆண்டு சோதனை நடத்தினர்.

இதில் தமிழகத்தைச் சேர்ந்த 10 பேர் உட்பட 100இற்கும் மேற்பட்டவர்கள் கைதுசெய்யப்பட்டனர். பொப்புலர் ப்ரன்ட் ஒவ் இந்தியா அமைப்பு மற்றும் அதன்துணை அமைப்புகளுக்கு தடை விதிக்கப்பட்டது. மேலும் சென்னை, மதுரை, தேனி உள்ளிட்ட 6 இடங்களில் அண்மையில் சோதனை நடத்தப்பட்டு, ஆவணங்கள், ஆயுதங்கள் பறிமுதல் செய்யப்பட்டன.

இதன்போது, சென்னையைச் சேர்ந்த ஐவர் கைதாகினர். இவர்கள் ஐ. எஸ். அமைப்புக்கு ஆதரவான செயல்களில் ஈடுபட்டதும் ஆயுதங்களை கையாள்வது குறித்து இளைஞர்களுக்குப் பயிற்சி அளித்ததும் தெரிய வந்தது.

கைதானவர்களை விளக்கமறியலில் வைக்க நீதிமன்றம் உத்தரவிட்டது. அவர்களிடம் தீவிர விசாரணை நடத்தி வரும் அதிகாரிகள். ஆயுதப் பயிற்சி வழங்கப்பட்ட இடங்களுக்கு அவர்களை அழைத்து சென்று விசாரிக்க திட்டமிட்டுள்ளனர் என்று அறிய வருகின்றது.

(ஐ)

# ஒடிசா மூன்று ரயில்கள் விபத்து; தமிழர் எவரும் உயிரிழக்கவில்லை

## தமிழ்நாடு அரசு

ஒடிசா மாநிலத்தில் நேருக்கு நேர் ரயில் மோதி விபத்தில் குறித்து தமிழகத்தை சேர்ந்த நபர்களுக்கு யாருக்கும் உயிரிழப்பு இல்லை. தமிழக அரசு கண்காணிப்பு பணியில் உள்ளது. 8 பேர் காயமடைந்துள்ளனர் என்று சுகாதார துறை அமைச்சர் மா. சுப்ரமணியன் பேட்டியளித்துள்ளார்.

நேற்று அவர் செய்தியாளர்களை சந்திக்கையில்,

இன்று (நேற்று) அதிகாலை முதல் ஒடிசா மாநிலம் ரயில் விபத்தில் சிக்கிய பயணிகளை சென்னை மத்திய ரயில் நிலையத்துக்கு சிறப்பு ரயில் மூலம் வரவழைக்கப்பட்டனர். அவர்களின் காயங்கள் தொடர்பில் முதலமைச்சர் கேட்டறிந்து கொண்டார்.

ரயில் பயணிகளுக்கு விபத்தில் சிக்கிய நபர்களுக்கு உரிய சிகிச்சைக்கான அனைத்து உபகரணங்களும் தயாராக உள்ளது. தற்போது வரை ஒடிசா மாநிலத்தில் விபத்தில் ரயில் பயணிகளுக்கு ஏற்பட்ட விபத்து குறித்து தமிழர்களை சேர்ந்த நபர்களுக்கும் எந்த ஓர் உயிரிழப்பும் ஏற்படவில்லை என்றும் தகவல் வந்துள்ளது.

தற்போது, 8 பயணிகளுக்கு மட்டுமே விபத்துக்களில் சிக்கி காயங்கள் ஏற்பட்டுள்ளது. அவர்களுக்கான சிகிச்சைகள் வழங்கப்பட்டு வருகின்றன.

(ஐ)

# நாட்டில் நீதியான ஆட்சி அமைவதற்கு ராஜபக்ஷ குடும்பத்தை விசாரியுங்கள்



## சிறீதரன் எம். பி. வலியுறுத்து

கிளிநொச்சி, ஜுன் 05

**இலங்கைத் தீவில் ஒரு நீதியான ஆட்சி அமைய வேண்டுமாக இருந்தால், பல்வேறு பட்ட ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட மகிந்த ராஜபக்ஷ குடும்பம் விசாரிக்கப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் சிவஞானம் சிறீதரன் தெரிவித்துள்ளார்.**

கிளிநொச்சியிலுள்ள அவரின் கட்சி பணிமனையில் சனிக்கிழமை நடைபெற்ற செய்தியாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவருமான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், மருதங்கேணி பகுதியில், பொது மக்கள் முன்னிலையில் அரச புலனாய்வாளர்களால் ஆயுத முனையில் அச்சுறுத்தப்பட்டமை இந்த நாட்டின் இனஅழிப்பு நடவடிக்கையின் புதிய வடிவத்தையே காட்டிநிற்கின்றது.

ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழர்களை கொன்றொழித்து படுகொலைகளை செய்ய ஜேர். ஆர். ஜெயவர்த்தனவின் மருமகனான ரணில் அரசின் இந்த செயல்பாடானது இந்த நாட்டிலே அதியுச்ச அடக்குமுறையையே காட்டிநிற்கிறது. இந்த நாட்டிலேயே 18 வயதுக்கு மேற்பட்டவர்கள் வருமானவரி திணைக்களத்திலே பதிவு செய்து தங்களுடைய உழைப்பு வருமானங்களுக்கு வருடாந்தம் வரி செலுத்த வேண்டும் என்று குறிப்பிடப்படுகின்றது.

ஒரு நாட்டிலே வரி அறவிடுவது என்பது மிக நல்ல விடயம். ஆனால், இலங்கையில் நான்கு வயது தொடக்கம் 18 வயதுக் குட்பட்ட பிள்ளை சுயமாக பாடசாலைக்கு சென்று கல்வி கற்க முடியாத அதாவது பருவ காலச் சீட்டை பெற்று இலங்கை போக்குவரத்து சபை பேருந்தில் பயணம் செய்து தமது கல்வியை தொடர முடியாத நிலை உள்ளது. ஒரு மாணவனின் கல்வி நடவடிக்கைகளில் ஒரு வசதியை செய்து கொடுக்காத இந்த அரசாங்கம் 18 வயதுக்கு பின்னர் அவர்களிடமிருந்து வரியை அறவிடுவது என்பது இந்த நாட்டின் ஒரு மிக மோசமான நிலைமையை காட்டி நிற்கின்றது.

இந்த அரசாங்கத்தில் பலர் பல்வேறு பட்ட மோசடிகளை செய்து போயிருக்கின்றார்கள். இந்த அரசாங்கத்தின் மத்திய வங்கியின் பல மில்லியன் ரூபாய்களை ரணில் அரசு இருக்கின்ற போது கொள்ளையடித்து சென்றவர்களை - மத்திய வங்கி ஆளுநரைக் கூட இதுவரை கைது செய்து விசாரணைக்கு உட்படுத்த முடியாத நிலையில் இந்த அரசாங்கம் இருக்கின்றது.

சீனியிலும் தேங்காய் எண்ணெயிலும் ஊழல் மோசடி செய்த கோட்டாபயவின் குடும்பத்தை கைது செய்து விசாரணை செய்ய திராணியற்ற ரணிலின் அரசாங்கம் இங்கே பல ஊழல்களில் ஈடுபட்டு விடுதலைப் புலிகளிடமிருந்து நகைகள் மற்றும் பணத்தை கொள்ளையடித்து வெளிநாட்டு வங்கிகளிலே வைப்பிலிட்டு வைத்திருப்பவர்களுக்கு இதுவரையும் எந்த விசாரணைகளும் மேற்கொள்ளவில்லை - என்றார்.

இருபது தலைமுறைகளுக்கு தேவையானவற்றை சேமித்து வைத்துவிட்டு இருக்கின்ற மகிந்த ராஜபக்ஷ குடும்பத்தை விசாரிக்கவும் இந்த அரசாங்கம் இன்று தயாராக இல்லை. ஆனால் இந்த இளைஞர்களில் மட்டும் அதிகரிசனை கொண்டிருக்கின்றது என்றார்.

கொள்ளையடித்தவர்கள் களவெடுத்தவர்களின் பக்கத்தில் தான் இந்த நாடு எப்போதும் நிற்கின்றது. இந்த தீவிலே ஒரு நீதியான ஆட்சி அமைய வேண்டுமாக இருந்தால் ஊழல் மோசடிகளில் ஈடுபட்ட மகிந்த ராஜபக்ஷ குடும்பம் விசாரிக்கப்பட வேண்டும் - என்றார்.

(ஐ)

# மோதலில் ஈடுபட்ட யாழ். பல்கலையின் 31 மாணவர்களுக்கு உள்நுழைவு தடை!

யாழ்ப்பாணம், ஜுன் 05

யாழ்ப்பாணம் பல்கலைக்கழக முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடத்தில் மாணவர் குழுக்களுக்களிடையே இடம்பெற்ற மோதல் சம்பவங்கள் தொடர்பில் 31 மாணவர்களுக்கு உள்நுழைவு தடை விதிக்கப்பட்டுள்ளது.

சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என அடையாளப்படுத்தப்பட்ட இரண்டாம் வருட மாணவர்கள் 16 பேருக்கும், மூன்றாம் வருட மாணவர்கள் 15 பேருக்கும் கல்விச் செயல்பாடுகளில் ஈடுபடவும் விடுதி உட்பட பல்கலைக்கழகத்தின் எந்தவொரு பகுதியிலும் நுழைவதற்கு தடை விதிக்கப்பட்டுள்ளது.

முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட மாணவர்களின் "மாகோஸ்" வார நிகழ்வுகள் கடந்த 31ஆம் திகதி புதன்கிழமை முதல் ஆரம்பமாகி நடைபெற்று கொண்டிருந்த நேரத்தில் - கடந்த வெள்ளி மற்றும் சனிக்கிழமைகளில் இரண்டாம் வருட மாணவர்களுக்கும், மூன்றாம் வருட மாணவர்களுக்கும் இடையில் நடைபெற்ற விளையாட்டு நிகழ்வில் ஏற்பட்ட தகராறு கைகலப்பாக மாறியது. இதனால் மூன்றாம் வருட மாணவன் ஒருவர் தலையில் படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வருகிறார்.

இந்த சம்பவம் தொடர்பிலான பூர்வாங்க விசாரணைகள் நேற்று ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. விசாரணைகளின் முடிவில் சம்பவத்துடன் சம்பந்தப்பட்டவர்கள் என அடையாளப்படுத்தப்பட்ட இரண்டாம் வருட மாணவர்கள் 16 பேருக்கும், மூன்றாம் வருட மாணவர்கள் 15 பேருக்கும் முறையான விசாரணைகள் முடிவுறும் வரை உள்நுழைவு தடை விதிக்கப்பட்டுள்ளது.

பல்கலைக்கழக மாணவர் வதிவிடம் மற்றும் ஒழுக்கம் தொடர்பான பல்கலைக்கழக மானியங்கள் ஆணைக்குழு விதிமுறைகளுக்கு அமைவாக இன்றிலிருந்து மறு அறிவித்தல் வரை உள்நுழைவுத் தடை வதிக்கப்பட்ட மாணவர்கள் கல்வி செயல்பாடுகளில் ஈடுபடவும், விடுதி உட்பட பல்கலைக்கழகத்தின் எந்தவொரு பகுதியினுள் நுழைவதற்கும் தடை விதிக்கப்பட்டுள்ளது என்று முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீடாதிபதி பேராசிரியர் பா. நிமலதாசன் அறிவித்துள்ளார்.

இதேநேரம், மோதல் சம்பவத்தையடுத்து முகாமைத்துவ கற்கைகள் மற்றும் வணிக பீட மாணவர்களின் "மாகோஸ்" வார நிகழ்வுகள் இடைநிறுத்தப்பட்டுள்ளன.

(ஐ)

# டெங்கு ஒழிப்பு அதிகாரிகள்போல் நடித்து தங்க நகைகள் கொள்ளை!

கொழும்பு, ஜுன் 05

டெங்கு ஒழிப்பு அதிகாரிகள் போன்று பாசாங்கு செய்த மூவர் வீடொன்றுக்குள் நுழைந்து, அங்கிருந்த 73 வயது வயோதிப பெண்ணின் கை, கால்களை கட்டிய பின்னர் தங்க நகைகளை கொள்ளையிட்டு தப்பி சென் றுள்ளனர் என்று பொலிஸார் தெரிவிக்கின்றனர்.

கொழும்பு - கெஸ்பேவ - படுவந்தர பகுதியில் சுமார் 13 இலட்சம் ரூபாய் பெறுமதியான தங்க நகைகள் மற் றும் கைபேசி என்பனவே கொள்ளையடிக்கப்பட் டுள்ளன.

இந்த வீட்டுக்கு சென்ற கொள்ளையர்கள், வயோதிப பெண்ணிடம் அருந்துவதற்கு தண்ணீர் கேட்டதாகவும் அதனை கொடுப்பதற்காக சமையல் அறைக்குள் நுழைந்தபோது, அவரின் பின்னால் சென்று அவரது கை, கால்களைக் கட்டிவைத்து, பின்னர், அவர் அணிந் திருந்த மற்றும் வீட்டிலிருந்த தங்க நகைகள், கைபே சியை கொள்ளையடித்துச் சென்றுள்ளதாகவும் பொலிஸ் விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

(ஐ)

# நீர்நிலைகளில் நீராடியபோது மூன்று இளைஞர்கள் மரணம்!

கொழும்பு, ஜுன் 05

வெவ்வேறு பிரதேசங்களில் இடம்பெற்ற இரு வேறு சம்பவங்களில் நீரில் மூழ்கி மூவர் உயிரிழந்தனர்.

அம்பாறை - தெஹியத்தகண்டிய - ஹெனானிகல வெவாவில் இளைஞர் குழு ஒன்று கடலில் நீராடச் சென்றது. அப்போது அலை அடித்துச் சென்றதில் இருவர் மீட்கப்பட்டனர். இருவர் காணாமல் போயினர். பின்னர் அவர்கள் இருவரின் சடலங்களே மீட்கப்பட்டன.

காலி - ஹபராதுவ பிரதேசத்தை சேர்ந்த இரு இளைஞர்களே இவ்வாறு உயிரிழந்தனர்.

இதேவேளை, மொனராகலை கும்புக்கன் ஆற்றில் மூழ்கி 17 வயது மாணவன் உயிரிழந்தார். உறவினர்களுடன் நீராடச் சென்றபோதே அவர் நீரில் மூழ்கி உயிரிழந்தார். உயிரிழந்தவர் தற்போது நடந்து வரும் க. பொ. த. சாதாரண தர பரீட்சைக்கு தோற்றுபவர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

(ஐ)

# பிளாஸ்ரிக் மயமாகிறது மனித உடல் விழித்துக் கொள்ளாவிடின் விபரீதம்!

## ஐங்கரநேசன் எச்சரிக்கை

யாழ்ப்பாணம், ஜுன் 05

எங்கு பார்த்தாலும் பிளாஸ்ரிக் மயமாகிவரும் உலகில் மனித உடலும் பிளாஸ்ரிக் மயமாகிக் கொண்டிருக்கிறது. காற்றிலும் நீரிலும் நிரம்பியுள்ள பிளாஸ்ரிக் நுண்துகள்கள் சுவாசத்தின் மூலமும் உணவின் மூலமும் மனித உடலினுள் நுழைந்து நுரையீரலிலும் உள் இழையங்களிலும் தேங்கி வருகிறது. இவ்வாறு வாரமொன்றுக்கு 5 கிராமளவு பிளாஸ்ரிக் நுண்துகள்கள் மனித உடலைச் சென்றடைந்து கொண்டிருப்பதாக மருத்துவ விஞ்ஞானிகள் கண்டறிந்துள்ளனர். பல நூறு இரசாயனங்களின் சேர்க்கையால் ஆன பிளாஸ்ரிக் நுண்துகள்கள் தொடர்பாக விழித்துக் கொள்ளாவிடில் சுவாசக் கோளாறுகள் முதல் புற்றுநோய்கள் வரை பல்வேறு விபரீதங்களை எதிர் கொள்ள நேரிடும் என்று சூழலியலாளரும் தமிழ்த் தேசியப் பசுமை இயக்கத்தின் தலைவர் பொ. ஐங்கரநேசன் எச்சரித்துள்ளார்.

உலக சுற்றுச்சூழல் தினம் இன்றாகும். இதையொட்டி அவர் விடுத்த அறிக்கையிலேயே இவ்வாறு எச்சரித்துள்ளார்.

மேலும், பிளாஸ்ரிக் மனுக்குலத்துக்கு பெறுமதியான பல பயன்களைத் தந்து கொண்டிருந்தபோதும், கூடவே சீர்செய்ய முடியாத பல மோசமான பாதிப்புகளையும் ஏற்படுத்தி வருகிறது.

இன்று நிலம், நீர், காற்று என்று இயற்கையின் மேனி முழுவதும் பிளாஸ்ரிக் கழிவுகளின் கோர பற்கள் ஆழப்பதிந்துள்ளன.

பிளாஸ்ரிக் கழிவுகள் நிலத்தைப் போர்த்தி மண்ணினுள் மழைநீர் இறங்குவதை அனுமதிக்காததோடு காற்றுப்புகுவதையும் தடை செய்கிறது.

பிளாஸ்ரிக் கழிவுகளை உயிரினங்கள் உணவோடு சேர்த்தும், உணவென நினைத்தும் விழுங்குவதால் தரையில் யானைகள் முதல் கடலில் மீன்கள் வரை பல மில்லியன் கணக்கான உயிர்கள் ஆண்டுதோறும் அற்ப ஆயுளில் பலியாகி வருகின்றன.

பிளாஸ்ரிக் கழிவுகளை எரிப்பதால் வெளிவரும் கொடும் டையொக்சின் வாயு மனிதர்களை மலடாக்கி வருகிறது. தற்போது பிளாஸ்ரிக் கழிவுகள் நுண்துகள்களாக மனித உடலினுள்ளும் தேங்க ஆரம்பித்துள்ளன.

முற்றுகையிட்டிருக்கும் பிளாஸ்ரிக் கழிவுகளில் இருந்து இயற்கையையும் எம்மையையும் உடனடியாக மீட்டெடுப்பது இலேசானதொன்றல்ல. எனினும், அதன் தாக்குதல்களின் வீரியத்தைக் குறைக்கவல்ல வியூகங்களையேனும் வகுக்கவேண்டிய கட்டாய நிலைக்கு இன்று நாம் தள்ளப்பட்டுள்ளோம்.

தேவையற்ற பிளாஸ்ரிக் பொருட்களை வாங்குவதைத் தவிர்ப்பது எம்முன்னால் உள்ள முதல்தெரிவாகும். இயன்றவரை நீண்டகாலம் பயன்படுத்துவது, கழிக்க முன்னர் இன்னொருமுறை பயன்படுமா என்று சிந்திப்பது, கழிவுகளில் இருந்து பிளாஸ்ரிக்கைப் பிரித்தெடுப்பது போன்ற கழிவு மேலாண்மைகளையும் கையில் எடுக்க வேண்டும். கூடவே, ஒரு நாள் பயன்படுத்தித் தூக்கி வீசும் பிளாஸ்ரிக்குக்கு மாற்றாகக் கடதாசி, துணி, இலைகள் போன்றவற்றினாலான இயற்கைப் பொருட்களுக்கு தாமதமின்றித் திரும்பவேண்டும் - என்றுள்ளது.

# கோட்டாபய ராஜபக்ஷவுக்கு புதிய மாளிகை ஒதுக்கீடு!

கொழும்பு, ஜூன் 05

முன்னாள் ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவுக்கு அரசாங்கம் ஸ்டன்மோர் கிரெசன்டில் உள்ள மாளிகை ஒன்றை வசிப்பதற்கு வழங்கியுள்ளது

மகிந்த ராஜபக்ஷ முன்னர் வசித்த இல்லத்தையே அரசாங்கம் கோட்டாபய ராஜபக்ஷவுக்கு வழங்கியுள்ளது.

ஸ்டன்மோர் கிரசன்டில் உள்ள வீட்டை கோட்டாபய ராஜபக்ஷவுக்காக பெற்றுக் கொள்வதற்கு முன்னர், வெளிவிவகார அமைச்சருடன் பேச்சு நடத்தப்பட்டது. ஏனென்றால் அந்த மாளிகை வெளிவிவகார அமைச்சுக்கு என ஒதுக்கப்பட்டிருந்தது.

கோட்டாபய ராஜபக்ச மலலசேகர மாவத்தையில் உள்ள வீட்டில் வசித்து வந்த நிலையிலேயே தற்போது அவருக்கு அரசாங்கம் ஸ்டன்மோர் கிரசன்ட் வீட்டை வழங்கியுள்ளது. மலலசேகர மாவத்தை சத்தம் மிகுந்ததாக காணப்படுவதால் அவர் புதிய இடத்தை கோரியிருந்தார்.

எனினும், அவரது பாதுகாப்பில் எந்த மாற்றங்களும் மேற்கொள்ளப்படவில்லை நூற்றுக்கும் மேற்பட்ட ஆளணிகள் அவரின் பாதுகாப்புக்காக ஒதுக்கப்பட்டுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. (ஐ)

# பயங்கரவாதத்துக்கு நிதியுதவி; தடுக்கும் நடவடிக்கை விரைவில்!

## ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க



கொழும்பு, ஜூன் 05

**சட்டவிரோத பணப் பரிமாற்றம் மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியுதவிகளை வழங்குவதை தடுப்பதற்கான அடுத்தகட்ட செயல்பாடுகளை இலங்கை விரைவில் ஆரம்பிக்கும் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க உறுதியளித்துள்ளார்.**

மேற்படி செயல்பாடுகள் நாட்டின் வணிக செயல்பாடுகளை இலகுபடுத்துவது தொடர்பான மதிப்பீடுகள் மற்றும் வெளிநாட்டு முதலீடுகளை ஈர்த்தல் போன்ற விடயங்கள்மீது நேரடியாக தாக்கம் செலுத்தும் என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார்.

நுவரெலியா கிரேண்ட் ஹோட்டலில் நேற்று முன்தினம் நடைபெற்ற சட்டத்தரணிகள் மாநாட்டின் 2ஆம் நாள் நிகழ்வில் கலந்து கொண்டு கருத்து தெரிவிக்கும் அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சட்டவிரோத பணப் பரிமாற்றம் மற்றும் பயங்கரவாதத்துக்கு நிதியுதவிகளை வழங்குவதை தடுப்பதற்காக காணப்படும் சட்டதிட்டங்களின் இடைவெளிகளை விரைவில் கண்டறிய வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்திய ஜனாதிபதி, அவ்வாறு செய்யத் தவறும் பட்சத்தில் இலங்கை மூலோபாய குறைபாடுகள் கொண்ட நாடாக பட்டியலிடப்படலாம். இதனால் நாட்டின் அபிவிருத்திக்கு பாதகமான விளைவுகள் ஏற்படலாம்.

தேசிய கொள்கையின்கீழ் நாட்டை வழிநடத்திச் செல்ல வேண்டியதன் அவசியத்தையும் இதன்போது வலியுறுத்திய ஜனாதிபதி, அவ்வாறான தேசிய கொள்கையை வகுப்பதற்கான குழுவை நியமிக்கும் பணிகள் தற்போதும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்தார்.

தேசிய கொள்கை வகுப்பு செயல்பாடுகளின்போது அனைத்து தரப்பினரின் இணக்கப்பாடுகளை பெற்றுக் கொள்ள முடியாதிருந்தாலும் மேற்படி விடயங்கள் குறித்து உடன்பாடு ஒன்றை உருவாக்கி அவற்றை அமுல்படுத்துவதற்கான முனைப்புகளை மேற்கொள்வதே அரசாங்கத்தின் எதிர்பார்ப்பாகும்.

முன்னைய அரசாங்கங்கள் தேசிய கொள்கை ஒன்றை வகுக்கத் தவறியதன் காரணமாகவே இன்றளவில் நாட்டின் பிரச்னைகள் உக்கிரமடைந்துள்ளன என்றும் ஜனாதிபதி சுட்டிக்காட்டினார். (ஐ)

# பெற்றோரின் அக்கறையின்மையே 80வீத சிறுவர் வன்முறைக்கு காரணம்

## யாழ். மாவட்ட பிரதி பொலிஸ் மா அதிபர்

யாழ்ப்பாணம், ஜூன் 05

பெற்றோரின் முறையான கண்காணிப்பு சிறுவர்கள்மீது இல்லாத காரணத்தாலும் அக்கறையின்மையினாலுமே 80 வீதமான சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் இடம்பெற்றுள்ளதென யாழ்ப்பாணம் மாவட்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர் மஞ்சுள செனரத் தெரிவித்தார்.

சங்கானையில் சிறுவர் துஷ்பிரயோகத்தை தடுத்தல் என்ற தொனிப்பொருளில் நடைபெற்ற நிகழ்ச்சியில் கலந்துக் கொண்டு உரையாற்றும் போதே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

மேலும், சிறுவர்களுக்கு எதிரான வன்முறைகளை எந்த சந்தர்ப்பத்திலும் ஏற்றுக் கொள்ள முடியாது. நாங்கள் வன்முறைகளில் இருந்து அவர்களை காப்பற்ற முடியும். யாழ்ப்பாணத்தில் சிறுவர்களுக்கெதிரான வன்முறைகள் அதிகமாகவே உள்ளன.

இவ்வாறான சம்பவங்களை நாங்கள் தனித்தனியாக மதிப்பீடு செய்த போது, அவற்றில் 80 வீதமானவை பெற்றோரின் முறையான கண்காணிப்பு இல்லாத காரணத்தாலும், சிறுவர்கள் மீதான அக்கறையின்மையினாலுமே இடம்பெற்றுள்ளன.

இவற்றைத் தடுப்பதில் நாம் அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும். சட்டத்தை உருவாக்குபவர்கள், அரசாங்க அதிகாரிகள், ஆசிரியர்கள், பெற்றோர்கள் மற்றும் சமூகத்தின் அனைத்துத் தரப்பினருக்கும் பங்குண்டு. அத்துடன் ஊடகங்களுக்கும் பெரும் பங்கு உண்டு. எனவே நாம் அனைவரும் ஒன்றாகி ஒளியேற்ற முன்வர வேண்டும் - என்றார். (ஐ)

# வீட்டில் தனிமையிலிருந்த மதகுருவும் இளம்பெண்ணும் எச்சரித்து விடுவிப்பு

யாழ்ப்பாணம், ஜூன் 05

தெல்லிப்பழையில் மதகுரு ஒருவரும் இளம்பெண்ணும் மதுபான போத்தல்களுடன் தனியான வீடொன்றில் தங்கியிருந்தபோது, பொதுமக்களால் மடக்கிப் பிடிக்கப்பட்டு பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் எச்சரிக்கை செய்து விடுவிக்கப்பட்டனர்.

யாழ்ப்பாணம் நகர பகுதியில் உள்ள மத ஸ்தலம் ஒன்றின் உதவி அருட்தந்தையான 55 வயதான மதகுரு ஒருவரும் மன்னாரை சேர்ந்த 24 வயது இளம்பெண்ணும் இவ்வாறு பொதுமக்களால் மடக்கி பிடிக்கப்பட்டனர்.

தெல்லிப்பழை பொலிஸ் பிரிவில் நேற்றுமுன்தினம் இந்த சம்பவம் இடம்பெற்றது. தெல்லிப்பழை பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பகுதியில் ஆசிரியை ஒருவர் தங்குவதாக கூறி வீடு ஒன்று வாடகைக்கு எடுக்கப்பட்டுள்ளது.

எனினும், அங்கு தங்கி இருந்தவர் ஆசிரியை அல்ல என்று பொதுமக்கள் தெரிவிக்கின்றனர். அவரின் நடத்தையில் பொதுமக்களுக்கு சந்தேகம் ஏற்பட்டுள்ளது.

அந்தப் பெண் வீட்டை விட்டு வெளியில் செல்லும் நேரங்களில் மதகுரு ஒருவர் அந்த வீட்டுக்கு வருவதையும், அவர் வரும் சமயங்களில் பல இளம் பெண்கள் அங்கு வந்து செல்வதையும் அருகிலுள்ள மக்கள் அவதானித்துள்ளனர். இந்த நிலையில் நேற்று மதியமும் இளம்பெண் ஒருவருடன் மதகுரு அங்கு வந்துள்ளார்.

அவர்கள் வீட்டுக்குள் சென்றதும் அந்தப் பகுதி பொதுமக்கள் வீட்டை முற்றுகையிட்டுள்ளனர். வீட்டுக்குள் மக்கள் சென்று பார்த்தபோது அங்கு மதுபான போத்தல்கள் காணப்பட்டுள்ளன. அத்துடன், மதகுருவின் வெள்ளை மேலங்கியும் அங்குள்ள கதிரை ஒன்றில் காணப்பட்டுள்ளது.

மதகுருவையும் அவருடன் தங்கி இருந்து யுவதியையும் பிடித்த பொதுமக்கள் தெல்லிப்பழை பொலிஸாரிடம் ஒப்படைத்த நிலையில் பொலிஸார் அவர்களிடம் வாக்குமூலம் பெற்ற பின்னர், எச்சரிக்கை செய்து விடுவித்துள்ளனர். (ஐ)

# ஜனநாயகத்தை மதிக்கக்கூடிய தலைமையே நாட்டுக்கு தேவை

## சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர்

கொழும்பு, ஜூன் 05

நாட்டில் சட்டத்தின் ஆட்சியை பேணுவதற்கும் நாட்டை எதிர்பார்க்கும் திசையில் நகர்த்துவதற்கும் தொலைநோக்கு மற்றும் ஒழுக்கநெறியுடைய, ஜனநாயகத்தை மதிக்கின்ற தலைமை அவசியம் என இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் தலைவர் கௌசல்ய நவரத்ன தெரிவித்தார்.

நுவரெலியா கிராண்ட் ஹோட்டலில் வெள்ளிக்கிழமை நடந்த கூட்டத்திலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

சம்பிரதாயமாக தேசிய சட்ட மாநாடானது சட்டத்தொழில் தொடர்பான தினசரி விடயங்களை பற்றி கலந்துரையாடவே அர்ப்பணித்துள்ளது. இருப்பினும், இந்த ஆண்டுக்கான தேசிய சட்ட மாநாடு 2023/2024 வேறுபட்ட அணுகுமுறையை எடுத்துள்ளது. நாட்டின் தேசிய நலன்களுக்காகவும் சிறந்த எதிர்காலத்துக்காகவும் சட்டத்தரணிகள் சமூகத்தின் வகிபங்கு பற்றி கலந்துரையாட இந்த மாநாட்டை நாங்கள் ஒதுக்கியுள்ளோம்.

இந்த முயற்சியில் பல தரப்பினருடன் நாங்கள் ஈடுபட்டுள்ளோம். முன்னெப்போதையும் விட நமது நாடு அரசியல் மற்றும் பொருளாதார சவாலை எதிர்கொண்டுள்ளது என்பது இரகசியமல்ல. எனவே, நாட்டில் அத்தியாவசியமான சட்டக் கட்டமைப்பும் சுதந்திரமான நீதித்துறையும் இருப்பது அவசியம்.

சட்டத்தின் ஆட்சியை பேணுவதற்கும், நாட்டை எதிர்பார்க்கும் திசையில் நகர்த்துவதற்கும், தொலைநோக்கு மற்றும் ஒழுக்கநெறியுடைய - ஜனநாயகத்தை மதிக்கின்ற - நமது குடிமக்களின் உரிமைகள் மற்றும் நாட்டின் பாதுகாப்பை உறுதிப்படுத்தும் தலைமையொன்று அவசியம்.

எங்கள் தொழில் வரலாற்றில், முதல் முறையாக சட்டத்துறையில் மறுசீரமைப்பு செய்ய வேண்டிய அல்லது திருத்தப்படவேண்டிய பகுதிகள் குறித்து அனைத்து தரப்பினர்களுடனும் கலந்துரையாட இந்த தேசிய சட்ட மாநாட்டை நாங்கள் ஏற்பாடு செய்துள்ளோம்.

நாட்டின் நீண்டகால அபிவிருத்தியை உறுதிப்படுத்துவதைப் போன்று, இலங்கையை வளர்ச்சியடையும் நாட்டிலிருந்து அபிவிருத்தி அடைந்த நாடாக முன்னோக்கிக் கொண்டு செல்லும் சட்டங்களை எமது சட்டக் கட்டமைப்பில் அறிமுகப்படுத்துவதும், அதற்காக சட்டங்களை இயற்றுபவர்களுக்கு உந்துதல்களை ஏற்படுத்த தேவையான ஆதரவு மற்றும் விழிப்புணர்வை இந்த மாநாட்டின் மூலம் வழங்குவதுமே எமது நோக்கம் - என்றார். (ஐ)

# முன்னணியின் செயல்பாட்டாளருக்கு அச்சுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது

## கஜேந்திரன் எம். பி. தெரிவிப்பு



யாழ்ப்பாணம், ஜூன் 05

தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் வடமராட்சி கிழக்கு செயல்பட்டாளர் சற்குணதேவியின் வீட்டுக்கு சென்ற இனந்தெரியாதவர்கள் அவரை அச்சுறுத்தினர் என்று பாராளுமன்ற உறுப்பினர் செல்வராஜா கஜேந்திரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தனது சமூகவலைதள பக்கத்தில்,

"கட்சியின் வடமராட்சி கிழக்கு செயல்பாட்டாளர் ஜெ. சற்குணதேவி (அருள்மதி) வீட்டுக்கு நேற்றிரவு 10.30 மணியளவில் மோட்டார் சைக்கிளில் சென்ற இருவர் தாம் இராணுவ புலனாய்வுத் துறையைச் சேர்ந்தவர்கள் என்று கூறினர். அத்துடன், நீங்கள் விரைவில் கைது செய்யப்படுவீர்கள் என்று எச்சரித்துவிட்டு சென்றுள்ளனர் - என்றார். (ஐ)

# 121 எரிபொருள் நிலையங்கள்மீது சட்ட நடவடிக்கை எடுக்கப்படும்!

## எரிசக்தி அமைச்சர் காஞ்சன

**கொழும்பு, ஜூன் 05**

**50 வீத இருப்பை தக்க வைக்காத எரிபொருளுக்கான கட்டளையை வேண்டுமென்றே தாமதித்த 121 எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மீது நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது என்று மின்சக்தி, எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார்.**

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம், லங்கா ஐ. ஓ. சி. ஆகியவை தொடர்ந்து எரிபொருளை நாடளாவிய ரீதியில் விநியோகித்து வருகின்றன.

கடந்த வாரத்தில் அனைத்து எரிபொருள் நிலையங்களிலும் வைக்கப்பட்ட எரிபொருள் கட்டளைகள் மற்றும் பராமரிக்கப்பட்ட இருப்புகளின் தரவையும் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன மதிப்பாய்வு செய்து வருகிறது.



121 எரிபொருள் நிலையங்கள் மே 27 முதல் 31 வரை எந்தக் கட்டளையையும் செய்யவில்லை. மற்ற பல எரிபொருள் நிலையங்கள் குறைந்தபட்ச இருப்புகளை பராமரிக்க போதுமான கட்டளைகளை வழங்கவில்லை என்றும் ஆரம்ப அறிக்கைகள் கண்டறிந்துள்ளன.

இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன எரிபொருள் நிலையங்கள் குறைந்தபட்சம் 50வீதம் இருப்பு வைத்திருக்க வேண்டும். மே 27 முதல் இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபன விநியோகத்தர்களால் கட்டளைகள் மற்றும் தினசரி எரிபொருள் கொள்முதல் செய்யப்படாத எரிபொருள் நிலையங்கள் ஒப்பந்தத்தின் நிபந்தனைகளை மீறிய அடிப்படையில் உரிமங்கள் பரிசீலனைக்குப் பிறகு நிறுத்தப்படும் என்று அமைச்சர் காஞ்சன தெரிவித்தார்.

(ஐ)

# சீன சந்தேகநபரை நாடுகடத்த தனி விமானம் கோரும் இலங்கை

கொழும்பு, ஜூன் 05

போலி கடவுச்சீட்டில் நாட்டுக்குள் பிரவேசிக்க முயன்ற போது கைது செய்யப்பட்ட சீன சந்தேக நபர் விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளின் கீழ் சீனாவுக்கு நாடு கடத்தப்படவுள்ளார்.

போதைப்பொருள் தொடர்பான குற்றத்துக்காகத் தேடப்படும் சீனப் பிரஜையை அவரின் நாட்டுக்கு நாடு கடத்துவதற்கு பாதுகாப்பு பணியாளர்களுடன் தனி விமானம் ஒன்றை வழங்குமாறு சீனத் தூதரகத்திடம் கோரப்பட்டுள்ளது.

கடந்த மே மாதம் 18ஆம் திகதி பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்ட சீன சந்தேகநபரின் நடத்தையை கருத்தில் கொண்டு விசேட பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறு கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது.

மேற்கு ஆபிரிக்காவில் உள்ள கினியாவின் போலி கடவுச்சீட்டு அவரிடம் இருந்தது கண்டுபிடிக்கப்பட்டது - என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

# இரும்பு உற்பத்திகளுக்கு தரச்சான்றிதழ் கட்டாயம்

கொழும்பு, ஜூன் 05

இரும்பு உற்பத்திகளுக்கு தரச்சான்றிதழ் கட்டாயமாக்கப்படவுள்ளது. இலங்கை தரநிர்ணய சான்றிதழை பெற்றுக்கொள்ள முடியாத இரும்பு உற்பத்தி தொழிற்சாலைகளுக்கு எதிராக நடவடிக்கை எடுக்கப்படும் என வர்த்தக அமைச்சர் நளின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

மேலும், இலங்கை தர நிர்ணய சான்றிதழ் பெறப்படாத நிறுவனங்கள் இரும்புக் கம்பிகளை உற்பத்தி செய்து வருகின்றன என்று முறைப்பாடுகள் கிடைத்துள்ளன. அதன் அடிப்படையில், குறித்த தரப்பினரை அழைத்து கலந்துரையாடப்பட்டுள்ளது.

இலங்கை தரக் கட்டுப்பாட்டு நிறுவனத்தின் தரச் சான்றிதழை பெற்றுக்கொள்ளாத நிறுவனங்களின் தொழில்சாலைகளின் செயல்பாடுகளை இடைநிறுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



கட்டுமானத்துறையுடன் தொடர்புடைய பொருட்கள் தொடர்பில் உரிய தரத்தைப் பேண வேண்டிய தேவையுள்ளது. இதன் காரணமாக இரும்பு உற்பத்திகளுக்கு தரச்சான்றிதழை கட்டாயமாக்க தீர்மானிக்கப்பட்டுள்ளதாக அமைச்சர் குறிப்பிட்டார்.

(ஐ)

# வெப்பத்தால் குழந்தைகளுக்கு தோல் நோய் பரவல் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 05

தற்போது வெப்பமான கால நிலையால் சிறு குழந்தைகளுக்கு தோல் நோய்கள் அதிகரித்து வருகின்றது என்று மருத்துவர்கள் தெரிவித்துள்ளனர்.

பெற்றோர்கள் இதில் அதிக கவனம் செலுத்த வேண்டும் என கொழும்பு சீமாட்டி சிறுவர் வைத்தியசாலையின் விசேட மருத்துவ நிபுணர் தீபால் பெரேரா தெரிவித்தார்.

வறண்ட காலநிலையுடன் நீர்ப்போக்கு போன்ற நிலைமைகளும் குழந்தைகளிடம் காணப்படுவதாகவும் அவர் தெரிவித்தார்.



# அனைவரின் இணைந்த முயற்சியே நாட்டில் இயல்பை ஏற்படுத்தலாம்!

## பிரதம நீதியரசர் தெரிவிப்பு

கொழும்பு, ஜூன் 05

நாட்டில் இயல்பு நிலைமையை ஏற்படுத்துவது அனைவரினதும் இணைந்த முயற்சி என்று பிரதம நீதியரசர் ஜயந்த ஜயசூரிய தெரிவித்தார்.


நுவரெலியா கிராண்ட் ஹோட்டலில் வெள்ளிக்கிழமை நடைபெற்ற 2023 - 2024 தேசிய சட்ட மாநாட்டில் உரையாற்றியபோதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மேலும், கடந்த சில வருடங்களில் பல சவால்களுக்கு மத்தியிலும் சட்டத்தரணிகள் சங்கம் தனது உறுப்பினர்களை ஒன்று திரட்டி பல்வேறு கருப்பொருள்களின் கீழ் மாநாடுகளை நடத்தியது.

'சட்டத் தொழிலின் இயலுமையை மீள்கட்டமைத்தல் மற்றும் இசைவாக்கமடைதல், இந்த ஆண்டின் தொடக்கத்தில் ஒரு நெருக்கடியின் ஊடாக பயணித்தலில் சட்டத்தின் வகிபங்கு' என்ற 2022ஆம் ஆண்டுக்கான கருப்பொருளின் கீழ் நாங்கள் ஒன்றிணைந்தோம்.

கொரோனா தொற்று மற்றும் பொருளாதார நெருக்கடி காரணமாக நாங்கள் அனைவரும் முன்னொருபோதும் இல்லாத சிரமங்களையும் சவால்களையும் எதிர்கொள்ள வேண்டியேற்பட்டது.

ஆனால், இந்த சூழ்நிலையில் இருந்து விடுபட்டு இயல்பு நிலைக்குத் திரும்பவும், வாழ்வில் முன்னேறவும் அனைத்து முயற்சிகளையும் மேற்கொள்வது நம் அனைவரினதும் பொறுப்பு என நாங்கள் நம்புகிறோம் - என்றார்.



(ஐ)

# சுற்றுலா பயணிகளின் வருகை 175 வீதத்தால் அதிகரிப்பு

கொழும்பு, ஜூன் 05

இந்த ஆண்டின், முதல் 5 மாதங்களில், 5 இலட்சத்து 24 ஆயிரத்து 486 சுற்றுலா பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர்.

இந்த ஆண்டு மே மாதத்தில் மாத்திரம், 83 ஆயிரத்து 309 வெளிநாட்டவர்கள், சுற்றுலா வந்துள்ளனர். கடந்த ஆண்டு மே மாதம் 30 ஆயிரத்து 207 சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர்.

எனவே, இந்த ஆண்டில், குறித்த காலப்பகுதியில் சுற்றுலா வந்த வெளிநாட்டவர்களின் எண்ணிக்கை, 175.8 சதவீதத்தால் அதிகரித்துள்ளனர் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

# ஓ. எல். பரீட்சை எழுதும் மாணவன் மீது தாக்குதல்

கொழும்பு, ஜூன் 04

கல்வி பொதுத்தராதர சாதாரண தரப் பரீட்சைக்குத் தோற்றி வரும் மாணவனின் சிறுநீர் பாதையிலிருந்து இரத்தம் வரும்படியாக அடிவயிற்றில் எட்டி உதைத்து கடுமையாக தாக்கினர் என்ற குற்றச்சாட்டில் 5 மாணவர்கள் கைது செய்யப்பட்டனர் என்று களுத்துறை பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்டவர்கள் ஐவரும் பாதிக்கப்பட்ட மாணவனுடனேயே பரீட்சைக்கு தோற்றி வருகின்றனர்.

பாதிக்கப்பட்ட மாணவர் மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார்.

முறைப்பாட்டாளரின் கோரிக்கைக்கு அமைய கைது செய்யப்பட்ட ஐந்து மாணவர்களும் விடுவிக்கப்பட்டுள்ளனர்.

# களுத்துறை மாவட்டத்துக்கு மண்சரிவு அபாய எச்சரிக்கை

கொழும்பு, ஜூன் 05

களுத்துறை பகுதியில் மழை கடந்த 24 மணி நேரத்தில் 75 மில்லி மீற்றரை தாண்டியிருப்பதால், தொடர்ந்து மழை பெய்தால், நிலச்சரிவு, பாறை சரிவு, மண் சரிவு போன்ற அபாயங்கள் குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் என தேசிய கட்டிட ஆராய்ச்சி நிறுவனம் தெரிவித்துள்ளது.

தேசிய கட்டட ஆராய்ச்சி நிறுவனம் ஓர் அறிக்கையில், ஆபத்து குறித்து எச்சரிக்கையாக இருக்க வேண்டும் மற்றும் தேவைப்பட்டால் பாதுகாப்பான இடத்துக்கு செல்ல தயாராக இருக்க வேண்டும்.

களுத்துறை மாவட்டத்தின் புலத்சிங்ஹல மற்றும் பாலிந்த நுவர பிரதேசங்களை மண்சரிவு அபாயம் உள்ள பகுதிகளாக முன்னர் குறித்த நிறுவனம் அடையாளம் கண்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(ஐ)

ஈழநாடு



# முஸ்லிம் லீக் குறித்து அமெரிக்காவில் ராகுல் காந்தி கூறியது என்ன? பா. ஜ. க. கொந்தளிப்பது ஏன்?

வாஷிங்டனில் உள்ள தேசிய பத்திரிகையாளர் மன்றத்தில், காங்கிரஸ் முன்னாள் தலைவர் ராகுல் காந்தி செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது முஸ்லிம் லீக் கட்சி தொடர்பான கேள்விக்கு, "அந்தக் கட்சி முழுக்க முழுக்க மதச்சார்பற்றது" என்று அவர் பதிலளித்தார்.

அமெரிக்காவில் சுற்றுப்பயணம் மேற்கொண்டுள்ள ராகுல் காந்தி, தலைநகர் வாஷிங்டனில் செய்தியாளர்களைச் சந்தித்தார். அப்போது அவரிடம், 'கேரளாவில் இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கட்சியுடன் காங்கிரஸ் கூட்டணி வைத்துள்ளது. இது மதச்சார்பின்மைக்கு எதிரானது இல்லையா?' என்று கேள்வி எழுப்பப்பட்டது.

"முஸ்லிம் லீக் உடனான உறவில் மதச்சார்பின்மைக்கு எதிரானது என்று எதுவும் இல்லை. இந்தக் கேள்வியை அனுப்பி இருப்பவர் முஸ்லீம் லீக் கட்சியின் வரலாறு குறித்து சரியாக அறிந்திருக்கவில்லை என்று நினைக்கிறேன்," என்று ராகுல் காந்தி பதிலளித்தார்.

வாஷிங்டனில் உள்ள தேசிய பத்திரிகையாளர் மன்றத்தில் நடைபெற்ற செய்தியாளர்கள் சந்திப்பில் இந்தியா தொடர்பான பல்வேறு கேள்விகளுக்கும் ராகுல் காந்தி பதிலளித்தார்.

உக்ரேன் மீதான ரஷ்யாவின் தாக்குதல் விவகாரத்தில் இந்தியாவின் நிலைப்பாடு குறித்தும் ராகுலிடம் கேள்வி எழுப்பப்பட்டது. அதற்கு, "ரஷ்யா - உக்ரைன் போரில், பிரதமர் மோடி தலைமையிலான இந்திய அரசு கடைபிடிக்கும் கொள்கையை ஆதரிக்கிறேன்" என்று ராகுல் பதில் கூறினார்.

கேரள மாநிலத்தில் பிராந்திய கட்சியாக இருக்கும் முஸ்லிம் லீக், அங்கு காங்கிரஸ் தலைமையிலான கூட்டணி ஆட்சி அமைக்கும் போதெல்லாம் அதில் அங்கம் வகித்து வந்துள்ளது.

இதனிடையே, ராகுல் காந்தி வெளிநாட்டில் இந்தியா குறித்து அவதூறு பரப்பி வருவதாக பாஜக மீண்டும் குற்றம் சாட்டி உள்ளது.

தமது அமெரிக்க சுற்றுப் பயணத்தில் அவர் பேசி வரும் விஷயங்கள் தொடர்பாக பாஜக கடும் கண்டனம் தெரிவித்துள்ளது.


### பாஜக - காங்கிரஸ் வார்த்தைப் போர்

இந்தியன் யூனியன் முஸ்லீம் லீக்கை மதச்சார்பற்ற கட்சி என்று கூறியுள்ள ராகுல் காந்திக்கு, பாஜக தலைவர் அமித் மால்வியா கண்டனம் தெரிவித்துள்ளார்.

வயநாட்டில் தமது இருப்பைத் தக்க வைத்துக் கொள்ள வேண்டியுள்ளதால், முஸ்லிம் லீக்கை மதச்சார்பற்ற கட்சியாக ஏற்றுக்கொள்ள வேண்டிய நிர்ப்பந்தம் ராகுல் காந்திக்கு உள்ளது என்று மால்வியா விமர்சித்துள்ளார்.

"மதத்தின் அடிப்படையில் இந்தியா பிளவுப்பட்டதற்கு ஜின்னாவின் முஸ்லிம் லீக்தான் காரணம். ஆனால் அந்தக் கட்சியை ராகுல் காந்தி மதச்சார்பற்ற கட்சி என்று கூறுகிறார். முஸ்லிம் லீக் குறித்து ராகுலுக்கு சரியாகத் தெரியாமல் இருக்கலாம். ஆனால் வயநாட்டில் தமது இருப்பை காட்டிக்கொள்ள வேண்டி இது போன்ற தந்திரங்களை அவர் கையாள்கிறார்," என்று அமித் மால்வியா தமது ட்விட்டர் பதிவில் தெரிவித்துள்ளார்.

'மோடி' குடும்பப் பெயர் தொடர்பான அவதூறு வழக்கில் எம்பி பதவியை இழப்பதற்கு முன்பு வரை, ராகுல் காந்தி கேரளாவின் வயநாடு தொகுதியின் எம்பி ஆக






இருந்தார்.

ராகுல் மீதான அமித் மாளவியாவின் இந்த விமர்சனத்துக்கு காங்கிரஸ் செய்தித் தொடர்பாளர் சுப்ரியா சிறினேட் பதிலடி கொடுத்துள்ளார்.

"பொய் செய்தி பரப்பும் நீங்கள், நள்ளிரவு வரை விழித்திருந்து ராகுலை கண்டிப்பதைப் பார்க்க மிகவும் மகிழ்ச்சியாக உள்ளது. ராகுலின் அமெரிக்க பயணத்தில் அவரைக் கண்காணிக்கும் பொருட்டு வரும் நாட்களில் இன்னும் கூடுதலாக தூக்கத்தைத் தொலைக்க வேண்டி வரும். அதற்குத் தயாராக இருங்கள்," என்று சுப்ரியா கிண்டலாகக் கூறியுள்ளார்.

காங்கிரஸ் கட்சியின் மற்றொரு செய்தித் தொடர்பாளரான பவன் கெராவும் அமித் மாளவியாவின் விமர்சனத்துக்கு எதிர்வினை ஆற்றி உள்ளார்.

இதுதொடர்பாக அவர் கூறியபோது, "ஜின்னாவின் முஸ்லிம் லீக் கட்சிக்கும், கேரளாவில் தற்போதுள்ள முஸ்லிம் லீக்கிற்கும் நிறைய வித்தியாசம் இருக்கிறது என்பது கூடத் தெரியாத அளவிற்கா நீங்கள் அறியாமையில் இருக்கிறீர்கள்?" என்று பவன் கேள்வி எழுப்பி உள்ளார்.




ஜின்னாவின் முஸ்லிம் லீக் என்பது, உங்களின் (பாஜகவின்) முன்னோர்களுடன் கூட்டணி வைத்திருந்த கட்சி. ஆனால் கேரளாவின் முஸ்லிம் லீக் கட்சி என்பது, பாஜகவுடன் கூட்டணி வைத்திருந்த கட்சி" என்று பவன் கெடா பதிலடி கொடுத்துள்ளார்.

### பாஜக - முஸ்லிம் லீக் உறவு

கடந்த 2012இல் நாக்பூர் மாநகராட்சி மேயர் தேர்தல் நடைபெற்றது. இந்தத் தேர்தலில் வெற்றி பெற பாஜக, இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் ஆதரவைப் பெற்றது என்றும் பவன் குறிப்பிட்டுள்ளார்.

மொத்தம் 145 உறுப்பினர்களைக் கொண்ட நாக்பூர் மாநகராட்சியில் பெரும்பான்மையைப் பெற ஒரு கட்சி குறைந்தபட்சம் 73 வார்டுகளில் வெற்றி பெற்றிருக்க வேண்டும். பாஜக 62 இடங்களில் வெற்றி பெற்றிருந்த நிலையில், 10 சுயேச்சை கவுன்சிலர்கள் மற்றும் 2 இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கவுன்சிலர்களின் ஆதரவுடன் நாக்பூர் மாநகராட்சியை பாஜக கைப்பற்றியது என்று பவன் கோடிட்டு காட்டியுள்ளார்.

2019 தேர்தலின்போது, உத்தரப் பிரதேச மாநில முதல்வர் யோகி ஆதித்யநாத் தமது ஒரு ட்விட்டர் பதிவில் முஸ்லிம் லீக்கை கடுமையாக விமர்சித்திருந்தார்.

"முஸ்லிம் லீக் ஒரு வைரஸ். யாருக்காவது இந்த வைரஸ் தொற்று ஏற்பட்டால் அவர் உயிர் வாழ்வது மிகவும் கடினம். ஆனால் இன்று, முக்கிய எதிர்க்கட்சியான காங்கிரஸ் இந்த தொற்றுக்கு ஆளாகி உள்ளது. அவர்கள் வெற்றி பெற்று, இந்த வைரஸ் நாடு முழுவதும் பரவினால் நிலைமை என்னவாகும் என்று எண்ணி பாருங்கள்" என்று தமது ட்விட்டர் பதிவில் தெரிவித்திருந்தார் யோகி ஆதித்யநாத்.

2019 இல் நடைபெற்ற நாடாளுமன்ற மக்களவைத் தேர்தலில் கேரள மாநிலம் வயநாடு தொகுதியில் ராகுல் காந்தி போட்டியிட்டார். அப்போது அவர் இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் கட்சியின் ஆதரவை பெற்றது குறித்தும் பாஜக தலைவர்கள் கேள்வி எழுப்பி இருந்தனர்.

### ஜின்னாவின் முஸ்லிம் லீக் கட்சிக்கு என்ன நேர்ந்தது?

இந்திய பிரிவினைக்கு பிறகு, தனி பாகிஸ்தான் கோரி போராடி வந்த அனைத்திந்திய முஸ்லிம் லீக் கட்சி கலைக்கப்பட்டது. பாகிஸ்தான் தனி நாடாக உருவெடுத்த பின், அந்நாட்டின் முதல் கவர்னர் ஜெனரலாக முகமது அலி ஜின்னா பொறுப்பேற்றார். அவர் பொறுப்பேற்ற சில மாதங்களுக்கு பிறகு, மேற்கு பாகிஸ்தானில் முஸ்லிம் லீக் கட்சியும், கிழக்கு பாகிஸ்தானில் அனைத்து பாகிஸ்தான் அவாமி முஸ்லிம் லீக் கட்சியும் உருவாகின.

பாகிஸ்தானுக்கு முதல் ஆறு பிரதமர்களை தந்த கட்சி என்ற பெருமையை முஸ்லிம் லீக் பெற்றது. ஆனாலும் அவர்கள் குறுகிய காலமே பதவி வகித்தனர். இறுதியில் ஜெனரல் ஆயுப் கான் பாகிஸ்தானில் ராணுவச் சட்டத்தை அமல்படுத்திய பின், முஸ்லிம் லீக் கட்சி கலைக்கப்பட்டது.

சில காலம் கழித்து, முஸ்லிம் லீக் கட்சியின் பெயரை, பாகிஸ்தான் முஸ்லிம் லீக் என்று மாற்றி அந்த கட்சிக்கு புத்துயிர் கொடுத்தார் ஆயுப் கான். பாகிஸ்தான் முஸ்லிம் லீக் அங்கு பல ஆண்டுகள் செல்வாக்குடன் இருந்து வந்த நிலையில், அந்தக் கட்சியில் இருந்து பிரிந்து, நவாஸ் ஷெரிப்பை பொதுச் செயலாளராக கொண்டு புதிய கட்சி உருவானது. பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (நவாஸ்) பெயரிடப்பட்ட கட்சிக்கு, ஷெபாஸ் ஷெரிப் தலைவராக இருந்தார்.

இதனிடையே வங்கதேசம் உருவாக, கிழக்கு பாகிஸ்தானில் அவாமி லீக் கட்சி போராட்டங்களை நடத்தி வந்தது. பஞ்சாபிகள் ஆதிக்கம் நிறைந்த மேற்கு பாகிஸ்தானில் இருந்து விடுதலை பெறுவதற்கான முயற்சிகளையும் அக்கட்சி முன்னெடுத்து வந்தது. இந்த போராட்டங்களின் விளைவாக, மேற்கு பாகிஸ்தானில் இருந்து பிரிந்து வங்கதேசம் எனும் புதிய நாடு உருவானது. ஷேக் முஜிபுர் ரகுமான் அந்த நாட்டின் முதல் ஜனாதிபதியாக பதவி வகித்தார்.

சுதந்திர இந்தியாவில், அனைத்திந்திய முஸ்லிம் லீக், இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் என்று பெயர் மாற்றம் பெற்றது. அத்துடன் இதன் வரலாறு தாய் கட்சியில் இருந்து முற்றிலும் மாறிப்பட்டிருந்தது. இந்தியன் யூனியன் முஸ்லிம் லீக் தொடந்து தேர்தலில் போட்டியிட்டு வருவதுடன், நாடாளுமன்ற மக்களவையில் இந்த கட்சியின் பிரதிநிதித்துவம் தொடர்ந்து இருந்து வருகிறது.

கேரளாவில் வலுவாக உள்ள இந்திய யூனியன் முஸ்லிம் லீக்கை, அங்கு மாநில கட்சியாக அங்கீகரித்துள்ளது தேர்தல் ஆணையம். இந்தக் கட்சிக்கு தமிழ்நாட்டிலும் கிளை உள்ளது.

மூன்றாவது மக்களவையில் தொடங்கி 16 ஆவது மக்களவை வரை, அந்தக் கட்சிக்கு குறைந்தபட்சம் இரண்டு எம்பிக்கள் இருந்துள்ளனர். அதிகபட்சமாக, நான்காவது மக்களவையில் இக்கட்சிக்கு மூன்று எம்பிக்கள் இருந்தனர். இரண்டாவது மக்களவையில் மட்டும் எம்பிக்கள் யாரும் இல்லை.

கேரளாவில் காங்கிரசுடன் இந்திய யூனியன் முஜ்லிம் லீக் நீண்ட காலமாக கூட்டணியில் இருந்து வருகிறது. மேலும் அங்கு எதிர்க்கட்சி கூட்டணியான ஐக்கிய ஜனநாயக முன்னணியில் முக்கிய கட்சியாகவும் அங்கம் வகிக்கிறது. கேரள சட்டமன்றத்தில் தற்போது இந்தக் கட்சிக்கு 18 எம்எல்ஏக்கள் உள்ளனர். 2011 ஆண்டு, சட்டமன்றத்தில் அக்கட்சிக்கு மொத்தம் 20 எம்எல்ஏக்கள் இருந்தனர்.

ஈழநாடு



# ஒரு பொது நினைவுச்சின்னத்தை ஏன் உருவாக்க முடியாது?

நிலாந்தன்

போரில் உயிர்நீத்த அனைவருக்குமாக ஒரு பொதுவான நினைவுச் சின்னத்தை உருவாக்கப் போவதாக அரசாங்கம் அறிவித்திருக்கிறது. தமிழ்க் கட்சிகளில் சில அதை எதிர்க்கின்றன. சில அதை ஆதரிப்பதாகத் தெரிகின்றது.

போரில் உயிர் நீத்த எல்லாருக்குமான நினைவுச் சின்னம் என்பது உலகில் ஏற்கனவே பல நாடுகளில் உண்டு. குறிப்பிட்ட நாட்டில் அல்லது குறிப்பிட்ட பிரதேசத்தில் போரில் உயிர்நீத்த அனைவருக்குமானதாக அது அமையும். அதற்கு முகம் இருக்காது. ஆளடையாளம் இருக்காது. அது போர் வெற்றியையும் பிரதிபலிக்காது. தோல்வியையும் பிரதிபலிக்காது. குறிப்பாக, நிலைமாறுகால நீதியின் ஒரு பிரிவாகிய இழப்பீட்டு நீதியின் கீழ் அவ்வாறு நினைவுச் சின்னங்களை உருவாக்குவதற்குப் பாதிக்கப்பட்ட மக்களுக்கு உரிமையுண்டு.

ஆனால் இலங்கைத்தீவைப் பொறுத்தவரையிலும் நிலைமாறுகால நீதி தொடர்பான வாதப்பிரதி வாதங்களின்போது ஒரு விடயம் சுட்டிக்காட்டப்படுவதுண்டு. இலங்கைத்தீவில் நிலை மாற்றம் ஏற்படவில்லை என்பதே அது. இலங்கைத்தீவில் ஆயுத மோதல்கள்தான் முடிவுக்கு வந்திருக்கின்றன. உளவியல் மோதல் இப்பொழுதும் உண்டு. ஆயுத மோதல் ஒரு காரணம் அல்ல. அது விளைவுதான். ஆயுத மோதல்களுக்கு காரணம் இன ஒடுக்குமுறைதான். எனவே இன ஒடுக்குமுறை முடிவுக்கு வரும்பொழுதே இலங்கைத் தீவில் நிலை மாற்றம் ஏற்படும். அதாவது போருக்கு பிந்திய, அல்லது பிணக்குக்கு பிந்திய, என்று அழைக்கத்தக்க ஒரு நிலை இலங்கைத்தீவில் இப்பொழுதும் ஏற்படவில்லை

உதாரணமாக, தென்னாபிரிக்காவில் கறுப்பின மக்களுக்கு அரசியல் விடுதலை கிடைத்தது. பொருத்தமான பொருளாதார விடுதலை இன்றுவரை கிடைக்கவில்லை. ஆனாலும் கறுப்பின மக்கள் ஒப்பீட்டளவில் அரசியல் விடுதலையை அனுபவிக்கும் ஒரு சூழல் அங்கே உருவாகி விட்டது. அதனால்தான் நிலைமாறுகால நீதியை அங்கே ஒப்பீட்டளவில் வெற்றிகரமாகப் பரிசோதிக்க முடிந்தது.

ஆனால் இலங்கைத்தீவில் நிலைமை அப்படியல்ல. இலங்கைத்தீவில் ஆயுத மோதல்கள்தான் முடிவுக்கு வந்திருக்கின்றன. மோதல்களுக்குக் காரணமான இன ஒடுக்குமுறை இப்பொழுதும் உண்டு. அதனால்தான் தமிழ் மக்கள் தொடர்ச்சியாக சிங்களபௌத்த மயமாக்கலுக்கு எதிராகப் போராடிக் கொண்டிருக்கிறார்கள். சிங்கள பௌத்த மயமாக்கல் எனப்படுவது இனக் ஒடுக்குமுறையின் ஒரு பகுதிதான். தமிழ் மக்களை ஒரு தேசமாக வனையும் அம்சங்களை அழித்து ஒழிப்பது, தமிழ்மக்களின் தேசிய இருப்பை அழிப்பதுதான் இன ஒடுக்குமுறையின் பிரதான இலக்கு.

இலங்கைத்தீவைப் பொறுத்தவரையிலும் அரசாங்கம் கூறுவதுபோல 2009க்கு பின்னரான காலகட்டத்தை பிணக்கிற்குப் பின்னரான அதாவது இனப்பிரச்சினைக்குப் பின்னரான காலகட்டம் என்று அழைக்க முடியாது. அது போலவே அரசுசார்பற்ற நிறுவனங்கள் அழைப்பதுபோல போருக்கு பின்னரான காலகட்டம் என்றும் அழைக்க முடியாது. மாறாக நான் எனது கட்டுரைகளில் திரும்பத் திரும்ப வலியுறுத்துவதைப்போல, ஆயுத மோதல்களுக்குப் பின்னரான காலகட்டம் என்பதுதான் பொருத்தமாக இருக்கும். ஏனென்றால் உளவியல் மோதல்கள் இப்பொழுதும் உண்டு.

ஆயுத மோதல்களின்போது கைப்பற்றப்பட்ட நிலங்கள் இப்பொழுதும் அரசு படைகளின் கட்டுப்பாட்டுக்குள் இருக்கின்றன. அங்கெல்லாம் அவர்கள் விகாரைகளை அமைத்து சிங்களபௌத்த மயமாக்கலை முன்னெடுத்து வருகிறார்கள். உயர் பாதுகாப்பு வலையங்கள் இப்பொழுதும் உண்டு. இலங்கைத்தீவின் மொத்தப் படைக் கட்டமைப்பில் மூன்றில் இரண்டு பகுதி வடக்குக் கிழக்கில்தான் உண்டு. போர் முடிவுக்கு வந்துவிட்டது என்றால் எதற்காக அளவுப் பிரமாணத்துக்கு அதிகமாக படையினரை தமிழ்ப் பகுதிகளில் பேண வேண்டும்? கண்ணுக்குத் தெரியாத ஒரு எதிரிக்கு எதிராக அரசாங்கம் தொடர்ந்தும் தன்னை தயார் படுத்தி வருகின்றதா?

அதுதான் பிரச்சினையே. அரசாங்கம் தமிழ்மக்கள் தேசமாக இருப்பதனை அச்சுறுத்தலாகப் பார்க்கின்றது. அதனால்தான் தமிழர்கள் தேசமாக இருப்பதை அழிக்கும் விதத்தில் சிங்கள பௌத்த மயமாக்கலை திணைக்களங்களுக்கூடாக முன்னெடுக்கின்றது. எனவே இலங்கைத்தீவில் கடந்த 14 ஆண்டுகளாக நிலவி வரும் அரசியற் சூழலை ஆயுத மோதல்களுக்கு பின்னரான ஒரு காலகட்டம் என்றுதான் அழைக்க வேண்டும். இங்கு நிலை மாற்றம் ஏற்படவில்லை.



அவ்வாறு நிலை மாற்றம் ஏற்படாத ஒரு நாட்டில், போரில் உயிர்நீத்த எல்லாருக்குமாக ஒரு நினைவுச் சின்னத்தை உருவாக்க முடியாது. அதை போரில் சம்பந்தப்பட்ட அனைவரும் அல்லது போரால் பாதிக்கப்பட்ட அனைவரும் ஏற்றுக் கொள்வார்கள் என்பதற்கில்லை. அவ்வாறு எல்லாரும் ஏற்றுக்கொள்ளக்கூடிய ஒரு சூழல் எப்பொழுது தோன்றும் என்றால், மெய்யான பொருளில் நிலைமாற்றம் ஏற்படும் பொழுதுதான். இங்கு நிலை மாற்றம் எனப்படுவது இன ஒடுக்குமுறை முடிவுக்கு கொண்டு வரப்படுவதுதான். அதாவது இலங்கைத்தீவின் பல்லினத்தன்மையை ஏற்றுக்கொள்ளும் ஒரு யாப்பை உருவாக்குவதுதான்.

எனவே இப்பொழுது விடயம் தெளிவாகத் தெரிகிறது. இலங்கைத்தீவின் பல்லினச் சூழலை, பல்மதச் சூழலை, பல மொழிச் சூழலை உறுதிப்படுத்தாதவரை, நல்லிணக்கத்தை அதன் மெய்யான பொருளில் கட்டி எழுப்பாதவரை,

> **இங்கே நிலைமாற்றம் அல்லது பண்புருமாற்றம் ஏற்படவில்லை. அது, மூன்று இனங்களுக்கிடையில் மட்டுமல்ல, தமிழினத்துக்குள்ளும் இனிமேற்றான் ஏற்பட வேண்டியிருக்கிறது. இவ்வாறான ஓர் அரசியற் சூழலில் பொதுவான ஒரு நினைவுச் சின்னத்தை குறித்த உரையாடல்களுக்கு இலங்கைத்தீவும் தயாராக இல்லை. தமிழரசியலும் தயாராக இல்லை.**

எல்லாருக்கும் பொதுவான ஒரு நினைவுச் சின்னத்தை உருவாக்க முடியாது.

ஏனெனில் போரில் உயிர் நீத்தவர்கள் என்பது ஒரு பொதுவான வகை. அதற்குள் போராளிகள் வருவார்கள். படைத்தரப்பு வரும். பொதுமக்கள் வருவார்கள். சில சமயங்களில் வெளிநாட்டவர்களும் வருவார்கள். அதன்படி போருக்கு பின்னரான ஒரு பொது நினைவுச் சின்னம் எனப்படுவது கொன்றவர்களையும் கொல்லப்பட்டவர்களையும் காணாமல் ஆக்கப்பட்டவர்களையும் அவர்களைக் காணாமல் ஆக்கியவர்களையும், இனப்படுகொலை புரிந்தவர்களையும் இனப்படுகொலைக்கு ஆளாகியவர்களையும் ஒன்றாக நினைவுகூரும் சின்னங்களாகவே அமைய முடியும்.

தமிழ் மக்களுக்கு நீதி கிடைக்கும் பட்சத்தில் அப்படி ஒரு நினைவுச் சின்னத்தை குறித்து தமிழ் மக்கள் சிந்திக்கலாம். ஆனால் நீதிக்கான வாய்ப்புகள் மிகக் குறைவாக காணப்படும் ஒரு நாட்டில், யுத்த வெற்றி நினைவுச் சின்னங்களைக் கொண்டாடும் ஒரு நாட்டில், கொலை செய்தவரையும் கொல்லப்பட்டவரையும் ஒன்றாக ஒரு சின்னத்துக்குள் கொண்டு வருவது சாத்தியமே இல்லை. அதுமட்டுமல்ல பொத்தாம் பொதுவான ஒரு நினைவுச் சின்னம் எனப்படுவது இனப்படுகொலையால் உயிரிழந்தவர்களை போரில் உயிர் இழந்தவர்கள் என்ற ஒரு பொதுவான வகைக்குள் அடக்கிவிடும். இனப்படுகொலையால் உயிர் நீத்தவர்களை நினைவு கூரும்போது அங்கே இனப்படுகொலைக்கு எதிரான நீதியைக்கோரும் ஓர் அரசியல் இருக்கும். ஆனால் போரில் உயிர் நீத்தவர்கள் என்று வரும்பொழுது அங்கே இனப்படுகொலை என்ற சுட்டிப்பான அம்சம் போர் என்ற பொதுவான அம்சத்தில் பின்தள்ளப்பட்டுவிடும். இது தமிழ் மக்களைப் பொறுத்தவரை அவர்களுடைய நீதிக்கான கோரிக்கையை மழுங்கடிக்கும் ஒரு நடவடிக்கை என்றே பார்க்கப்படும். ஏனென்றால் இனப்படுகொலைக்கு நீதி கிடைத்தால்தான் இனங்களுக்கு இடையிலான நல்லிணக்கம் சாத்தியப்படும். நல்லிணக்கத்தை உருவாக்கினால்தான் ஒரு பொது நினைவுச் சின்னம் சாத்தியப்படும்.

எனவே முதலில் மூன்று இனங்களுக்கும் இடையிலே



தென்னாபிரிக்க நினைவுச்சின்னம்

மெய்யான பொருளில் நல்லிணக்கத்தை ஸ்தாபிக்கும் விதத்தில் பாதிக்கப்பட்ட மக்களுக்கு நீதி கிடைக்க வேண்டும். இது முதலாவது விடயம். இரண்டாவது விடயம், தமிழ் மக்களைப் பொறுத்தவரை ஆயுதப் போராட்டத்தில் ஈடுபட்ட மக்கள் என்ற அடிப்படையில் போராட வந்து அதில் உயிர்நீத்த அனைவருக்குமாக ஒரு பொது நினைவுச்சின்னத்தை உருவாக்கக்கூடிய சூழல் இன்றுவரை உருவாகவில்லை என்பதனை இங்கே சுட்டிக்காட்ட வேண்டும். அப்படி ஒரு நினைவு சின்னத்தை உருவாக்குவது என்றால் அதற்கு முதலில் தமிழ்மக்கள் மத்தியில் போராட்டத்தில் ஈடுபட்ட அனைவருக்குமான ஒரு பொது நினைவு நாளை கண்டுபிடிக்க வேண்டும். ஆனால் இப்பொழுதும் தமிழ்த் தேசிய அரசியலில் ஒவ்வொரு இயக்கங்களுக்கும், கட்சிக்கும், தனிநபர்களுக்குமான நினைவு நாட்களும் நினைவுச் சின்னங்களுந்தான் உண்டு. ஒரு பொதுவான நினைவு நாளை கண்டுபிடிக்கும் அளவுக்கு தமிழ்த்தேசிய அரசியலின் ஜனநாயக இதயம் இனிமேற்றான் செழிப்படைய வேண்டியிருக்கிறது. அதனால் ஒரு பொது நினைவுச் சின்னத்துக்கு இப்பொழுதும் வாய்ப்பில்லை.

அவ்வாறான ஒரு பொது நினைவுச் சின்னத்தை குறித்து நான் ஏற்கனவே எழுதியுள்ளேன். அதை ஏற்றுக் கொள்ளாதவர்கள் முன்வைக்கும் வாதம் என்னவென்றால், தியாகிக்கும், துரோகிக்கும் ஒரேடியாக நினைவுச் சின்னத்தை அமைப்பதா என்பதுதான்.

அவர்களுக்கு பொது நினைவுச் சின்னம் என்றாலே என்னவென்று தெரியவில்லை. உலகில் இதுவரை உருவாக்கப்பட்ட இதுபோன்ற பொது நினைவு சின்னங்களுக்கு முகம் கிடையாது. தனிப்பட்ட கட்சி அல்லது இயக்க அடையாளம் கிடையாது. அந்நினைவு சின்னம் அரூபமானது. அது தமிழ் மக்களுக்காக போராட வந்த எல்லோருக்குமானது. ஒரு இயக்கத்துக்கு உரியது அல்ல. ஒரு கட்சிக்கு உரியது அல்ல. அது பொதுவானது. ஒரு தேசத்துக்கானது. ஆனால் அப்படி ஒரு நினைவுச் சின்னத்தை தமிழ் மக்கள் இன்றுவரை கண்டுபிடிக்க முடியாதிருக்கிறார்கள்.

அப்படி ஒரு நினைவுச் சின்னத்தை குறித்து உரையாடும் பொழுது இங்கு தென்னாபிரிக்க உதாரணத்தைக் காட்டலாம். தென்னாபிரிக்காவில் “சுதந்திரப் பூங்காவில்” அவ்வாறான ஒரு சின்னம் உண்டு. அந்த நாட்டின் வெவ்வேறு பிராந்தியங்களில் இருந்து கொண்டுவரப்பட்ட அந்தந்த பிராந்தியங்களின் மண்ணின் இயல்பைப் பிரதிபலிக்கும் பாறைகள் அங்கே ஓர் ஒழுங்கிற்குள் வைக்கப்பட்டுள்ளன. அந்தப் பாறைகளுக்கு இடையிலான நிலப் பரப்பிலிருந்து புகை எழுந்தபடியிருக்கும். தென்னாபிரிக்கர்களைப் பொறுத்தவரை புகையானது இறந்தவர்களின் ஆத்மாக்களோடு தொடர்பு கொள்வதற்கான ஒரு ஊடகமாகக் கருதப்படுகிறது. தென்னாபிரிக்காவில் சுதந்திரப் பூங்கா என்று அழைக்கப்படும் நினைவு வளாகமானது இனப்படுகொலைக்கு எதிரான ஒரு நினைவு வளாகமாகவும் வடிவமைக்கப்பட்டிருக்கிறது. அந்த வளாகம் அமைந்திருக்கும் நிலப்பரப்புக்கு நேர் எதிராக தென்னாபிரிக்கர்களை அடிமை கொண்ட டச்சு ஆக்கிரமிப்பாளர்களின் நினைவுச் சின்னம் காணப்படுகிறது.

தென்னாபிரிக்காவில் கறுப்பின மக்களுக்கு அரசியல் விடுதலை கிடைத்துவிட்டது. அதைவிட முக்கியமாக அங்கே நெல்சன் மண்டேலா என்ற ஒரு மகத்தான ஆளுமை இருந்தது. அது பண்புருமாற்றத்துக்கு- **Transformation**- தலைமை தாங்கியது. நிலைமாறுகால நீதிச் செய்முறைகளுக்கு தலைமை தாங்கியது. எனினும் அங்கே போரில் ஈடுபட்ட வெவ்வேறு இனக்குழுக்களுக்கு இடையே ஆறாத காயங்கள் இப்பொழுதும் உண்டு. பகையும் வன்மமும் பழிவாங்கும் உணர்ச்சியும் உண்டு. இந்த அடிப்படையில் சிந்தித்தால் தென்னாபிரிக்காவில் ஒரு சுதந்திரப் பூங்காவை உருவாக்கியது போன்று இலங்கைத்தீவில் தமிழ் மக்கள் ஒரு நினைவு வளாகத்தை உருவாக்க முடியுமா ?

நிச்சயமாக இல்லை. ஏனென்றால் இங்கே நிலைமாற்றம் அல்லது பண்புருமாற்றம் ஏற்படவில்லை. அது, மூன்று இனங்களுக்கிடையில் மட்டுமல்ல, தமிழினத்துக்குள்ளும் இனிமேற்றான் ஏற்பட வேண்டியிருக்கிறது. இவ்வாறான ஓர் அரசியற் சூழலில் பொதுவான ஒரு நினைவுச் சின்னத்தை குறித்த உரையாடல்களுக்கு இலங்கைத்தீவும் தயாராக இல்லை. தமிழரசியலும் தயாராக இல்லை.






# எல். ஜி. பி. ரி. கியூ சமூகத்தவர் கொழும்பில் அணிவகுப்பு!

கொழும்பு, ஜூன் 05

நாட்டின் எல். ஜி. பி. ரி. கியூ எனப்படும் ஓரின, மாற்றுப் பாலின சேர்க்கையாளர்கள் 'சுதந்திரத்தின் பெருமித அணிவகுப்பு' என்ற கருப்பொருளில் நேற்று கொழும்பு வீதிகளில் அணிவகுத்துச் சென்றனர். அத்துடன், தமது உரிமைகள் மற்றும் அக்கறைகளை வெளிப்படுத்தும் கலாசார விழாவில் பங்குகொண்டனர்.

பல்வேறு வண்ணமயமான ஆடைகளை அணிந்த எல். ஜி. பி. ரி. கியூ சமூகத்தினரும், அவர்களின் உரிமைக்காக குரல் கொடுப்பவர்களும் தாமரை கோபுர சுற்றுவட்டத்தில் இருந்து அணிவகுப்பில் பங்கேற்று கிறீன் பாத் வழியாக கொள்ளுப்பிட்டி வரை சென்றனர்.

பங்கேற்பாளர்கள் பல்வேறு செய்திகளைத் தாங்கிய சுவரொட்டிகளை காட்சிப்படுத்தினர். அண்மையில் கைது செய்யப்பட்ட நடாஷா எதிரிசூரியவை விடுவிக்குமாறும் கோரப்பட்டது. (ஐ)

# அரசியல்வாதிகள் மாத்திரமே அரசுக்கு எதிராக போராடுகின்றனர்!

## அமைச்சர் பிரசன்ன ரணதுங்க

கொழும்பு, ஜூன் 05

அரசாங்கத்துக்கு எதிராக நாட்டு மக்கள் எவரும் போராட்டத்தில் ஈடுபடமாட்டார்கள். அரசியல்வாதிகள் மாத்திரமே போராட்டத்தில் ஈடுபடுவார்கள். பொருளாதார நெருக்கடிக்கு தீர்வு காண அரசாங்கத்துக்கு முழுமையான ஒத்துழைப்பு வழங்குவார்கள் என வீடமைப்பு அபிவிருத்தி அமைச்சர் பிரசன்ன ரணதுங்க தெரிவித்தார்.

கம்பஹா பகுதியில் சனிக்கிழமை நடைபெற்ற நிகழ்வில் கலந்துக் கொண்டதன் பின்னர் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் குறிப்பிட்டதாவது,

அரசாங்கத்துக்கு எதிராக எதிர்வரும் 8ஆம் திகதி நாட்டு மக்களை ஒன்றுத்திரட்டுவதாக மக்கள் விடுதலை முன்னணியின் தலைவர் குறிப்பிட்டுள்ளார். மக்கள் போராட்டத்தை நாங்களும் எதிர்பார்த்த வண்ணம் இருக்கிறோம்.

அரசாங்கத்துக்கு எதிராக நாட்டு மக்கள் எவரும் போராட்டத்தில் ஈடுபடமாட்டார்கள். எரிபொருள், மின்சார விநியோகம் ஆகிய அத்தியாவசிய சேவைகளில் ஏற்பட்ட பாதிப்பால் மக்கள் கடந்த ஆண்டு போராட்டத்தில் ஈடுபட்டார்கள். மக்களின் ஜனநாயக போராட்டத்தை மக்கள் விடுதலை முன்னணியினர் கொள்ளையடித்தார்கள்.

பாரிய பொருளாதாரப் பாதிப்பில் இருந்து நாடு தற்போது வழமைக்கு திரும்பியுள்ளது. அத்தியாவசிய பொருட்களின் விலைகள் குறைவடைந்துள்ளன.

பொருளாதார நெருக்கடிக்கு தீர்வுகாண்பதற்கு மக்கள் அரசாங்கத்துக்கு ஒத்துழைப்பு வழங்குவார்கள். அரசியல்வாதிகள் மாத்திரமே போராட்டத்தில் ஈடுபடுவார்கள்.

அனைத்து பல்கலைக்கழக மாணவர் ஒன்றியத்தின் முன்னிலை தரப்பினர்கள் ஒட்டுமொத்த மாணவர்களின் எதிர்காலத்தையும் இல்லாதொழிக்கிறார்கள். பலவந்தமான முறையில் தான் பல்கலைக்கழக மாணவர்கள் போராட்டத்தில் ஈடுபடுத்தப்படுகிறார்கள் - என்றார். (ஐ)

# பலாலியிலிருந்து 7 நாட்களும் விமான சேவை நடத்த பேச்சு

கொழும்பு, ஜூன் 05

யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தில் இருந்து வாரத்தின் ஏழு நாட்களும் சேவைகளை முன்னெடுப்பது தொடர்பில் இந்திய உயர்ஸ்தானிகருடன் கலந்துரையாடப்பட்டதாக துறைமுகங்கள், மற்றும் விமான சேவைகள் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தெரிவித்தார்.

தற்போது வாரத்தில் நான்கு நாட்கள் மாத்திரமே யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்திலிருந்து சேவைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

மேலும், யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தின் ஓடுதளத்தை விஸ்தரிப்பதற்கான கடன் வசதியை இந்தியாவிடம் இருந்து எதிர்பார்த்திருப்பதாகவும் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா குறிப்பிட்டார்.

இந்த கடனுதவி கிடைக்கப்பெற்றதும் விமான நிலையத்தின் விஸ்தரிப்புப் பணிகளை மேற்கொள்ள முடியுமென அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா சுட்டிக் காட்டினார். (ஐ)






# திருமலை மக்கள் பிரச்னைகளுக்கு தீர்வு காண்பதற்கு நடமாடும் சேவை

## ஆளுநர் அலுவலகத்தின் ஏற்பாட்டில்

திருகோணமலை, ஜூன் 05

**திருகோணமலை மாவட்ட மக்களின் பிரச்னைகளுக்கு 'உரிய இடத்தில் தீர்வு' வழங்கும் நோக்கில், நடமாடும் சேவை கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான் தலைமையில் நடைபெறவுள்ளது என்று கிழக்கு மாகாண ஆளுநர் செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஏ. எஸ். எம். பாயிஸ் தெரிவித்தார்.**

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமானின் அறிவுறுத்தல்களுக்கு அமைவாக, ஆளுநர் செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட இந்த நடமாடும் சேவை நாளை மறுதினம் புதன்கிழமை முற்பகல் 11.00 மணியிலிருந்து பிற்பகல் 4.00 மணிவரை திருகோணமலை மாவட்ட செயலகத்தில் நடைபெறவுள்ளது.

திருகோணமலை மாவட்டத்திலுள்ள பொதுமக்கள் எதிர்நோக்கி வருகின்ற பிரச்னைகளை குறித்த தினத்தில் தெரிவிக்க முடியும். அவ்வாறு தெரிவிக்கப்படுகின்ற பிரச்னைகள் பற்றிய விடயங்களை சம்பந்தப்பட்ட மாகாண அமைச்சுக்களின் செயலாளர்கள், திணைக்களத் தலைவர்கள் மீளாய்வு செய்த பின்னர், அவர்களுக்கான தீர்வை அன்றையதினம் 2.00 மணியிலிருந்து கிழக்கு மாகாண ஆளுநரால் வழங்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டது.

குறிப்பாக, அன்றையதினம் பொதுமக்களின் பிரச்னைகளுக்கு மாத்திரமே தீர்வு வழங்கப்படவுள்ளதால் அரச ஊழியர்களின் இடமாற்றம் தொடர்பான எந்தப் பிரச்னைகளும் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்றும் கிழக்கு மாகாண ஆளுநர் செயலக திட்டமிடல் பணிப்பாளர் ஏ. எஸ். எம். பாயிஸ் சுட்டிக்காட்டினார். (ஐ)

# 165 மதுபான போத்தல்களுடன் மட்டக்களப்பில் பெண் கைது!

மட்டக்களப்பு, ஜூன் 05

அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமாக மதுபான விற்பனையில் ஈடுபட்ட பெண் ஒருவர் மதுபான போத்தல்களுடன் கைது செய்யப்பட்டுள்ளார்.

மட்டக்களப்பு பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட புன்னைச்சோலை, குமாரபுரம் பகுதியிலேயே அவரை பொலிஸார் கைது செய்தனர்.

மட்டக்களப்பு தலைமையக பொலிஸ் பொறுப்பதிகாரி ஜயந்த பண்டாரவுக்கு கிடைத்த இரகசிய தகவலுக்கு அமைய, உப பொலிஸ் பரிசோதர்களான சகித் மற்றும் கிருபாகரன் உட்பட்ட பொலிஸ் அதிகாரிகள் நடத்திய சோதனை நடவடிக்கையிலேயே அந்தப் பெண் கைதானார்.

மதுபான விற்பனையில் ஈடுபட்ட பெண்ணிடம் இருந்து 180 மில்லி லீற்றர் நிறையுடைய 165 மதுபான போத்தல்கள் கைப்பற்றப்பட்டன என்று பொலிஸார் தெரிவித்தனர். (ஐ)

# கண்ணகைக்கு நாளை திருக்குளிர்த்தி

காரைதீவு, ஜூன் 05

காரைதீவு கண்ணகை அம்மன் ஆலய வருடாந்த வைகாசித் திங்கள் திருக்குளிர்த்தி பாடும் முக்கிய சடங்கு நாளை செவ்வாய்க்கிழமை அதிகாலை நடைபெறும்.

எட்டாம் சடங்கு எதிர்வரும் 12ஆம் திகதி திங்கட்கிழமை மாலை நடைபெறம். இந்நிகழ்வுகள் அனைத்தும் பண்டைய கலாசார பாரம்பரிய முறைப்படி நடைபெற்று வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மட்டு., திருமலை சிறைகளில் இருந்து 9 கைதிகள் விடுதலை!

திருகோணமலை, ஜூன் 05

பொசன் தினத்தை முன்னிட்டு ஜனாதிபதியின் பொது மன்னிப்பின் கீழ் திருகோணமலை, மட்டக்களப்பு சிறைச்சாலைகளில் இருந்து 9 பேர் நேற்று முன்தினம் விடுதலை செய்யப்பட்டனர்.

திருகோணமலை சிறைச்சாலை பிரதம சிறை காவலர் ஆர். மோகனராஜா தலைமையில் நடைபெற்ற கைதிகளை விடுதலை செய்யும் நிகழ்வில், சிறுகுற்றம், தண்டப்பணம் செலுத்தாத இரு கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர்.

இதேபோன்று மட்டக்களப்பு மாவட்ட சிறையிலிருந்து 7 கைதிகள் விடுதலை செய்யப்பட்டனர் என்று பிரதம சிறை காவலர் பிரபாகரன் தெரிவித்தார். விடுதலையானவர்களில் ஒரு பெண் கைதியும் அடங்குவார். (ஐ-04)

# மூதூர் குடிதண்ணீர் பிரச்னைக்கு நிரந்தர தீர்வு காண நடவடிக்கை

திருகோணமலை, ஜூன் 05

பல வருடங்களாக மூதூர் மற்றும் தோப்பூர் பிரதேசங்கள் எதிர்நோக்கி வருகின்ற குடிதண்ணீர் பிரச்னையின் உண்மைத் தன்மையை இனங்கண்டு அதற்கான நிரந்தர தீர்வை பெற்றுக் கொடுப்பதற்காக திருகோணமலை மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் எம் எஸ் தௌபீக் எம்.பி நீலாப்பொலை நீரேற்றும் நிலையத்துக்கு நேற்று சென்று நிலைமைகளை அவதானித்தார்.

இதன்போது, நீரேற்றும் நிலையத்துக்கு மகாவலி நீர் வருவதில்லை. தற்போது, நீர் இறைக்கும் இயந்திரத்தின் மூலம் நீரேற்றும் இடத்துக்கு தண்ணீர் கொண்டுவரப்படுகிறது. நீர் இறைக்கும் இயந்திரத்திற்கு ஏதாவது கோளாறு ஏற்படுமாக இருந்தால் நீர் விநியோகம் தடைப்படும் என்ற விடயங்கள் எம். பிக்கு தெரியப்படுத்தப்பட்டன.

இதைத் தொடர்ந்து இந்தப் பிரச்னையை நிவர்த்தி செய்வதற்கு திட்டவரைவு ஒன்றை கிழக்கு மாகாண பிரதி பொது முகாமையாளரிடம் கோரியுள்ளதாகவும் விரைவில் உரிய அமைச்சு மற்றும் திணைக்களங்களில் அனுமதியை பெற்று நிரந்தரதீர்வைப் பெற்றுக்கொள்ள நடவடிக்கை எடுப்பதாகவும் தெரிவித்தார்.

இதன்போது, உதவிப் பொறியியலாளர்களான அரபாத் மற்றும் சர்ஜூன் ஆகியோரும் உடனிருந்தனர். (ஐ-04)

# மூவின மாணவர் இணைந்து நல்லிணக்க கலை நிகழ்ச்சி!




காரைதீவு, ஜூன் 05

அம்பாறையில் வன்முறை, தீவிரவாதத்துக்கு எதிராக மாணவர்களின் மீளெழும் சக்தியை கட்டியெழுப்பும் நோக்கில் செயல்படுத்தப்பட்டு வந்து 'எம்பவர்' செயல்திட்டத்தின் இறுதி நிகழ்வு சம்மாந்துறையில் நடைபெற்றது.

மூவின மாணவர்களின் திறமையை வெளிக் கொண்டுவரும் கலை, திட்ட நிகழ்வாக இது நடைபெற்றது.

சுவாட் நிறுவனத்தின் நிகழ்ச்சித்திட்ட முகாமையாளர் க. பிறேமலதன் தலைமையில் சம்மாந்துறை அப்துல் மஜீத் மண்டபத்தில் பிரமாண்டமான முறையில் நடத்தப்பட்டது.

இந்த நிகழ்வுக்கு பிரதம அதிதிகளாக சம்மாந்துறை பிரதேச செயலகத்தின் உதவி பிரதேச செயலாளர் யூ. எல். அஸ்லம், சம்மாந்துறை வலய உதவி கல்விப் பணிப்பாளர் வி. ரி. சகாதேவராஜா, சம்மாந்துறை கோட்டக்கல்விப் பணிப்பாளர் எம். ரி. எம். ஜனுபர், அரச சார்பற்ற அமைப்புகளின் இணைப்பாளர் யூ. எல். இர்வான் நாவிதன்வெளி அன்னமலை தேசிய பாடசாலையின் அதிபர் திருமதி நிலந்தினி ரவிச்சந்திரன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

சுவாட் நிறுவனமானது ஜி. சி. ஈ. ஆர். எவ். மற்றும் ஹெல்டிவடாஸ் நிறுவனத்தின் நிதி உதவியுடன் திருக்கோவில், சம்மாந்துறை, உகன ஆகிய கல்வி வலயங்களுக்கு உட்பட்ட12 பாடசாலைகளை தெரிவு செய்து அங்கு கல்வி பயிலுகின்ற 15 தொடக்கம் 17 வயதுக்கு உட்பட்ட மாணவர்களை இலக்குக் குழுக்களாகக் கொண்டு வன்முறை தீவிரவாதத்துக்கு எதிராக மாணவர்களின் மீளெழும் சக்தியை கட்டியெழுப்பி அவர்களிடையே நல்லிணக்கத்தை ஏற்படுத்தும் முகமாக நடைமுறைப்படுத்தப்பட்டு வந்த செயல்திட்டம் நிறைவுற்றது.

இந்நிகழ்வுகளில் மூவின மாணவர்களின் திறமைகளை வெளிக் கொண்டுவரும் நோக்கில் சமாதானம் மற்றும் நல்லிணக்கம் போன்ற தொனிப் பொருளில் பல கலைநிகழ்ச்சிகள் மாணவர்களால் நடத்தப்பட்டன. (ஐ)

# உயிர் பல்வகைமை பாதுகாப்பு; விழிப்புணர்வும் சிரமதானமும்!



மட்டக்களப்பு, ஜூன் 05

தேசிய சுற்றாடல் தின கொண்டாட்ட நிகழ்ச்சித் திட்டம் 2023ஐ முன்னிட்டு, 'உயிர் பல்வகைமை பாதுகாப்பு தினம்' எனும் தொனிப்பொருளில் மட்டக்களப்பு குருக்கள்மடம் ஏத்தாளைக் குளத்தை மையப்படுத்தியதாக விழிப்புணர்வு மற்றும் சிரமதானம் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் திருமதி சிவப்பிரியா வில்வரத்னம் தலைமையில் 'உயிர்ப் பல்வகைமையும், ஏத்தாளைக் குளமும்' எனும் தலைப்பில் நிகழ்வுகள் முன்னெடுக்கப்பட்டன. ஏத்தாளை குளத்தின் பெருமையை வெளிக்கொண்டு வரும் முகமாக, பிரதேச சுற்றாடல் உத்தியோகத்தர் திருமதி ரஜனி பாஸ்கரனால் விழிப்புணர்வு கருத்துரையும் ஆற்றப்பட்டது.

நிகழ்வில் உதவி பிரதேச செயலாளர் திருமதி சத்யகௌரி தரணிதரன், அலுவலக உத்தியோகத்தர்கள் , ஆலயங்களின் பிரதிநிதிகள், பாடசாலை மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டனர்.

இந்த நிகழ்வை குருக்கள்மடம் ஐயனார் ஆலயம் மற்றும் செல்லக்கதிர்காம ஆலயத்தின் நிர்வாகத்தினர் இணைந்து ஒழுங்கமைப்பு செய்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# காத்தான்குடி பொலிஸால் தானங்கள் வழங்கப்பட்டன



காத்தான்குடி, ஜூன் 05

பொசன் தினத்தை முன்னிட்டு, மட்டக்களப்பு காத்தான்குடி பொலிஸ் நிலையத்தின் ஏற்பாட்டில் தானம் வழங்கும் நிகழ்வு இடம்பெற்றது.

காத்தான்குடி பொலிஸ் நிலைய பதில் பொறுப்பதிகாரி உவைஸ், காத்தான்குடி பொலிஸ் நிலைய குற்றத் தடுப்பு பிரிவு பொறுப்பதிகாரி ரஹீம் ஆகியோரின் தலைமையில் இந்த தானம் வழங்கும் நிகழ்வு நடைபெற்றது.

இதன் போது வீதியில் சென்ற பயணிகள் பொதுமக்களுக்கு பிஸ்கெற் மற்றும் குளிர்பானம் என்பன வழங்கப்பட்டன. (ஐ)

# ஒடிசாவில் 3 ரயில்கள் விபத்து; உயிரிழப்பு 288ஆக அதிகரிப்பு

**-1,000இற்கும் மேற்பட்டோர் காயம்**
**- பலர் கவலைக்கிடமான நிலையில்**



சென்னை, ஜுன் 05

**ஒடிசாவில் சென்னை கோரமண்டல் எக்ஸ்பிரஸ் உள்ளிட்ட 2 பயணிகள் ரயில், ஒரு சரக்கு ரயில் மோதிய பயங்கர விபத்தில் உயிரிழந்தோர் எண்ணிக்கை 288 ஆக அதிகரித்துள்ளது. ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் படுகாயமடைந்துள்ளனர்.**

விபத்து நடந்த இடத்தை இந்தியப் பிரதமர் நரேந்திர மோடி பார்வையிட்டு ஆய்வு செய்தார். காயமடைந்தவர்களை சந்தித்து ஆறுதல் கூறினார்.

மேற்கு வங்க தலைநகர் கொல்கத்தாவில் இருந்து வெள்ளிக்கிழமை பிற்பகல் 3.20 மணிக்கு புறப்பட்ட ஷாலிமார் - சென்னை சென்ட்ரல் கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயில், இரவு 7 மணி அளவில் ஒடிசாவின் பாலசோர் - பத்ரக் ரயில் நிலையங்கள் இடையே பாஹாநாகா பஜார் பகுதியில் வந்து கொண்டிருந்தது. அப்போது, பிரதான தண்டவாளத்தில் இருந்து இணைப்பு தண்டவாளத்துக்கு ரயில் மாறியுள்ளது. இணைப்பு தண்டவாளத்தில் ஏற்கெனவே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த சரக்குரயில் மீது கோரமண்டல் எக்ஸ்பிரஸ் ரயில் பயங்கர வேகத்தில் மோதியது. இதில் சரக்கு ரயிலின் 2 பெட்டிகளை நொறுக்கி 3ஆவது பெட்டியின் மீது பயணிகள் ரயிலின் இன்ஜின் ஏறியது. மோதிய வேகத்தில், கோரமண்டல் ரயிலின் 21 பெட்டிகள் தடம் புரண்டு, 3ஆவது தண்டவாளத்தின் குறுக்கே நின்றன.

அதே நேரம், பெங்களூரு வில் இருந்து ஹவுரா செல்லும் சுப்பர் பாஸ்ட் எக்ஸ்பிரஸ் ரயில் எதிர்திசையில் அதே பகுதியில் அதிவேகமாக வந்து கொண்டிருந்தது.

அப்போது, தண்டவாளத்தின் குறுக்கே நின்றிருந்த கோரமண்டல் ரயில் பெட்டிகள் மீது பெங்களூர் - ஹவுரா ரயில் மோதி தடம் புரண்டது. இந்த விபத்தில் கோரமண்டல் ரயிலின் 3 பெட்டிகள், ஹவுரா ரயிலின் 2 பெட்டிகள் முற்றிலுமாக உருக்குலைந்தன.

இந்த விபத்தில் 288 பேர் உயிரிழந்தனர். ஆயிரத்துக்கும் மேற்பட்டோர் காயமடைந்துள்ளனர். அவர்களில் 650இற்குக்கும் மேற்பட்டோர் சிகிச்சை பெற்று வருகின்றனர் என்று தென்கிழக்கு ரயில்வே தெரிவித்துள்ளது. படுகாயம் அடைந்தவர்களில் பலரது நிலைமை கவலைக்கிடமாக இருப்பதால், உயிரிழப்பு 500ஐ தாண்டும் என்று அஞ்சப்படுகிறது. கடந்த 42 ஆண்டுகளில் ஏற்பட்ட பெரிய ரயில் விபத்துகளில் இது ஒன்றாக இருக்கும் என்று ரயில்வே வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்த விபத்து தொடர்பில் உயர்மட்ட விசாரணைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

(ஐ)

# பூமியில் பாதுகாப்பான வாழ்வுக்கான 8இல் 7 வரம்பை மனிதன் கடந்துவிட்டான்!

வாஷிங்டன், ஜுன் 05

புவியில் வாழ்வதற்கான 8 பாதுகாப்பான வரம்புகளில் 7ஐ மனிதர்கள் தாண்டிவிட்டனர் என ஓர் ஆய்வில் தெரிவிக்கப்பட்டுள்ளது.


ஆபிரிக்காவிலிருந்து அமெரிக்கா வரை மிகவும் சிக்கலான 'வெப்ப பகுதிகள்' நாம் விரைவில் விழித்துக் கொள்ளாவிட்டால், பூமியில் உள்ள உயிர்கள் அழிந்துவிடும் என புவி ஆணையம் நடத்திய ஆய்வில் தெரியவந்துள்ளது.

40 முன்னணி சர்வதேச இயற்கை மற்றும் சமூக விஞ்ஞானிகளை கொண்ட புவி ஆணையம் புவி எதிர்கொள்ளும் முக்கிய பிரச்னைகள் மற்றும் அவற்றின் காரணங்கள் குறித்து சமீபத்தில் ஆய்வு நடத்தியது.

இதுகுறித்த அறிக்கை நேச்சர் இதழில் வெளியிடப்பட்டுள்ளது. அதில், அதிகப்படியான வளங்கள் சுரண்டல், அலட்சியம், பல சுயநல குற்றங்களால் பூமியை நாசமாக்கிக் கொண்டிருக்கிறோம். மனித ஆதிக்கம் பூமியின் முக்கிய அமைப்புகளின் ஸ்திரத்தன்மையை படிப்படியாக சீர்குலைத்து வருகிறது.

எதிர்கால சந்ததியினர் மற்றும் பூமியில் உள்ள அனைத்து உயிரினங்களையும் நாம் பெரும் ஆபத்தில் ஆழ்த்துகிறோம்.

புவி வெப்பமடைதல், வறட்சி, கடும் வெள்ளம் போன்ற சீற்றங்களால் பூமியின் ஆக்கிரமிப்புகளை நாம் கவனிக்கவில்லை என்றால் நிலைமை கைமீற அதிக காலம் எடுக்காது. ஆய்வின் ஒரு பகுதியாக, சமநிலை முற்றிலுமாக சீர்குலைந்து மிகவும் சிக்கலாக மாறிய பல பகுதிகளை ஆய்வுக் குழு கண்டறிந்து உள்ளது. இதனை வெப்ப பகுதிகள் என அழைக்கிறார்கள். உலகெங்கிலும் உள்ள ஒவ்வொரு கண்டத்திலும் இதுபோன்ற வெப்ப பகுதிகள் இருப்பது கவலையளிக்கிறது என்று விஞ்ஞானிகள் கூறுகின்றனர்.




இதில் பல பகுதிகளில் ஏற்படும் பிரச்னைக்கு பருவநிலை மாற்றமே முக்கிய காரணம் என கண்டறியப்பட்டுள்ளது. குறிப்பாக ஆசியாவில் கிரையோஸ்பியர் மலை விரைவான மாற்றங்களுக்கு உட்பட்டு வருகிறது. பனிப்பாறைகள் உருகுவதில் தொடங்கி, நடக்கக்கூடாத அனைத்து எதிர்மறை விளைவுகளும் அபாயகரமான வேகத்தில் நடந்து வருகின்றன. இதன் விளைவாக, முழு பிராந்தியமும் மிக விரைவில் சமூக மற்றும் பொருளாதார எழுச்சிகளை சந்திக்கும்" என்று இணை ஆராய்ச்சியாளர் பேராசிரியர் கிறிஸ்டி ஏபி எச்சரித்து உள்ளார்.

நில பாதுகாப்பு தொடர்பாக சுமார் 8 வகையான குறிகாட்டிகள் முக்கியமானதாக சுற்றுச்சூழல் வல்லுநர்கள் கருதுகின்றனர். புவி ஆணையத்தின் ஆய்வில் 7 குறியீடுகள் அங்கீகரிக்கப்பட்ட வரம்பை தாண்டி ஆபத்தான நிலையை எட்டியுள்ளதாக முடிவு செய்யப்பட்டுள்ளது.

# பிறந்து மூன்று நாட்களில் நகர்ந்த பெண் குழந்தை!

நியூயோர்க், ஜுன் 05

பிறந்து 3 நாட்களிலே குழந்தை ஒன்று தலையை தூக்கிய நிலையில் நகர்கின்ற காணொலி ஒன்று சமூக வலைதளங்களில் வைரலாகி வருகிறது. இந்த நிகழ்வு அமெரிக்காவில் நடந்துள்ளது.

பெனிசில்வேனியா சேர்ந்தவர் சமந்தா எலிசபெத். இவருக்கு பெப்ரவரி மாதம் நைலா என்ற குழந்தை பிறந்துள்ளது. இக்குழந்தை பிறந்த மூன்று நாட்களில் குப்புறப்படுத்து தலையை தூக்கி நகரத் தொடங்கியிருக்கிறது. இதனை சற்றும் எதிர்பாராத சமந்தா தனது போனில் அதனை காணொலியாக பதிவு செய்திருக்கிறார். தற்போது இந்த காணொலி வைரலாகியது.

இதுகுறித்து சமந்தா கூறும் போது, "முதல் தடவை அவள் தனது இடத்திலிருந்து நகர்வதை பார்த்து நான் ஆச்சரியம் அடைந்தேன். என் வாழ்க்கையில், பிறந்த குழந்தை ஒன்று இவ்வளவு விரைவாக நகர்ந்ததை நான் பார்த்ததில்லை. என் குழந்தை நகர்ந்தபோது அருகில் எனது அம்மா மட்டுமே இருந்தார். நான் இந்த காணொலியை எடுக்காமல் இருந்திருந்தால் என் கணவர் உட்பட யாரும் இதனை நம்பி இருக்க மாட்டார்கள்" என்றார்.

குழந்தைகள் பெரும்பாலும் 8 -9 மாதங்களில் தான் நகரும். இந்த நிலையில் மூன்று நாட்களில் நைலா நகர்ந்த காணொலி சமூக வலைதளங்களில் அனைவரையும் ஆச்சரியத்தில் ஆழ்த்தியுள்ளது.

(ஐ)



# இஸ்ரேலில் வெப்ப அலை; 220 பகுதிகளில் தீ விபத்து!

ஜெருசலேம், ஜுன் 05

இஸ்ரேல் நாட்டின் வெப்பநிலை மிக உச்சத்தை தொட்டுள்ளது. அங்கு, மத்திய, தெற்கு பகுதிகளில் 43 பாகை செலசியஸை வெப்பநிலை கடந்துள்ளது. இந்த நிலையில் வெப்ப அலை தாக்கத்தால் 220 திறந்தவெளி பகுதிகளில் தீ விபத்துகள் ஏற்பட்டுள்ளன.

இது இஸ்ரேல் வரலாற்றில் ஜுன் மாதத்தில் பதிவான அதிகபட்ச வெப்ப அளவாகும் என அந்த நாட்டின் வானிலை ஆய்வு மைய தரவுகள் கூறுகின்றன.

இந்த வெப்ப காற்று காரணமாக மின்துறையின் உள்கட்டமைப்பு சேதம், மின்சார தடைகள் போன்றவற்றை இஸ்ரேல் எதிர்கொண்டது. இதன் காரணமாக பல இடங்களில் தீ விபத்துகளும் ஏற்பட்டன. எனவே, இதன் பாதிப்புகளில் இருந்து தப்பிக்க இஸ்ரேல் அரசாங்கம் பொதுமக்களுக்கு பல்வேறு விழிப்புணர்வு ஏற்படுத்தி வருகிறது.

அதன் ஒருபகுதியாக அங்கு குளிர்காய்வதற்காக தீ மூட்டுவதால் வெப்பநிலை மேலும் அதிகரித்தது. இதையடுத்து அங்கு காலை 8 மணி முதல் நள்ளிரவு வரை தீ மூட்டுவதற்கு தடைவிதித்து அந்த நாட்டின் தீயணைப்பு ஆணையம் உத்தரவு பிறப்பித்துள்ளது.

இதனிடையே வெப்ப அலை காரணமாக இஸ்ரேல் நாட்டில் சுமார் 220 திறந்தவெளி பகுதிகளில் தீ விபத்து ஏற்பட்டதாக தீயணைப்பு துறை தெரிவித்தது. இதனால் ஏற்பட்ட சேத விவரங்கள் குறித்த தகவல்கள் இன்னும் தெரியவில்லை. எனினும் தீயணைப்பு துறையினரின் துரிதமான நடவடிக்கையால் பெரும் உயிர்ச்சேதம் தவிர்க்கப்பட்டதாக இஸ்ரேல் அரசாங்கம் தெரிவித்துள்ளது.

(ஐ)

# ஆப்கானை 132 ஓட்டங்களால் வெற்றி கொண்டது இலங்கை

கொழும்பு, ஜூன் 05

ஆப்கானிஸ்தான் அணியை 132 ஓட்டங்களால் வெற்றி கொண்டது இலங்கை அணி.

இலங்கை வந்துள்ள ஆப்கானிஸ்தான் அணி ஒருநாள் தொடரில் விளையாடி வருகின்றது. முதல் போட்டியில் ஆப்கானிஸ்தான் வென்ற நிலையில், நேற்று இரண்டாவது போட்டி நடந்தது.

முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட்களை 323 ஓட்டங்களைப் பெற்றது.

இதில், குஷல் மெண்டிஸ் 78, திமுத் கருணாரட்ண 52, சதீர சமரவீர 44, பதும் நிஷங்க 43 ஓட்டங்களைப் பெற்றனர்.

ஆப்கானின் பந்துவீச்சில் பிரீத் அஹமட், முஹமட் நபி தலா 2 விக்கெட்களை கைப்பற்றினர்.

பதிலுக்கு துடுப்பெடுத்தாடிய ஆப்கானிஸ்தான் அணிக்கு இப்ராகிம் ஷத்ரன் 54, ஷசீதி 57, ரஹ்மத் ஷா 36, ஒமர்ஷாய் 28 ஆகியோர் ஓட்டங்களை எடுத்த தனர். 42. 1 ஓவர்கள் நிறைவில் சகல விக்கெட்களையும் இழந்து.

பந்துவீச்சில் வனிந்து ஹசரங்க, தனஞ்சய டி சில்வா ஆகியோர் தலா 3 விக்கெட்களையும் துஷ்மந்த சாமீர 2 விக்கெட்களையும் கைப்பற்றினர்.





# பிரெஞ்சு ஓப்பன் ரெனிஸ் ரைபகினா விலகினார்!

பாரிஸ், ஜூன் 05

பிரெஞ்சு ஓப்பன் கிராண்ட்ஸ்லாம் ரென்னிஸ் போட்டியிலிருந்து ரைபகினா விலகியுள்ளார்.

மகளிர் 3ஆவது சுற்று ஆட்டத்தில் ஸ்பெயின் வீராங்கனை சாரா சோரிபெஸ் டோர்மோவும், கஜகஸ்தான் வீராங்கனை எலீனா ரைபகினாவும் மோத இருந்தனர். இதில் ஆட்டத்திலிருந்து எலீனா ரைபகினா விலகிக் கொண்டதால், சாரா வெற்றி பெற்றதாக அறிவிக்கப்பட்டார்.

மற்றொரு 3ஆவது சுற்று ஆட்டத்தில் அமெரிக்க வீராங்கனை கோகோ கவுப் 6-7 (5), 6-1, 6-1 என்ற செட் கணக்கில் ரஷ்ய வீராங்கனை மிர்ரா அன்ட்ரீவாவை வீழ்த்தினார். மற்றோர் ஆட்டத்தில் தரவரிசையில் முதலிடத்தில் இருப்பவரும் போலந்து நாட்டு வீராங்கனையுமான இகா ஸ்வியாரெக் 6-0, 6-0 என்ற நேர் செற் கணக்கில் சீனாவின் வாங் ஜின்யுவை சாய்த்தார். (ஐ)

# ஆஷஷ் டெஸ்ட் தொடருக்கான இங்கிலாந்து அணி அறிவிப்பு

லண்டன், ஜூன் 05

ஆஷஷ் தொடருக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. 5 போட்டிகள் கொண்ட இந்த தொடரில், தற்போது முதல் இரண்டு போட்டிகளுக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. வரும் 16ஆம் திகதி இந்த தொடர் தொடங்கவுள்ளது. உலகளவில் கிரிக்கெட் ரசிகர்கள் ஆஷஷ் டெஸ்ட் தொடரை ஆவலுடன் எதிர்பார்த்துள்ளனர்.

அவுஸ்திரேலியா மற்றும் இங்கிலாந்து அணிகளுக்கு இடையிலான இந்த தொடர் வரும் ஜூலை 31ஆம் திகதி நிறைவடைகிறது. இங்கிலாந்து அணிக்கு பென் ஸ்ரோக்ஸ் அணித் தலைவராக பொறுப்பேற்றநாளில் இருந்து புதிய பாய்ச்சலுடன் அந்த அணி விளையாடி வருகிறது. ஸ்ரோக்ஸ் தலைமையில் அதிரடி யுக்திகள் மூலம் இங்கிலாந்து அணி டெஸ்ட் கிரிக்கெட்டில் ஆதிக்கம் செலுத்தி வருவது குறிப்பிடத்தக்கது.

கடந்த முதலாம் திகதி அயர்லாந்து அணிக்கு எதிராக இங்கிலாந்து ஒரே ஒரு போட்டி கொண்ட டெஸ்ட் கிரிக்கெட் போட்டியில் விளையாடியது. இந்தப் போட்டி 3 நாட்களில் முடிவுக்கு வந்துள்ளது. இங்கிலாந்து அணி 10 விக்கெட்கள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றுள்ளது. இந்த போட்டியின் இரண்டாவது இன்னிங்ஸில் 5 விக்கெட்களை கைப்பற்றி அசத்தினார் அறிமுக வீரர் ஜோஷ் டங்க்.

முதல் இரண்டு போட்டிகளுக்கான இங்கிலாந்து அணி - பென் ஸ்ரோக்ஸ் (அணித் தலைவர்), ஜேம்ஸ் அண்டர்சன், ஜானி பெயரஸ்ரோவ், ஸ்ருவர்ட் பிரோட், ஹாரி புரூக், ஜாக் கிராலி, பென் டக்கெட், டான் லோரன்ஸ், ஜாக் லீச், ஒல்லி போப், மத்தியூ பட்ஸ், ஒல்லி ராபின்சன், ஜோ ரூட், ஜோஷ் டங்க், கிறிஸ் வோக்ஸ், மார்க் வூட்.







# பாகிஸ்தான் தொடருடன் வோர்ணர் ஓய்வு பெறுவார்?

லண்டன், ஜூன் 05

பாகிஸ்தானுக்கு எதிரான டெஸ்ட் கிரிக்கெட் தொடருக்கு பின்னர் அவுஸ்திரேலிய அணி வீரர் டேவிட் வோர்ணர் ஓய்வு பெறுவார் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டிக்காக லண்டன் நகருக்கு அவுஸ்திரேலிய அணி வீரர்கள் வந்துள்ளனர். பயிற்சியில் ஈடுபட்டிருந்தபோது அவர்களை செய்தியாளர்கள் சந்தித்தனர்.

அப்போது செய்தியாளர்களிடம் பேசிய வோர்ணர், நான் எனது குடும்பத்தாருக்கு கடமைப்பட்டிருக்கிறேன். நீண்ட காலம் அவர்களை பிரிந்து அணிக்காக விளையாடி வருகிறேன். தற்போது எங்களுக்கு உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டி சவாலாக அமைந்துள்ளது.

உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் போட்டியில் ஓட்டங்கள் குவித்தால் தொடர்ந்து விளையாடுவேன். இல்லாவிட்டால் பாகிஸ்தான் தொடருக்கு பின்னர் டெஸ்ட் போட்டிகளில் விளையாடமாட்டேன். நான் அனைத்துப் போட்டிகளையும் எனது இறுதிப் போட்டியாக நினைத்துதான் விளையாடுகிறேன். அதுதான் என்னுடைய ஸ்ரைலாக அமைந்துள்ளது. தொடர்ந்து அணி வீரர்களுடன் இணைந்து இருப்பது பிடித்திருக்கிறது.

நான் இருபது - 20 உலகக் கிண்ணத்தில் விளையாட வேண்டுமென்று நினைக்கிறேன். அதுதான் என் மனதில் திட்டமாக அமைந்துள்ளது. அதற்கு முன்பு நிறைய கிரிக்கெட் தொடர்களில் விளையாட வேண்டியுள்ளது. பெப்ரவரியுடன் டெஸ்ட் தொடர்கள் முடிந்தாலும் ஐ.பி. எல். மற்றும் பல கிரிக்கெட் தொடர்களில் விளையாடுவேன் - என்றார்.



# பிரெஞ்சு ஓப்பன் ரெனிஸ் காஸ்பர் ரூட் முன்னேற்றம்!

பாரிஸ், ஜூன் 05

பிரெஞ்சு ஓப்பன் ரென்னிஸ் தொடரில் நோர்வேயின் காஸ்பர் ரூட் காலிறுதிக்கு முந்தைய சுற்றுக்கு முன்னேறியுள்ளார்.

பிரெஞ்சு ஓப்பன் கிராண்ட்ஸ்லம் ரென்னிஸ் போட்டி பிரான்ஸ் தலைநகர் பாரிஸில் நடைபெற்று வருகிறது.

நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஆடவர் ஒற்றையர் பிரிவு 3ஆவது சுற்றில் நோர்வேயின் காஸ்பர் ரூடும், சீன வீரர் ஜாங் ஜிசென்னும் மோதினர். இதில் காஸ்பர் ரூட் 4-6, 6-4, 6-1, 6-4 என்ற செற் கணக்கில் ஜாங் ஜிசென்னை வீழ்த்தி 4ஆவது சுற்றுக்கு முன்னேறினார்.

ஆடவர் ஒற்றையர் 3ஆவது சுற்று ஆட்டங்களில் ஜப்பானின் யோஷிடோ நிஷியோகா, டென்மார்க்கின் ஹோல்கர் ரூனே, சிலி வீரர் நிக்கோலஸ் ஜாரி, அர்ஜென்டினா வீரர் தாமஸ் மார்ட்டின் எட்செவேரி உள்ளிட்டோரும் வெற்றி பெற்று அடுத்த சுற்றுக்கு முன்னேற்றம் கண்டனர். (ஐ)

# கஜேந்திரகுமாருக்கு அச்சுறுத்தல் அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவு!

## பொது மக்கள் பாதுகாப்பு அமைச்சர்



கொழும்பு, ஜுன் 05

**தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் பாராளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமாரின் உயிருக்கு ஆபத்து ஏற்படுத்தும் விதத்தில் இடம்பெற்ற சம்பவம் குறித்து அறிக்கை ஒன்றை சமர்ப்பிக்குமாறு பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் டிரான் அலஸ் உத்தரவிட்டுள்ளார்.**

கஜேந்திரகுமார் பொன்னம்பலம் தாக்கப்பட்டார் என்பதை ஏற்றுக்கொள்ள மறுத்த அமைச்சர் இந்த சம்பவம் தொடர்பில் அறிக்கை சமர்ப்பிக்குமாறு உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.

பொலிஸாரிடம் இது குறித்து முறைப்பாடுகள் எதுவும் முன்வைக்கப்படவில்லை எனத் தெரிவித்துள்ள அமைச்சர் அது தாக்குதல் சம்பவமில்லை என நான் கருதுகின்றேன் அந்த சம்பவம் குறித்து காணொலி உள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

கடந்த வெள்ளிக்கிழமை, வடமராட்சி கிழக்கில் விளையாட்டுகழகம் ஒன்றுடன் நான் சந்திப்பில் ஈடுபட்டிருந்தவேளை தான் பொலிஸ் உத்தியோகத்தர் என தெரிவித்த நபர் ஒருவர் என்னை தாக்கினார். பொலிஸ் விளையாட்டு சீருடையில் காணப்பட்ட மற்றுமொரு பொலிஸ் உத்தியோகத்தர் என்னை நோக்கி தனது பிஸ்டலால் இலக்குவைத்தார் என்று அண்மையில் கஜேந்திரகுமார் எம். பி. தெரிவித்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# 2024 முற்பகுதியில் ஜனாதிபதி தேர்தல்

கொழும்பு, ஜுன் 04

அடுத்த ஆண்டு தொடக்கத்தில் ஜனாதிபதி தேர்தலை நடத்த அரசாங்கம் திட்டமிட்டுள்ள தாக அரசியல் வட்டாரத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

அரசாங்கத்தின் வேலைத்திட்டம் தொடர்பில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அமைச்சரவை உறுப்பினர்கள், ஆளுங் கட்சி தலைவர்கள் மற்றும் பொது ஜன பெரமுனவின் மாவட்ட தலைவர்களை கடந்த திங்கட்கிழமை ஜனாதிபதி செயலகத்துக்கு அழைத்தார் என்று சிறி லங்கா பொதுஜன பெரமுனவின் சிரேஷ்ட அமைச்சர் ஒருவர் தெரிவித்தார்.

எதிர்மறை நிலையில் இருந்த நாட்டின் பொருளாதாரம் தற்போது பூச்சிய நிலைக்கு கொண்டு வரப்பட்டுள்ளதாக தெரிவித்த ஜனாதிபதி, எதிர்வரும் செப்ரெம்பர் மாதத்துக்குள் அதனை நேர் மறை மட்டத்துக்கு கொண்டு வருமாறு அமைச்சர்களிடம் தெரிவித்தார்.

பொதுஜன பெரமுனவின் தலைவர்கள் மக்கள் மத்தியில் சென்று அரசாங்கத்தின் இந்த வேலைத்திட்டம் குறித்து மக்களுக்கு தெரியப்படுத்த வேண்டும் என்பதுடன், கிராமத்துக்கு சென்று எந்தவொரு தேர்தலையும் எதிர்கொள்வதற்கான பின்னணியை தயார் செய்யுமாறும் ஜனாதிபதி அவர்களிடம் வேண்டுகோள் விடுத்துள்ளார். (அ)


# ரயில் விபத்தில் இறந்தோருக்கு ஜனாதிபதி இரங்கல் செய்தி!

கொழும்பு, ஜுன் 05

இந்தியாவின் கிழக்கு ஒடிசா மாநிலத்தில் ரயில்கள் மோதி விபத்துக்கு உள்ளானமை தொடர்பில் கேள்வியுற்று மிகுந்த கவலை அடைந்ததாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இரங்கல் தெரிவித்துள்ளார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க இந்திய பிரதமர் நரேந்திர மோடிக்கு அனுப்பியுள்ள அனுதாப செய்தியில், துயரமான இந்த தருணத்தில் அயல் நாட்டவர்கள் என்ற வகையில் இலங்கை அரசாங்கமும் மக்களும் இந்தியாவுடன் கைகோத்து நிற்போம் எனவும் உறுதியளித்துள்ளார்.

பாதிக்கப்பட்டவர்களின் குடும்பத்தினருக்கு ஆழ்ந்த அனுதாபங்களை தெரிவிக்கும் அதே



நேரம் காயமடைந்தவர்கள் விரைவில் குணமடைய பிரார்த்திக்கிறோம். எதிர்பாராத விதமாக விபத்துக்கு முகம்கொடுத்துள்ள இந்திய அரசாங்கத்துக்கு வலிமையும் தைரியமும் கிட்ட வேண்டும் என்று பிரார்த்திப்பதாகவும் ஜனாதிபதி தனது விசேட செய்தியில் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

# நாட்டில் 35 வீதத்தினருக்கு உயர் இரத்த அழுத்த நோய்

## - உணவில் உப்பின் அளவு உயர்வே காரணம் -

கொழும்பு, ஜுன் 05

நாட்டில் 20 வயதுக்கும் மேற்பட்டவர்களில் 35 வீத மானோருக்கு உயர் இரத்த அழுத்தம் ஏற்பட்டுள்ளமை அண்மைய ஆய்வுகளில் கண்டறியப்பட்டதாக சுகாதாரத் துறை தெரிவித்துள்ளது.

இதற்கு உணவில் சேர்க்கப்படும் உப்பின் அளவு அதிகரித்துள்ளமையே காரணம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

2021, 2022ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வுகளின் முடிவுகளில் இந்தத் தகவல் கிடைத்துள்ளதாக சுகாதார அமைச்சின் தொற்றா நோய் பிரிவின் பிரதிப் பணிப்பாளர் நாயகம் மருத்துவர் சம்பிக விக்ரமசூரிய தெரிவித்துள்ளார்.

உணவில் சேர்க்கும் உப்பின் அளவு அதிகரித்துள்ளமையே இதற்குப் பிரதான காரணமாகும் என்பது கண்டறியப்பட்டுள்ளது.

நபர் ஒருவர், நாளொன்றுக்கு, ஒரு மேசைக் கரண்டி அளவான உப்பையே உணவில் சேர்க்க வேண்டும் என்பதே பரிந்துரைக்கப்பட்ட அளவாகும்.

எனினும், இந்த முறை மேற்கொள்ளப்பட்ட ஆய்வில், ஆண்கள் நாளொன்றுக்கு 15.1 கிராம் உப்பையும், பெண்கள், 13.5 கிராம் உப்பையும் உட்கொள்கின்றமை கண்டறியப்பட்டுள்ளது. உப்பை உட்கொள்வது, 3 மடங்கு அதிகரித்துள்ளது.

இதேநேரம், உளவியல் தாக்கம், சிறுநீரக நோய்த் தாக்கம் உள்ளிட்ட காரணங்களும், உயர் இரத்த அழுத்தத்துக்கு காரணமாகும். எனினும், உயர் இரத்த அழுத்தம், இவ்வாறாக மிகவும் அதிகளவில் ஏற்படுவதற்கு, உப்பு அதிகளவில் உட்கொள்ளப்படுகின்றமையே காரணமாகும்.

எனவே, பொதுமக்கள் உணவில் சேர்க்கும் உப்பின் அளவைக் குறைப்பதன் மூலம், உயர் இரத்த அழுத்தத்தைக் குறைக்க முடியும் - என்றும் மருத்துவர் மேலும் தெரிவித்தார். (ஐ)

# தென்மேற்கு பருவப் பெயர்ச்சி இன்னும் சில நாட்களில் ஆரம்பம்!

கொழும்பு, ஜுன் 05

நாடு முழுவதும் அடுத்த சில நாட்களில் தென்மேற்கு பருவப் பெயர்ச்சி நிலைமை படிப்படியாக ஆரம்பிக்கும் என வளிமண்டலவியல் திணைக்களம் தெரிவித்துள்ளது.

மேல், சப்ரகமுவ, மத்திய மற்றும் தென் மாகாணங்களில் அவ்வப்போது மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக் கூடிய சாத்தியம் காணப்படுகின்றது.

சப்ரகமுவ மாகாணத்திலும் காலி, மாத்தறை மற்றும் களுத்துறை மாவட்டங்களிலும் சில இடங்களில் 100 மில்லிமீற்றர் அளவான பலத்த மழை வீழ்ச்சி எதிர்பார்க்கப்படுகின்றது.

வடமேல் மாகாணத்தில் அதிகளவு மழை பெய்யும் என எதிர்பார்க்கப்படுகிறது. ஊவா மற்றும் கிழக்கு மாகாணங்களில் சில இடங்களில் மாலை அல்லது இரவு வேளைகளில் மழை அல்லது இடியுடன் கூடிய மழை பெய்யக்கூடிய சாத்தியம் உள்ளது.

நாடு முழுவதும் அவ்வப்போது மணித்தியாலத்துக்கு 40-45 கிலோ மீற்றர் வரையான வேகத்தில் பலத்த காற்று வீசக்கூடும் என எதிர்பார்க்கப்படுகின்றது.

இடியுடன் கூடிய மழை பெய்யும் வேளைகளில் அப்பிரதேசங்களில் தற்காலிகமாக பலத்த காற்றும் வீசக்கூடும். மின்னல் தாக்கங்களினால் ஏற்படக்கூடிய பாதிப்புகளை குறைக்கத் தேவையான முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு பொதுமக்களுக்கு வளிமண்டலவியல் திணைக்களம் அறிவித்துள்ளது.

# பொசன் பண்டிகையை ஒட்டி 37 ஆயிரம் தானசாலைகள்

கொழும்பு, ஜுன் 05

பொசன் பண்டிகையை ஒட்டி நாடு முழுவதும் சுமார் 37 ஆயிரம் பெரிய மற்றும் சிறிய தானசாலைகள் நடத்தப்பட்டன என்று விவசாய அமைச்சர் மகிந்த அமரவீர தெரிவித்துள்ளார்.

முன்னதாக நாடு முழுவதும் 12 மணிநேர மின் தடை காணப்பட்டதால் தானசாலை நிகழ்வுகளை நடத்த முடியவில்லை என ரன்ன அநுராதபுரம் - சம்புத்தலோகவில் நடைபெற்ற பொசன் கண்காட்சியைக் காண வந்த போது அமைச்சர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் இருளில் மூழ்கியிருந்த காலம் அது.

நாட்டின் நிலையை கருத்தில் கொள்ளும்போது, 3 வருடங்களுக்கு பின்னர் அரசாங்கத்தால் இந்த வருடம் பொசன் தினத்தைக் கொண்டாட முடிந்துள்ளது. அதிர்ஷ்டவசமாக ஓராண்டு குறுகிய காலத்துக்குள் அந்த நிலைமையைத் தவிர்க்க முடிந்தது.

நாடு முழுவதும் இவ்வருடம் 17 ஆயிரத்து 180 பதிவுசெய்யப்பட்ட பெரிய மற்றும் 20 ஆயிரத்



துக்கும் அதிகமான சிறியளவிலான தானசாலைகள் நடைபெற்றன. பொருளாதார நெருக்கடியிலுள்ள ஒரு நாட்டில் இத்தனை தானசாலைகள் பகிர்ந்தளிக்கப்படுவது ஆச்சரியமானது - என்றும் அவர் தெரிவித்தார். (ஐ)

# தான சாலையில் கத்திக்குத்து இளைஞர் ஒருவர் உயிரிழப்பு!

கொழும்பு, ஜுன் 05

பொசன் நிகழ்வுக்காக அமைக்கப்பட்ட தான சாலையில் இடம்பெற்ற கத்திக்குத்தில் இளைஞர் ஒருவர் உயிரிழந்தார்.

இரத்தினபுரி எஹலியகொட, பன்னில பிரதேசத்தில் நேற்று முன்தினம் சனிக்கிழமை மாலை இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த நபரின் குடும்பத்தினரால் ஒழுங்கு செய்யப்பட்டிருந்த சூப் தான சாலைக்கு அருகாமையில் குறித்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

உயிரிழந்த நபரின் பணப்பையிலிருந்த பணம் தொலைந்து போனதையடுத்து அவருக்கும் கொலை சம்பவத்துடன் தொடர்புடையவர் எனக் கூறப்படும் சந்தேக நபருக்குமிடையில் வாக்குவாதம் ஏற்பட்டது. இதையடுத்தே கத்திக்குத்து இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

குறித்த கொலைச்சம்பவத்துடன் தொடர்புடைய சந்தேக நபர் பொலிஸாரால் இனங்காணப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை பொலிஸார் தொடர்ந்து வருகின்றனர்.

## மத...

பாதிக்கப்பட்டு தற்போது முன்னோக்கி நகர்கின்ற இன்றைய சூழ் நிலையில், மத நல்லிணக் கத்தை சீர்குலைத்து இனங்களுக்கு இடையில் மோதல்களை ஏற்படுத்தி, நாட்டை மீண்டும் அழி வுப் பாதைக்கு கொண்டுசெல்லும் வகையில் சில குழுக்கள் திட்டமிட்டு செயல்படுகின்ற என்று அந்த புலனாய்வு தகவல்கள் சுட்டிக்காட்டியுள்ளன.

இவ்வாறானதொரு நிலையிலேயே ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, படைகளின் பிரதானிகளை சந்தித்து கலந்துரையாடினார். பாதுகாப்பு அமைச்சில் நடந்த சந்திப்பிலேயே ஜனாதிபதி மேற்கண்டவாறு தெரிவித்தார்.

மத நல்லிணக்கத்துக்கு கெடுதல் செய்யும் நபர்கள் அல்லது குழுக்களுக்கு எதிராகக் கடுமையான நடவடிக்கைகள் எடுக்கப்பட வேண்டும். அவ்வாறான குழுக்களுக்கு இடமளிக்காது பொலிஸார் மற்றும் முப்படையினரும் செயல்பட வேண்டும். நாட்டின் அனைத்து படைப் பிரிவுகளும் ஒன்றிணைந்து மத நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் குழுக்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க வேண்டும்.

மறுபுறம், மத மற்றும் இன நல்லிணக்கத்தை பாதுகாப்பதற்கான தேசிய நடவடிக்கைகளுக்கும் ஒத்துழைப்புகளை வழங்க வேண்டும். மத நல்லிணக்கத்துக்கு எதிராக செயல்படும் நபர்கள் குறித்து கண்காணிக்கவும் நடவடிக்கை எடுக்கவும் 2015ஆம் ஆண்டில் விசேட பொலிஸ் பிரிவு ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. ஆனால், இன்று அந்த பிரிவு இல்லை. எனவே, அதனை மீள ஆரம்பிக்க ஏற்கனவே பணிப்பரை விடுத்துள்ளேன்.

பொலிஸார் மாத்திரமல்ல, முப்படையினரையும் இணைத்து வலுவான ஒரு பிரிவை உருவாக்க வேண்டும். நாட்டில் மத நல்லிணக்கத்துக்கு எதிராக செயல்படும் குழுக்களின் பின்னால் யார் உள்ளனர் என்பதை விரைவில் கண்டறிய நடவடிக்கை எடுங்கள். அப்போதுதான் இந்த பிரச்னைக்கு நிலையான தீர்வு கிடைக்கும் என்றும் ஜனாதிபதி கூறினார். (ஐ)

## இராணுவத்தை...

ருடன் இணைந்து பணியாற்றுதல், ஆயுதப் படைகளுக்கு மூலோ பாய வழிகாட்டுதலை வழங்குவதில் உதவுதல் உள்ளிட்ட எதிர்கால செயல்பாடுகள் தொடர்பில் பாதுகாப்பு உத்திகளை வகுக்க வேண்டும் என்பனவும் அடங்குகின்றன.

அத்துடன், ஆயுதப் படைகளின் ஒருங்கிணைந்த கூட்டுப் பயிற்சிக்கான கொள்கைகளை உருவாக்குதல் மற்றும் ஆயுதப் படைகளின் அமைதிகாக்கும் நடவடிக்கைகளுக்கான கொள்கைகளை வகுத்தல் என்பனவும் குறித்த செயல்பாடுகளில் உள்வாங்கப்படவுள்ளன.

பாதுகாப்பு படைகளின் பிரதானி என்பது ஆயுதப்படைகளில் மிக முக்கியமான மற்றும் மிக உயர்ந்த நியமனமாகும். ஆயுதப் படைகளின் தலைமைத் தளபதியாக இருக்கும் ஜனாதிபதி, இந்த பதவிக்காக இராணுவம், கடற்படை அல்லது விமானப்படை ஆகியவற்றில் ஒருவரை நியமிக்கும் அதிகாரத்தையும் பெற்றுள்ளார் - என்று கொழும்பு ஆங்கில நாளிதழ் ஒன்று தெரிவித்துள்ளது. (ஐ)

## 45 கோடி...

படையில், புள்ளிவிபரங்களுடன் தயாரிக்கப்பட்ட இருதரப்பு திட்ட வரைபு உலக வங்கி பிரதிநிதிகளிடம் கையளிக்கப்பட்டது. ஆனால், பல்வேறு நிபந்தனைகளுடன் உலக வங்கியின் பிரதிநிதிகள் பேச்சுகளை தொடர்ந்தனர்.

இவ்வாறு நீண்ட கலந்துரையாடல்களின் பின்னர் நிபந்தனைகள் சிலவற்றை இலகுவாக்கி 45 கோடி டொலர் நிதி உதவிக்கு உலக வங்கி ஒப்புதல் அளித்துள்ளது. இந்த நிதி உதவி வருட இறுதிக்குள் கிடைக்கும் என ஜனாதிபதி அலுவலக பிரதானி சாகல ரத்நாயக்க தெரிவித்தார். (ஐ)

## 25 கோடி...

தொழில்நுட்ப ஒத்துழைப்புகளை வழங்குவது குறித்து கலந்துரையாடியுள்ளனர்.

விவசாயத்துறை மற்றும் அதன் உற்பத்திகளின் தரத்தை மேம்படுத்தல், போசாக்குத் தன்மையை அதிகரித்தல் போன்ற விடயங்களில் நவீன தொழில்நுட்பத்தை உட்புகுத்தலுக்கு தேவைக்கு அமைய, மென்பொருளை அறிமுகம் செய்யவும் பில் கேட்ஸ் மன்றம் தீர்மானித்துள்ளது. இதற்கமைவான ஆரம்பக்கட்ட பேச்சுகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுடன் முன்னெடுத்திருந்தனர்.

இந்த திட்டமானது 25 கோடி டொலர்களில் முன்னெடுக்கப்படவுள்ளது. விவசாயத்துறையின் தகவல் சேகரிப்பு, அரிசி மற்றும் ஏனைய விவசாய உற்பத்திகளின் போசாக்குத் தன்மையை அதிகரித்தல் என்பன இத்திட்டத்தின் நோக்கமாக உள்ளது.

இதேபோன்று சமூக பாதுகாப்புத் திட்டங்களை தொழில்நுட்பமயமாக்குவதற்கு பேச்சுகள் முன்னெடுக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும், இலங்கைக்காக உருவாக்கப்படும் மைக்ரோசொப்டின் மென்பொருள்கள் விவசாயம், சமூக பாதுகாப்பு, நிதி கட்டமைப்பு மற்றும் காலநிலை மாற்றம் போன்ற துறைகளை உள்ளடக்கியது என பில் கேட்ஸ் நற்பணி மன்றம் தெரிவித்துள்ளது.

இந்த திட்டத்தை ஜனாதிபதி பணிமனை ஊடாக முன்னெடுக்க பில் கேட்ஸ் நற்பணி மன்றம் கேட்டுள்ளது. இதற்கு தேவையான ஒத்துழைப்புகளை வழங்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செயலாளர் சமன் ஏகநாயக்கவுக்கு ஆலோசனைகள் வழங்கப்பட்டுள்ளது - என்றும் அறிய வருகிறது. (ஐ)

## 600...

டுள்ளது.

1990ஆம் ஆண்டில் மட் டக்களப்பு - அம் பாறை மாவட்டங்களில் சரணடைந்த 600 பொலிஸாரை திருக்கோயில் காட்டுப் பகுதியில் வைத்து விடுத லைப் புலிகள் சுட்டுக் கொன்றனர் என்று கூறப்படுகின்றது. இந்தச் சம்ப வத்துக்கு கருணாவே தலைமை தாங்கினார் என்று குற்றஞ்சாட்டப்பட்டது.

600 பொலிஸாரை கருணா கொலை செய்தார் என்று அந்தச் சம்பவம் நிகழ்ந்தபோது திருக்கோவில் முகாமில் இருந்த சிறப்பு அதிரடிப்படையை சேர்ந்த ஜனித் சமில என்பவர் ஜெனிவா மனித உரிமைகள் பேரவையில் முறைப்பாடு செய்திருந்தார்.

இந்த நிலையிலேயே, 1990 ஜூன் 11 அன்று நடந்த இந்தக் கொலை குறித்து எந்த விசாரணையும் நடத்தப்படவில்லையென குறிப்பிட்டு, அரசாங்கம் ஸ்தாபிக்கவுள்ள புதிய ஆணைக்குழுவில் முறையிடவுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

திருக்கோயில் முகாமிலிருந்த 2 பொலிஸ் உத்தியோகத்தர்களே உயிர் தப்பினர் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ஐ)

## ரூ. 452...

வின் விலை 181 ரூபாயால் குறைக்கப்பட்டு 1 ஆயிரத்து 281 ரூபாயாகவும், 2.3 கிலோ கிராம் லிட்ரோ எரிவாயு வின் விலை 83 ரூபாய் குறைக்கப்பட்டு 598 ரூபாயாகவும் நிர்ணயிக்கப்பட்டுள்ளது.

அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட விலை சூத்திரத்தின் அடிப்படையில் விலை குறைக்கப்பட்டுள்ளதாக லிட்ரோ எரிவாயு நிறுவனத்தின் தலைவர் முதித பீரிஸ் தெரிவித்துள்ளார்.

உலக சந்தையில் எரிவாயுவின் விலை வீழ்ச்சி மற்றும் அமெரிக்க டொலருக்கு நிகரான இலங்கை ரூபாயின்ன் பெறுமதி அதிகரிப்பு உள்ளிட்ட பல காரணிகள் விலை குறைப்புக்கு காரணம் என்று பீரிஸ் குறிப்பிட்டுள்ளார்.

முன்னதாக, 300 ரூபாய்வரை எரிவாயுவின் விலை குறைவடையும் என்று அறிவிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ஐ)

# மக்கள் தேர்தலை விரும்பவில்லை என்று கூறுவது சிரிப்புக்குரியது!

கொழும்பு, ஜூன் 05

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேர்தலை நடாத்தினால் தான் தோற்றுவிடுவேன் என நம்பி தேர்தலை நிறுத்திவிட்டு, மக்கள் தேர்தலை விரும்பவில்லை எனக் கூறும் கருத்து சிரிப்புக்கு உரியது என்று தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பங்காளி கட்சியான ஈ. பி. ஆர். எல். எவ். தலைவர் சுரேஷ் க. பிறேமச்சந்திரன் தெரிவித்தார். யாழில் அவர் நேற்று நடத்திய செய்தியாளர் சந்திப்பிலேயே இதனைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தேசிய பட்டியலூடாக பாராளுமன்றத்திற்குள் வந்தார். பின் மக்களின் எதிர்ப்பால் மகிந்த ராஜபக்ஷ ஆகியோர் பதவியை இராஜிநாமா செய்த பின்னர் தெரிந்தோ தெரியாமலோ பிரதமராக வந்தார்.

மக்களின் எதிர்ப்பால் கோட்டபாய நாட்டை விட்டு ஓடியதும் சட்ட வழிமுறையின் பிரகாரம் ஜனாதிபதியாக வந்தார். ஆனால், மக்களால் தெரிவுசெய்யப்படாத ஜனாதிபதியாகக் காணப்படும் நிலையில் மக்களும் அரசியல் கட்சிகளும் தொழில்சங்கங்களும் இவரை ஏற்றுக்கொள்ளாத நிலையில்தான் போராட்டங்களில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர் தேல்தலை நடாத்தி தனது பலத்தை வெளிப்படுத்துவதன் மூலமே மக்கள் மத்தியில் இந்தக் கருத்துக்கள் இல்லாமல் போகும்.

பொருளாதார ரீதியாக நாட்டை ரணில் விக்கிரமசிங்க முன்னேற்றி விட்டார் எனக் கூறப்பட்டாலும் இந்த நாட்டினுடைய 53 பில்லியன் டொலர் கடன்கள் இதுவரை திருப்பச் செலுத்தப்படாது கால அவகாசம் கோரப்பட்டுள்ளது. கால அவகாசத்தை இந்தியா, சீனா உட்பட உலக நாடுகள் பல வழங்கியுள்ளன.

நாட்டின் டொலர் பற்றாக்குறையால் நூற்றுக்கணக்கான பொருட்களின் இறக்குமதி தடை செய்யப்பட்டுள்ளது. தற்போதும் வாகன இறக்குமதி முழுமையாக தடை செய்யப்பட்டுள்ளது.

நாட்டில் கடன் வாங்குவதை தவிர வெளிநாட்டு முதலீடுகளின் வருகை அதிகரித்ததாக தெரியவில்லை. புலம்பெயர் தமிழ் மக்களின் உதவிகள், முதலீடுகளை எதிர்பார்கின்றாரே தவிர வேறு வழிகளில் முதலீடுகளைக் கொண்டு வருவதற்கான நடவடிக்கை எவையும் அவரிடம் காணப்படவில்லை.

ஜனாதிபதி ஆற்றிய உரையில் இலங்கை மக்கள் தேர்தலில் அக்கறை காட்டவில்லையெனவும் நாட்டின் பொருளாதாரத்தைக் கட்டியெழுப்புவதிலே அக்கறையாக உள்ளார்கள் என்ற கோணத்தில் கருத்து வெளியிட்டுள்ளார்.

கடந்த ஓரிரு மாதத்துக்கு முன் உள்ளூராட்சி மன்றத் தேர்தலில் போட்டியிடுவதற்காக வேலைகளில் விடுப்பெடுத்து பணத்தைச் செலவு செய்து கட்டுப்பணத்தைக் கட்டியிருந்தார்கள். உள்ளூராட்சி சபைகள் ஜனநாயக முறையில் கொண்டு நடாத்தப்பட வேண்டும் என்ற முறையில் தேர்தலில் போட்டியிட தயாராகவிருந்தார்கள்.

தனக்கும் தேர்தல் நிறுத்தத்துக்கும் எவ்வித சம்பந்தமுமில்லை என ஜனாதிபதி கூறியிருப்பினும் அவர்தான் பொறுப்பு என்ற நிலவரம் காணப்பட்டது. தேர்தலை நடத்தினால் தான் தோற்றுவிடுவேன் என நம்பி தேர்தலை நிறுத்திவிட்டு, மக்கள் தேர்தலை விரும்பவில்லை எனக் கூறும் கருத்து சிரிப்புக்கு உரியது- என்றார். (ஐ)

# “ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் குழு எவரையும் கட்டுப்படுத்தாது!”

கொழும்பு, ஜூன் 05

உத்தேச ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டமூலம் ஊடகவியலாளர்களை கட்டுப்படுத்துவதற்காக கொண்டுவரப்படவில்லையென ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு தொடர்பான அமைச்சரவை உபகுழுவின் உறுப்பினர் அமைச்சர் மனுஷ நாணயக்கார தெரிவித்துள்ளார்.

காலியில் நேற்று இடம்பெற்ற ஊடக சந்திப்பின்போதே அவர் இதனை தெரிவித்தார். இதன்போது அவர் மேலும் தெரிவிக்கையில்,

இது ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டமூலம். இது ஊடகவியலாளர்களை கட்டுப்படுத்தவோ அல்லது யாரையாவதோ கட்டுப்படுத்துவதற்காக கொண்டுவரப்பட்ட ஒன்றல்ல. ஆனால் நாட்டில் செய்திகளை ஒளிபரப்பும்போதும், செய்திகளை அறிக்கையிடும்போது, தகவல்களை வாங்கும்போதும் அதற்கான பொறுப்பு இருக்கவேண்டும்.

இப்பொழுது அதிகமான சந்தர்ப்பங்களில் தகவல்கள் எவ்வித பொறுப்பும் இல்லாமல் ஒளிபரப்பாகின்றது. இறுதியில் பொறுப்பு கூறுவதற்கு எவரும் இல்லை.

இதனால், சிறந்த ஊடக செயற்பாட்டுக்காக ஒளிபரப்பு ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு சட்டம் கொண்டுவரப்படுகிறது. இதில் ஊடக நிறுவனங்களை கட்டுப்படுத்துவதற்கான எவ்வித நோக்கமும் இல்லை - என்றார்.

## முடிந்தால்...

நன்குணர்ந்து வைத்துள்ளனர். பாராமன்றத்தில் உள்ள அரசியல் கட்சிகளுக்கு நாட்டின் அதிகாரத்தில் 50 வீதம் கூட இல்லை என ஜனாதிபதி எவ்வாறு கூறுவார்?

உண்மை நிலவரத்தை புரிந்து கொள்வதற்கு உடனடியாக தேர்தலை நடத்த வேண்டும். அதற்கு தயங்க வேண்டாம்.

அடுத்த வருடம் நடத்தப்படவுள்ள ஜனாதிபதி தேர்தலை முடியுமானால் இவ்வருடம் நடத்துமாறு ஜனாதிபதிக்கு சவால் விடுக்கிறேன். இதற்குத் தேவையான சட்ட ஏற்பாடுகளுக்கு ஐக்கிய மக்கள் சக்தி ஒத்துழைப்பை நல்கும் - என்றார். (ஐ)

## உண்மை,...

இதனையடுத்து, அனைத்துக் கட்சிகளையும் உள்ளடக்கிய கூட்டமொன்றை கூட்டுவதோடு, குறித்த சட்டமூலம் தொடர்பாக பரந்துபட்ட கலந்துரையாடல்களை நடத்தி அனைவரின் கருத்துகளையும் உள்ளீர்க்கவுள்ளோம்.

தொடர்ந்து பூரணமான சட்டமூலம் ஒன்றை பாராளுமன்றத்துக்கு கொண்டு வந்து நிறைவேற்றுவதற்கு எதிர்பார்த்துள்ளோம். இந்தச் செயல்பாட்டில் அனைத்து தரப்பினரையும் உள்ளீர்க்க வேண்டும் என்பதில் உறுதியாக உள்ளோம் - என்றார்.

## கஜேந்திர...

இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவிலும் முறையிட்டுள்ளார்.

இந்த நிலையிலேயே, ஜனாதிபதி, பிரதமர் மற்றும் மகிந்த ராஜபக்ஷ ஆகியோரிடம் இந்த விடயம் தொடர்பாக கேள்வி எழுப்பப்பட்டது.

இதற்கு பதிலளித்த அவர்கள் தமக்கு எதுவுமே தெரியாது என்று பதில் கூறியுள்ளனர். (ஐ)

ஈழநாடு
Eelanadu

# திருடர்களை நம்பியிருப்பவரால் திருடர்களை பிடிக்க முடியாது!

## எதிர்க்கட்சி தலைவர் சஜித்



கொழும்பு, ஜூன் 05

**தற்போதிருக்கும் ஜனாதிபதிக்கு திருடர்களைப் பிடிக்க முடியாவிட்டாலும் அந்தத் திறன் ஐக்கிய மக்கள் சக்திக்கு இருப்பதாக எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள்ளார்.**

நாடு வங்குரோத்தடையக் காரணம் நாட்டு மக்களல்ல. நாட்டு வளங்களை திருடிய ராஜபக்ஷ ஆட்சிதான். திருடர்களை நம்பி வாழும் தலைவரால் திருடர்களை பிடிக்க முடியாது எனவும் எதிர்க் கட்சி தலைவர் கூறியுள்ளார்.

தரகுப் பணம் மற்றும் ஊழலில் இருந்து திருடப்பட்ட பணத்தை மீட்பது மற்றும் பண்டோரா பத்திரங்களில் குறிப்பிடப்பட்டுள்ள கோடிக்கணக்கான டொலர்களை மீளப் பெறுதல் மாத்திரமே நாடு இருக்கும் திவால்நிலையிலிருந்து மீள்வதற்கு எளிதான வழி.

அந்தப் பணத்தை நாட்டுக்கு பெற்றுக் கொடுப்பதே நாட்டுக்கு தேவை எனவும், ஆனால் நாட்டை அழித்த ராஜபக்ஷ குடும்பத்தையும் அவர்களின் விசுவாசமான எம்.பிக்களையும் பாதுகாப்பதே திருடர்களால் உருவாக்கப்பட்ட ஜனாதிபதியின் அடிப்படையாக வுள்ளது -என்று நேற்றுமுன்தினம் நடந்த மக்கள் சந்திப்பில் எதிர்க் கட்சி தலைவர் மேலும் தெரிவித்தார். (ஐ)



## சூரிய சக்தியில் இயங்கும் இயந்திரபடகு வல்வெட்டித்துறையில் வெள்ளோட்டம்!

வடமராட்சி, ஜூன் 05

சூரிய சக்தியில் இயங்கும் இயந்திரபடகு வல்வெட்டித்துறைக் கடற்கரையில் வெள்ளோட்டம் விடப்பட்டது.

சூரிய சக்தியிலிருந்து மின்சாரத்தை தயாரித்து 13 குதிரைவலுக் கொண்ட அதி உச்ச வேக இயந்திரத்தைக் கொண்டு இயங்கும் மீன்பிடிப்படகு வல்வெட்டித் துறையில் நேற்று ஞாயிற்றுக்கிழமை வெள்ளோட்டம் விடப்பட்டது.

அவுஸ்திரேலியாவில் வசிக்கும் மணிவாசகம் என்பவரின் முயற்சியால் முன்னெடுக்கப்பட்ட இந்த நடவடிக்கையானது கடற்றொழிலாளர்களுக்கு பெரும் நம்பிக்கையை ஏற்படுத்தியுள்ளது.

எரிபொருட்களின் தேவை இல்லாமல் வெறுமனே சூரிய சக்தியில் இருந்து கிடைக்கும் மின்சாரத்தை கொண்டு இயங்க வைக்கின்ற மோட்டார் இயந்திரம் மீன்பிடித் தேவைகளுக்கு மிகவும் பயனுள்ள விடயமாக எதிர்காலத்தில் அமையும். எதிர்காலத்தில் கடற்றொழிலாளிகளின் தேவைகள் இந்த இயந்திரங்களால் பூர்த்தி செய்யப்படுமாயின், பெரும் எரிபொருள் பிரச்னைகளில் இருந்து அவர்களை மீள வைக்கும் என மீனவர்கள் தெரிவித்தனர். (ஐ)

# வறுமைப்பட்ட மக்களின் வளர்ச்சிக்கு ரூ. 20 ஆயிரம் கோடி ஒதுக்கப்படும்!

கொழும்பு, ஜூன் 05

வறுமையில் வாடும் மக்களின் வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்த அடுத்த ஆண்டுக்கான, வரவு - செலவு திட்டத்தில் சமூக நலன் திட்டங்களுக்காக கூடுதலாக 20 ஆயிரம் கோடி ரூபாய் நிதி ஒதுக்கப்படும் என திறைசேரி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்காக இந்த ஆண்டுக்குள் உலக வங்கியிடமிருந்து, 70 கோடி அமெரிக்க டொலர் அளவிலான இரண்டு பெரிய கடன் உதவிகள் எதிர்பார்க்கப்படுகிறது. உலக வங்கியின் நிதியானது, குறைந்த வருமானம் பெறும் 30 இலட்சம் குடும்பங்களுக்கு எதிர்வரும் மூன்று ஆண்டுகளுக்கு நிதி யுதவி அளித்தல் உள்ளிட்ட நலத் திட்டங்களுக்காக வழங்கப்பட உள்ளதாக திறைசேரி அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

## குடிவரவு திணைக்களத்தில் ஆணின் சடலம் மீட்கப்பட்டது

கொழும்பு, ஜூன் 05

கொழும்பு - பத்தரமுல்லையில் உள்ள குடிவரவு திணைக்கள வளாகத்தில் உள்ள நாற்காலியில் சடலமொன்று மீட்கப்பட்டது.

களனி, வேதமுல்லை பகுதியைச் சேர்ந்த 73 வயதுடைய கருணாரத்ன ஆராச்சிகே தர்மசேன என்பவரின் சடலமே இவ்வாறு மீட்கப்பட்டது என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குடிவரவு - குடியகல்வு திணைக்களத்தின் துப்புரவு பிரிவில் பணிபுரிந்தவர் என தெரியவந்துள்ளது.

அதே வளாகத்தின் மேல் தளத்தில் துப்புரவுத் துறைக்காக ஒதுக்கப்பட்ட இடத்தில் வசித்து வந்த நிலையில் சடலமாக மீட்கப்பட்டார்.

மீட்கப்பட்ட சடலம் கொழும்பு தேசிய மருத்துவமனையில் பிரேத பரிசோதனைக்காக ஒப்படைக்கப்பட்டுள்ளது.

## அதிசிறப்பு பிரமுகர் அந்தஸ்து அலி சப்ரி எம்.பிக்கு இரத்தாகும்?

கொழும்பு, ஜூன் 05

விமான நிலையத்தின் விசேட பார்வையாளர் முனையம் ஊடாக அதிகளவு தங்கம் மற்றும் கைபேசிகளை கடத்திய பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமின் அதிசிறப்பு பிரமுகர் அந்தஸ்தை இரத்து செய்வதற்கு தேவையான சட்ட நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன பாராளுமன்ற அதிகாரிகளுக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

பாராளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் தங்கம் மற்றும் கைபேசிகளை சட்டவிரோதமாக நாட்டிற்கு கொண்டுவர முயன்றதில் சிக்கி அபராதம் செலுத்தி விடுவிக்கப்பட்டதையடுத்து, அவருக்கு எதிராக உடனடியாக நடவடிக்கை எடுக்குமாறு பாராளுமன்றத்தில் கட்சித் தலைவர்கள் சபாநாயகரிடம் கோரிக்கை விடுத்துள்ளனர்.

இந்த விடயங்களை ஆராய்ந்த சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன, சிறப்புரிமைகளை இரத்து செய்வது தொடர்பான சட்டங்கள் மற்றும் அறிவுறுத்தல்களை பெற்று சிவில் விமான சேவைகள் திணைக்களத்தின் கருத்தை பெற்று தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு உரிய அதிகாரிகளுக்கு ஆலோசனை வழங்கியதாக தெரிவிக்கப்படுகிறது.

அந்த நடவடிக்கையை மேற்கொள்வதற்கு தேவையான பணிப்புரைகளை தாம் வழங்கியுள்ளதாக சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன ஊடகங்களுக்கு தெரிவித்துள்ளார். (ஐ)

## 40 ஆயிரத்தை கடந்தது டெங்கு நோயாளர் தொகை!

கொழும்பு, ஜூன் 05

2023இல் பதிவாகியுள்ள டெங்கு நோயாளர்களின் எண்ணிக்கை 40ஆயிரத்தை தாண்டியுள்ளது, இது டெங்கு நோயின் தீவிர நிலையை எடுத்துக் காட்டுகிறது.

தொற்றுநோயியல் பிரிவின்படி, ஜூன் 03 வரை, 2023 இல் இதுவரை மொத்தம் 40 ஆயிரத்து 206 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இதில் அதிகபட்சமாக கம்பஹா மாவட்டத்தில் 8 ஆயிரத்து 970 நோயாளர்கள் பதிவாகியுள்ளனர்.

மேலும், மேல் மாகாணத்தில் 20 ஆயிரத்துக்கும் மேற்பட்ட நோயாளர்கள் பதிவாகியுள்ளனர். இது மாகாணங்களின் அடிப்படையில் மிக அதிகமாகும்.

மேலும், டெங்கு நோய் பரவும் இடங்கள் அதிகமாக காணப்படும் 60 அதிக ஆபத்துள்ள மருத்துவ அதிகாரி பிரிவுகளை தொற்றுநோயியல் பிரிவு அடையாளம் கண்டுள்ளது.

மே மாதத்தில் 9 ஆயிரத்து 290 டெங்கு நோயாளர்கள் பதிவு செய்யப்பட்டுள்ளனர். இது ஜனவரி 2023 முதல் அதிக மாதாந்த நோயாளர்களை பதிவு செய்துள்ளது. இதனிடையே, ஜனவரி 2023 முதல் மொத்தம் 25 இறப்புகள் பதிவாகியுள்ளன.

இந்நிலையில், டெங்கு காய்ச்சலை தடுக்கும் வகையில், சுற்றுப்புறத்தை தூய்மையாக வைத்திருக்கவும் நுளம்பு உற்பத்தியாகும் இடங்களை அழிக்குமாறும் சுகாதாரத்துறை அதிகாரிகள் பொதுமக்களிடம் கோரிக்கை விடுத்துள்ளனர். (ஐ)

# கட்டடத்துக்குள் புகுந்து தாக்குதல் 23 சந்தேகநபர்கள் கைதாகினர்!

கொழும்பு, ஜூன் 05

கொழும்பு நவம் மாவத்தையில் உள்ள கிறீன் லங்கா கட்டடத்துக்குள் நுழைந்து அதன் பல மாடிகளில் உள்ள சொத்துகளுக்கு சேதம் விளைவித்த குற்றச்சாட்டில் 23 பேர் கைது செய்யப்பட்டனர் என்று பொலிஸார் தெரிவித்தனர்.

கட்டடத்தின் உரிமை தொடர்பில் தகராறு ஏற்பட்டதால் சந்தேக நபர்கள் சொத்துகளை சேதப்படுத்தினர் என்று பொலிஸ் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர் நிஹால் தல்துவ தெரிவித்தார்.

இந்த கட்டடத்தில் இரண்டு தூதரகங்களும் அமைந்துள்ளதாக கூறப்படுகிறது. கிறீன் லங்கா கட்டடத்தின் உரிமை தொடர்பாக சர்ச்சை ஏற்பட்டுள்ளதாகவும், வர்த்தக உயர் நீதிமன்றத்தில் வழக்கு நடந்து வருகிறது என்றும் பொலிஸ் பேச்சாளர் தெரிவித்தார்.

இந்தக் கட்டிடம் கிறீன் லங்கா நிறுவனத்துக்கு சொந்தமான அடமானம் வைக்கப்பட்ட கட்டடமாகும். கட்டடத்தின் பல மாடிகள் மூடப்பட்ட நிலையில், குழு பலவந்தமாக நுழைந்து சொத்துக்களுக்கு சேதம் விளைவித்துள்ளது என்று கூறப்படுகின்றது.

இந்த கட்டடத்தில் சர்ச்சைக்குரிய போதகர் ஜெரோம் பெர்னாண்டோ ஞாயிற்றுக்கிழமைகளில் போதனை நடத்தும் மண்டபமும் உள்ளது. எவ்வாறாயினும், விசாரணைகளின்படி, பெர்னாண்டோவின் மண்டபத்தை இலக்கு வைத்து குழு கட்டடத்துக்குள் நுழையவில்லை. கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் கடவத்தை, ஹோமாகம, பத்தரமுல்லை, தெமட்டகொடை, கொம்பைத்தீவு மற்றும் கொள்ளுப் பிட்டி ஆகிய பகுதிகளைச் சேர்ந்த வர்களாவர்.

கைதானவர்களை நீதிமன்றில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (ஐ)

## படகு விபத்தில் ஒருவர் பலி; பருத்தித்துறையில் சம்பவம்

வடமராட்சி, ஜூன் 05

பருத்தித்துறையில் இடம்பெற்ற படகு விபத்தில் படுகாயமடைந்தவர் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

மன்னாரைச் சேர்ந்த 44 வயதுடைய நபரே இவ்வாறு உயிரிழந்தார் என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

படகு ஒன்று வேகமாக கரை திரும்பிக்கொண்டிருந்த போது கரையோரமாக சென்றுகொண்டிருந்த நபர் மீது மோதியுள்ளது.

இதன்போது படுகாயமடைந்தவர் கடந்த வெள்ளிக்கிழமை பருத்தித்துறை ஆதார மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார். இந்நிலையில், அவர் நேற்று முன்தினம் சிகிச்சை பலனின்றி உயிரிழந்தார்.

படகை செலுத்திய நபர் கைது செய்யப்பட்டுள்ளதுடன், மேலதிக விசாரணைகளை பருத்தித்துறை பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ஐ)

இப்பத்திரிகை 707, ஆஸ்பத்திரி வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியில் அமைந்துள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் நிறுவனத்தினரால் 05.06.2023 அன்று ஏ9 வீதி, நாவற்குழியில் உள்ள ஈழநாடு பிறைவேற் லிமிட்டெட் அச்சகத்தில் அச்சிட்டு வெளியிடப்பட்டது.